REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 மே 12 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 111 | Friday 12, May, 2023 | 20பக்கங்கள் | 50/-

## நடுத்தர வர்க்கத்தினருக்கு தொடர்மாடி வீட்டு திட்டம்

### நிட்டம்புவ, வெலிசரையில் நிர்மாணப் பணிகள்



நடுத்தர வர்க்கத்தினருக்காக அடுத்த மூன்று வருடங்களில் 25 பில்லியன் ரூபா பெறுமதியான ஐந்து வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமென, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். 06

## நடைமுறை செயற்பாடுகளுக்கு அமைய காணி கட்டளைச் சட்டத்தில் திருத்தம்

### உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு காணிக் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இப்பணிகளை துரிதப்படுத்துவதற்கு தகுதியான குழுவொன்றை நியமிக்குமாறும் ஜனாதிபதி அறிவுரை வழங்கினார்.

காணி முகாமைத்துவம் தொடர்பிலான நிறுவனங்களின் சட்ட ஏற்பாடுகளில் திருத்தம் மேற்கொள்வது மற்றும் புதிய சரத்துக்களை திருத்துவது, உள்ளீடு செய்வது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் (10) நடைபெற்ற கலந்துரையாடலிலே, 06

## வேட்பாளர்களான அரச ஊழியரது பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

### தேர்தல் ஆணைக்குழுவுடன் மீண்டும் பேச்சு நடத்தப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வேட்பாளர்களான அரசாங்க ஊழியர்களின் சம்பளம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. எஞ்சிய சிறுசிறு பிரச்சினைகள் தொடர்பில் மீண்டும் தேர்தல் ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தி தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென, பிரதமர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைச்சரவைக்கு சென்று அவர்களுக்கான சம்பளத்தை பெற்றுக் கொடுக்க நாம்,நடவடிக்கை எடுத்தோம்.இந்த விடயத்தில் நாம் தேர்தல் சட்டத்தை முழுமையாக நிராகரித்து செயற்பட முடியாது. பொது நிர்வாக அமைச்சர் என்ற வகையில் அதனை 06

## ரயில்வே துறைக்கு மேலும் 3,000 பேர் புதிதாக இணைப்பா?

### தேர்தல் ஆணைக்குழுவுடன் மீண்டும் பேச்சு நடத்தப்படும்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ரயில்வே திணைக்களத்துக்கு 3,000 பேர் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுபவையும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதென ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பல்வகை செயலணிக்கு அரசாங்கத்தால் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த 3,000 பேரே, நிரந்தர நியமனம் வழங்குவதற்காக ரயில்வே திணைக்களத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டதாகவும் அமைச்சர் சபையில் தெளிவுபடுத்தினார்.

அரசாங்க நிறுவனங்கள் மூடப்பட்டு அங்கிருந்து ஊழியர்கள் அகற்றப்படுவதாக தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம், 06

### அண்மைக்காலமாக மன்னாரை உலுக்கிய சிறுவர் கடத்தல் சம்பவம்

# தலைமன்னாரில் 02 சிறுமிகளை கடத்தும் முயற்சிகள் முறியடிப்பு

### கிராம மக்கள் இருவரை மடக்கிப்பிடித்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைப்பு



**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார், தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமப் பகுதியில் வர்த்தக பொருட்களை ஏற்றி வந்த வாகனமொன்று, சிறுவர் இருவருக்கு இனிப்பு பொருட்களை வழங்கி கடத்த மேற்கொண்ட முயற்சி பொது மக்களின் உதவியுடன் முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்று மதியமளவில் வர்த்தக பொருட்களை வாகனத்தில் விற்பனை செய்ய வந்த வாகனமொன்றின் சாரதி, வீதி வழியாக சென்ற இரு சிறுமிகளுக்கு இனிப்புப் பொருட்களை வழங்கியுள்ளார். இனிப்புக்களை கொடுத்து வாகனத்தில் கடத்த முற்பட்ட சமயம், இரு சிறுமிகளும் தப்பிச் சென்று கிராமத்தவர்களுக்கு தெரிவித்தனர்.

இதையடுத்து கிராம மக்கள் இணைந்து வாகனத்தையும் வாகன சாரதி மற்றும் உதவியாளர்களையும் மடக்கிப் பிடித்துள்ளனர். சிறுமிகள் தப்பியோடியபோதும் அவர்களுக்கு பின்னால் வாகனத்தில் வந்தவர்கள் துரத்திக் கொண்டு வந்ததாகவும் வாகனத்தினுள் வெளிநாட்டு நபர் ஒருவர் இருந்ததாகவும் பாதிக்கப்பட்ட சிறுமி ஒருவர் தெரிவித்துள்ளார்

**வர்த்தக பொருட்களை விற்பனை செய்ய வந்த வாகனத்தில் சிறுமிகளுக்கு இனிப்பு வழங்க கபட முயற்சி**

வாகனத்தை சோதித்த போது வெளிநாட்டவர் அதற்குள் இருக்கவில்லை. வாகனத்திலிருந்த இரு சந்தேக நபர்களையும் பொது மக்கள் மடக்கிப் பிடித்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இதையடுத்து தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம்

## பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நேற்று 04 ஆம் கட்ட நட்ட ஈடு



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நான்காம் கட்ட நட்டஈடாக சுமார் 160.5 கோடி ரூபாவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு நேற்று (11) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வாவின் பங்கேற்புடனும் அமைச்சில் நடைபெற்றது. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தத்தால், 06



யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில்

### சர்வதேச விசாரணைகள் குறித்து ஜனாதிபதியிடம் TNA வலியுறுத்தும்

03

கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டாலும்

## மக்களது வைப்புத் தொகை, வங்கி முறைக்கு பாதுகாப்பு



சர்வதேச கடன் வழங்குநர்களுடனான கலந்துரையாடலின் பின்னர், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுமென இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டாலும் பொதுமக்களின் வைப்புத்தொகை மற்றும் வங்கி முறைமை பாதுகாக்கப்படுமென, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க உறுதியளித்துள்ளார். பொருளாதாரத்தின் நிலை, சவால்கள் மற்றும் முன்னோக்கு மத்திய வங்கியின் 2022 வருடாந்த அறிக்கை என்ற தலைப்பில் உரையாற்றிய போதே, அவர் இதனை தெரிவித்துள்ளார். 06

## சொத்துக்கள், உயிர்களை இழக்கும் சட்டவிரோத பயணங்களை தவிர்க்கவும்

### ஆட்கடத்தல்காரர் குறித்து பொலிஸார் எச்சரிக்கை



வெளிநாடு செல்வதாக கூறி சட்ட விரோத நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யும் ஆட்கடத்தல்காரர்களிடம் அகப்பட வேண்டாமென்றும் பணம் மற்றும் தங்களது சொத்துக்களை வீணாக செலவு செய்து உயிராபத்துக்கு உள்ளாக வேண்டாமெனவும் பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுள்ளனர்.

கடல்மார்க்கமாக ஆழ்கடல் வள்ளங்களில் ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொண்டு செல்லும் இலங்கையருக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் பொலிஸ் தலைமையகம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. கடந்த சில வருடங்களாக 06

## தென்கிழக்கு வங்கக் கடலில் பலத்த காற்றழுத்த தாழ்வு

### 24 மணி நேரத்துக்கு சிவப்பு எச்சரிக்கை

தென்கிழக்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த அறிக்கை நேற்று (11) காலை 11 மணிக்கு வெளியிடப்பட்டது. அடுத்த 24 மணிநேரத்துக்கு இந்த அறிவிப்பு அமுலிலிருக்குமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வங்கக்கடலில் செல்லும் ஆழ்கடல் மீன்பிடி படகுகள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

"மோகா" சூறாவளி காலை 5.30 மணியளவில் 11.2N மற்றும் 88.1Eக்கு அருகில் மையம் கொண்டிருந்தது. அது வடக்கு வடமேற்கு திசையில் நகரக்கூடிய சாத்தியம் 06

## பத்து வருட புதிய GSP+ E.U விளக்கமளிக்கிறது

### வெளிவிவகார அமைச்சில் சந்திப்புக்கு ஏற்பாடு



2024 – 2033 இல் ஏற்றுக்கொள்ளப்படவுள்ள ஐரோப்பிய ஒன்றிய பொதுமைப்படுத்தப்பட்ட விருப்பத்தேர்வுகள் ஒழுங்குமுறையின் புதிய சுழற்சி குறித்து, ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் இலங்கைக்கு விளக்கமளிக்கவுள்ளனர். புதியஜ.எஸ்பி பிளஸ் ஒழுங்குமுறை சுழற்சி 2024 ஜனவரி 01 முதல் அடுத்த 10 ஆண்டுகளுக்கு நடைமுறைக்கு வரும். வெளிவிவகார அமைச்சில் இன்று நடைபெறவுள்ள இலங்கைக்கும் ஐரோப்பிய 06

கைது செய்தமை சட்டவிரோதம்

## இம்ரான்கானை விடுவிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு



நீதிமன்றத்தில் வைத்து இம்ரான்கானை கைது செய்தது சட்டவிரோதம் என கண்டனம் தெரிவித்துள்ள பாகிஸ்தான் உயர் நீதிமன்றம், அவரை விடுதலை 06

## 195 நாடுகளின் தலைநகரங்களை 04 நிமிடத்தில் காண்பித்து சாதனை

### நுவரெலியாவில் 4 வயது தமிழ் சிறுவன் பெருமிதம்



**ஹற்றன் சுழற்சி நிருபர்**

உலக நாடுகளில் 195 நாடுகளின் தலைநகரங்களை 04 நிமிடங்களில் உலக வரை படத்தில் தொட்டு காண்பித்து சாதனை 06

## வெடுக்குநாறி மலை சிவன் ஆலய பூசகர் உட்பட இருவர் கைது

### வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர் விடுவிப்பு



**வவுனியா விசேட நிருபர்**

பொலிஸரால் கைது செய்யப்பட்ட வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசகர் மற்றும் ஆலய நிர்வாக உறுப்பினர் வவுனியா 06

## அரகலய பின்னணியில் வெளிநாட்டு குழு ஒன்று

### விரைவில் தகவலை அம்பலப்படுத்துவேன்



அரகலயவுக்கு ஆதரவளித்த வெளிநாட்டுக் குழு எது என்பது குறித்து விரைவில் மேலதிக விவரங்கள் வெளிவருமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

“நாங்கள் மட்டுமல்ல, அரகலயவோடு இருந்த மக்கள் விடுதலை முன்னணியும் வெளிநாட்டு குழுவொன்றுக்கு அரகலயாவில் பங்கு இருப்பதாக இப்போது கூறுகின்றது. எங்களுடன் இருந்த சக பாராளுமன்ற உறுப்பினர் கூட இந்த விபரங்களை 06

## அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபடுவோரை பாதுகாக்கவும்

### பாராளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை



நாட்டில் ஆபத்தான சூழ்நிலை உருவாகி வருவதாகவும், அமைதி வழிப்போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு உடனடியாக பாதுகாப்பு வழங்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் (11) நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு கோரினார்.இங்கு உரையாற்றிய 06

## வடக்கு, கிழக்கு முஸ்லிம்களது பிர்சினைகளிலும் அரசு கவனம்

### ஜனாதிபதியின் செயலாளர் ஹரீஸ் எம்.பியிடம் தெரிவிப்பு



**மாளிகைக்காடு நிருபர்**

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்குமிடையே நடைபெறும் தொடர் பேச்சுவார்த்தை போன்று, முஸ்லிம் மற்றும் மலையக மக்கள் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

முஸ்லிம் கட்சிகள் ,முஸ்லிம்களின் பிரதிநிதிகளுடனும் 06

## இலங்கை மாணவனுக்கு USA இல் அதி கௌரவம்

### சிறந்த சட்டக் கல்லூரி மாணவனாக தெரிவிப்பு



அமெரிக்காவின் தென் மேற்கு சட்டக்கல்லூரியில் கல்வி கற்கும் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த டிலான் மஹேன் குணரத்ன 2023 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிறந்த சட்டக் கல்லூரி மாணவருக்கான விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

'தென்மேற்கு சட்டக் கல்லூரியின்' பட்டமளிப்பு விழா எதிர்வரும் (19) 06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

















லேக்ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு லேக்ஹவுஸ் வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஷம்ஸ் பாஹிமின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிறுவன ஆசிரியப் பீடப் பணிப்பாளர் சிசிரி பரணதந்திரி, நிதிப் பணிப்பாளர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், பொது முகாமையாளர் எஸ். ஜே. கொத்தலாவல, ஜம்இய்யதுஷ் ஷபாப் பணிப்பாளர் மௌலவி தாஸிம், சிலுமின, தினமின மற்றும் தினகரன் பிரதம ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், மஜ்லிஸ் இன்னாள் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள் உட்பட அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது முன்னாள் மஜ்லிஸ் உறுப்பினர்களான சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.எம். நிலாம் மற்றும் எம்.ஏ.எம் பஸான், ஏ.எம்.எம். ரம்ஸான் உட்பட அறுவர் கௌரவிக்கப்பட்டார்கள். இந்த நிகழ்வில் உலமா சபை ஊடாக இணைப்பாளர் பஹத் பாயிஸ் மௌலவி விசேட பயான் நிகழ்த்தியதோடு மஜ்லிஸ் தலைவர், ஆசிரிய பீடப் பணிப்பாளர், மஜ்லிஸ் செயலாளர் எஸ்.எம்.ரிஸ்வான் ஆகியோரும் உரையாற்றினர்.













## சீனன்கோட்டை பெருகமலை ஸாக்கிரீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் கௌரவிப்பு நிகழ்வு

பேருவளை சீனன்கோட்டை பெருகமலை ஸாக்கிரீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் புனித ரமழான் மாதத்தில் ஹிஸ்பு மஜ்லிஸில் பங்கு பற்றிய ஆண் சிறார்கள், வீடுகளில் ரமழான் மாதம் 30 ஜுஸ்உ குர்ஆனை ஓதி தமாம் செய்த பெண் சிறார்களை கௌரவித்து பரிசளிக்கும் வைபவம் பள்ளிவாசலில் நடைபெற்றது.

பள்ளிவாசல் பிரதம இமாம் மௌலவி எஸ். எச்.எம் இம்ரான் (ஹுமைதி) தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் மேற்படி பள்ளி நிர்வாக சபைத் தலைவர் அர்ஷத் ஸவாஹிர், செயலாளர் மக்கி மன்சூர் (நளீமீ) பொருளாளர் அஹ்ஸன் பௌஸி, இரத்தினக்கல் வர்த்தகர்களான பெரோஸ் ஹாஜியார், அக்ரம் பாரூக் மற்றும் ஸாகிரீன் குர்ஆன் மத்ரஸா மேற்பார்வை குழுத் தலைவர் பீ.எம் முக்தார், உறுப்பினர்களான ஸயான் முனீர், இஷாக் ஹாஜியார், இர்பாத் நிஸாம் மற்றும் சுபியான் பாரூக் இபாம் ஹலீல் மொஹம்மத் பஹ்மி உட்பட பலரும் பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர். மாணவர்கள் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகள் என்ற அடிப்படையில் இரு ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸுகள் நடைபெற்றன.

மௌலவி எஸ்.எச்.எம் இம்ரான் (ஹுமைதி), மௌலவி எம்.என்.எம் லியாஉல் ஹக் (பாரி) ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் இம் மஜ்லிஸ் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பேருவளை பீ.எம்.முக்தார்

# ஆசியாவின் ஒற்றுமைக்கு இடையூறு விளைவிக்கும் செயற்பாடுகளுக்கு இலங்கை ஆதரவளிக்காது

ஆசியாவின் ஒற்றுமைக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் இலங்கை ஆதரவளிக்காதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஆசிய பூகோள அரசியலுக்கும் பசுபிக் பிராந்திய அரசியலுக்கும் இடையில் பல வேறுபாடுகள் காணப்படு கின்றன. இந்த வேறுபாடுகளை நாம் உணர்ந்து சமாதான ம், ஸ்திரத்தன்மையை பேணுவதற்குச் செயற்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அடுத்த இரண்டு தசாப்தங்களில் வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இலங்கையை முன்னேற்றுவதற்கு அணிசேரா கொள்கை, பஞ்சசீலம் மற்றும் ஆசியக் கொள்கைகளைப் பயன்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.



ஆசியாவின் முதலாவது மாநாட்டு மண்டபமான பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு (10) மாலை ஒழுங்குசெய்யப்பட்டிருந்த வைபவத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் வரலாறு குறித்து எழுதப்பட்ட நூல் ஒன்றும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 25 ரூபா பெறுமதியான நினைவு முத்திரையொன்றும் வெளியிடப்பட்டது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

அணிசேரா கொள்கை, பஞ்சசீலம், ஆசியக் கொள்கை ஆகியவற்றைப் பயன்படுத்தி இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும். அந்த பொதுவான விடயம் இன்றும் செல்லுபடியாகும். இந்த பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் ஆசியாவின் ஒருமைப்பாடு தொடர்பில் சுட்டிக்காட்டக்கூடிய சிறந்த உதாரணம் என்றே கூற வேண்டும்.

இதனை நாம் அன்பளிப்பாக பெற்றோம். ஆசியாவின் ஒற்றுமையை நாம் தொடர்ந்து பேண வேண்டும். உலக வல்லரசுப் போட்டியில் இந்து சமுத்திர நாடுகளிடையே மட்டுமே ஒற்றுமையை குழப்ப முடியவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

உலக வல்லரசாக மாற வேண்டும் என்ற இலட்சியத்துடன் சில குழுக்கள், பசுபிக் சமுத்திர நாடுகளுக்கிடையேயான ஒற்றுமையை குலைத்து அவற்றுக்கிடையில் மோதல் நிலைமையை ஏற்படுத்தியுள்ளன. அந்த நிலைமை இந்து சமுத்திரத்திற்குள்

06

# அமைச்சர் அலி சப்ரி சுவீடன் பயணமானார்



ஸ்டாக்ஹோமில் நாளை (13) நடைபெறும் இரண்டாவது இந்தோபசிபிக் அமைச்சர்கள் அமர்வில் கலந்துகொள்வதற்காக, வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நேற்றுக் காலை சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமுக்கு பயணமானார்.

இந்த அமர்வு, ஐரோப்பிய ஒன்றிய சபையின் சுவீடிஷ் தலைமைத்துவத்தின் கீழ், ஐரோப்பிய வெளியுறவு செயற்பாட்டு சேவையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அமர்வில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தோபசிபிக் பிராந்தியத்தின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அமர்வுக்கு சுவீடன் வெளியுறவு அமைச்சர் டோபியாஸ் பில்ஸ்ட்ரோம் மற்றும் வெளியுறவு, பாதுகாப்புக் கொள்கைக்கான உயர் பிரதிநிதி, ஐரோப்பிய ஆணையத்தின் துணைத் தலைவர் ஜோசப் பொரெல் ஆகியோர் இணைத் தலைமை தாங்குகின்றனர்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமர்வின் மூன்று வட்ட மேசை மாநாட்டின் ஒன்றான 'மேலும் நிலையான செழுமையை ஒன்றாகக் கட்டியெழுப்புதல்' என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறும் 01ஆவது வட்டமேசை கலந்துரையாடலுக்கு இணைத் தலைமை தாங்கவுள்ளார்.

ஆஸ்திரியா, டென்மார்க், பின்லாந்து, லாட்வியா, நெதர்லாந்து, ருமேனியா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் உட்பட, பல நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் அமைச்சர் அலி சப்ரி இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்துவார்.

சுவீடனிலுள்ள வர்த்தக சமூகத்தை குறிப்பாக தலைமை நிர்வாக அதிகாரிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறையின் மூத்த அதிகாரிகளையும் அமைச்சர் சந்திக்க உள்ளார்.

# இலங்கை–சவுதி நட்புறவுத் தலைவராக சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட்

**ஏ,ஜீ,எம், தௌபீக்**

சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் இலங்கை சவுதி அரேபிய நட்புறவு சங்கத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.இப்பதவிக்கு இவர் தெரிவாகியுள்ளமை இரு தரப்பு உறவுகளை மேம்படுத்தும் என நம்பப்படுகிறது. சவூதி அரேபியாவின் மன்னர் பஹட் பல்கலைக்கழகத்தில் பெற்றோலியம் மற்றும் கனிய வளப்பட்டம் பெற்ற இவர், அந்நாட்டுடன் நெருக்கமான உறவிலுள்ளவர். சவூதிஅரேபியாவின் முன்னணி எரிபொருள் நிறுவனங்களின் தலைவர்களாக உள்ளவர்கள் சிலர், அமைச்சரின் கற்கைக்கால நண்பர்களாவர்.



06

## யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில்

# சர்வதேச விசாரணைகள் குறித்து ஜனாதிபதியிடம் TNA வலியுறுத்தும்

## பாராளுன்ற உரையில் சுமந்திரன் MP தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

யுத்தத்தில் (2009) பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேச பொறிமுறையிலான விசாரணையை கோருவதால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுவார்த்தையில் சர்வதேச நீதிமன்ற விசாரணையை மிக அழுத்தமாக வலியுறுத்தப் போவதாக கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ சுமந்திரன் எம். பி பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.



2009 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கு இதுவரை நீதி வழங்கப்படவில்லை என்பதை சபையில் வலியுறுத்திய அவர், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையிலும் பல பிரச்சினைகளுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

சர்வதேச பொறிமுறையிலான விசாரணையை மறுக்கும் அரசாங்கத்தின் நோக்கம்,

06


சுகாதார அமைச்சு

தேசிய இரத்த ஊடுமாற்று சேவை

**விலைமனுக்களுக்கான அழைத்தல்**

**தேசிய இரத்த நிலையத்தில் 2023 ஆம் ஆண்டிற்கு Mitel 3300 IP Phones PABX முறைமையின் சேவை மற்றும் பராமரிப்பு**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு 2023 ஆம் வருடத்திற்காக PABX இன் சேவை மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்தை, 555/ 5D ஆம் இலக்கத்திலுள்ள தேசிய இரத்த ஊடுமாற்று சேவையின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியில் சேர்க்கப்படாதவராகவும் கம்பனியானது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்தை, 555/5D ஆம் இலக்கத்திலுள்ள தேசிய இரத்த ஊடுமாற்று சேவையின் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
5. 2023.05.23 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்தை, 555/5D ஆம் இலக்கத்திலுள்ள தேசிய இரத்த ஊடுமாற்று சேவையின் கணக்காளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. விலைமனுவானது 49 நாட்கள் கால எல்லைக்கும் ஒருவருட ஒப்பந்தக் காலமானது ஆரம்பிக்கும் உண்மையான திகதியிலிருந்து செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் 2023.05.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் இலங்கையிலுள்ள புகழ்வாய்ந்த வங்கியொன்றினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனியொன்றினால் வழங்கப்பட்டதும் 10,000 ரூபா பெறுமதியானதும் 77 நாட்கள் காலஎல்லைக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும்.
8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய இரத்த ஊடுமாற்று சேவை,**
**இல. 555/5D, எல்விட்டிகல மாவத்தை,**
**நாராஹேன்பிட்ட, கொழும்பு-05.**
**தொலைபேசி : 0112369931-4**
**தொலைநகல் : 0112369939**



# இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

**2023.03.09 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-**

1. பிரசித்த நொத்தாரிசு ஆர்.எம்.கே.எஸ்.எம். ரத்நாயக்க அத்தாட்சிப்படுத்திய 2012.09.17ஆம் திகதிய 2468ஆம் இலக்க ஈட்டுமுறி, 2013.01.07ஆம் திகதிய 2553ஆம் இலக்க ஈட்டுமுறி, 2014.04.10ஆம் திகதிய 2956ஆம் இலக்க ஈட்டுமுறி, 2015.10.16ஆம் திகதிய 3683ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட கடன் 'A' மீது 2022.10.11 வரையான வட்டியும் முதலுமாக 11,312,151.02 ரூபாயும் (பதினொரு மில்லியன் முந்நூற்றுப் பன்னிரண்டாயிரத்து நூற்று ஐம்பத்தொரு ரூபாய் இரண்டு சதம்) அத்துடன் 2022.10.12ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பதினான்கு வீதப்படி (14%) 7,967,841.64 ரூபாய் (ஏழு மில்லியன் தொள்ளாயிரத்து அறுபத்தேழாயிரத்து எண்ணூற்று நாற்பத்தொரு ரூபாய் அறுபத்து நான்கு சதம்) மீதான மேலதிக வட்டியும் மறுசீரமைக்கப்பட்ட கடன் 'B' மீது 2022.10.11 வரையான வட்டியும் முதலுமாக 3,314,183.18 ரூபாயும் (மூன்று மில்லியன் முந்நூற்றுப் பதினான்காயிரத்து நூற்று எண்பத்து மூன்று ரூபாய் பதினெட்டுச் சதம்) அத்துடன் 2022.10.12ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு நான்கு வீதப்படி (4%) 2,900,000.00 (இரண்டு மில்லியன் தொள்ளாயிரமாயிரம் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் இல.231, குருணாகல் வீதி, பண்ணல என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ஹெட்டி பத்திரண்ணஹேலாகே அசோக குணவர்தன மற்றும் திருமதி. தண்ணங்கொடகமகே யனித்தா ஷர்மிளா (ஸ்மாட் டிசைன் சென்ரர் நிறுவனத்தின் பங்காளர்கள்) ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. பிரசித்த நொத்தாரிசு ஆர்.எம்.கே.எஸ்.எம். ரத்நாயக்க அத்தாட்சிப்படுத்திய 2012.09.17ஆம் திகதிய 2468ஆம் இலக்க ஈட்டுமுறி, 2013.01.07ஆம் திகதிய 2553ஆம் இலக்க ஈட்டுமுறி, 2014.04.10ஆம் திகதிய 2956ஆம் இலக்க ஈட்டுமுறி, 2015.10.16ஆம் திகதிய 3683ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட கடன் 'A' மீதான மேற்குறித்த 11,312,151.02 ரூபாயையும் (பதினொரு மில்லியன் முந்நூற்றுப் பன்னிரண்டாயிரத்து நூற்று ஐம்பத்தொரு ரூபாய் இரண்டு சதம்) மறுசீரமைக்கப்பட்ட கடன் 'B' மீதான மேற்குறித்த 7,967,841.64 ரூபாயையும் (ஏழு மில்லியன் தொள்ளாயிரத்து அறுபத்தேழாயிரத்து எண்ணூற்று நாற்பத்தொரு ரூபாய் அறுபத்து நான்கு சதம்) அத்துடன் 2022.10.12ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்ற முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பண்ணல கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற் குறிப்பிடப்பட்ட அட்டவணை

1. 'கட்டுவேவத்த' என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் சுமணரத்ன பி. அபேகோன் தயாரித்த 2011.11.29ஆம் திகதிய 10786ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், மெதப்பற்று கோரளை மேற்கு கட்டுகம்பொல ஹத்பற்று பண்ணல நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட பண்ணல கிராம சேவகர் பிரிவிலுள்ள பண்ணலவில் அமைந்துள்ளது. வடக்கில் முன்னர் பொடிசிங்ஞோவுக்கும் தற்போது கே.ஏ.ஏ. பொடி அப்புஹாமியின் வாரிசுகளுக்கும் சொந்தமான காணியையும் கிழக்கில் முன்னர் பொடிசிங்ஞோவுக்கும் தற்போது கே.ஏ.ஏ. பொடி அப்புஹாமியின் வாரிசுகளுக்கும் சொந்தமான காணிப் பாகம் ஒன்றையும் (தற்போது தனியார் பாதை) தெற்கில் பிரதான வீதியையும் மேற்கில் பாதையையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் ஒரு ரூட் எட்டு தசம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0 ரூ.1 பே.8.5) பரப்பளவைக் கொண்டுள்ளது. இக்காணியானது குளியாப்பிட்டிய காணிப் பதிவகத்தில் பக்கம் L 282/163இல் பதிவுசெய்யப்பட்டு பின்னர் பக்கம் E 02/25 இற்கு மாற்றப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

திரு. பி.டி.எஸ்.ஆர். ஜயசிறி
முகாமையாளர்
இலங்கை வங்கி
பண்ணல

உரிமைப் பத்திரங்களைப் பரிசோதிப்பதற்கு ஏலதாரர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதோடு முகாமையாளர், இலங்கை வங்கி, பண்ணல கிளை எனும் தொலைபேசி இலக்கத்தின் 037 224 6060 ஊடாக மேற்குறிப்பிட்ட சொத்துக்களுடன் தொடர்புடைய பிற ஆவணங்கள் தொடர்பாகவும் அறிந்து கொள்ளலாம்.

1975 BOC
A (lka) Fitch மதிப்பீடு AAA- Brand Finance மதிப்பீடு
இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர்

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 29ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 21

### குறள் தரும் சிந்தனை



பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்

அறிவில்லாதவனிடம் நெருங்கிய நட்புக் கொண்டிருப்பதை விட, அறிவுடைய ஒருவரிடம் பகை கொண்டிருப்பது கோடி மடங்கு மேலானதாகும்.

# டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுக்கு மக்களின் பங்களிப்பு அவசியம்

நாட்டில் டெங்கு நோய்க்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கையில் கடந்த சில தினங்களாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இது பல மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளன.

'இவ்வருடத்தின் முதல் நான்கு மாதங்களிலும் இந்நோய்க்கு உள்ளானவர்களாக முப்பதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் அரை வாசிக்கும் மேற்பட்டவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்' என்று குறிப்பிட்டுள்ள சுகாதார அமைச்சின் டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு, 'இம்முறை கம்பஹா மாவட்டத்தில் தான் அதிகளவானோர் டெங்கு நோயாளர்களாகப் பதிவாகியுள்ளனர்' என்றுள்ளது.

இந்நோய் காரணமாக இவ்வருடத்தின் முதல் ஐந்து மாதங்களிலும் பலர் உயிரிழந்துமுள்ளனர். டெங்கானது மழைக் காலநிலையுடன் சேர்த்து தீவிரமடைவது வழமை. என்றாலும் தற்போது நாட்டில் மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருவதால் இந்நோய் மேலும் தீவிரமடைவதற்கும் பரவலடைவதற்கும் அதிக சாத்தியங்கள் காணப்படுகின்றன. இது குறித்து மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனாலும் இவ்வருடத்தின் முதல் ஐந்து மாதங்களிலும் தற்போது தான் மழைக் காலநிலை ஆரம்பமாகியுள்ளது. ஆனாலும் அதற்கு முன்னரே நாட்டின் சில மாவட்டங்களில் இந்நோய்க்கு உள்ளானவர்களாகப் பதிவானவர்களின் எண்ணிக்கையில் வழமைக்கு மாறான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. இது கடந்த காலத்தை விடவும் வித்தியாசமான போக்காக நோக்கப்படுகிறது. இது தொடர்பிலும் மருத்துவர்கள் விஷேட கவனம் செலுத்தியுள்ளனர். இது குறித்து ஶ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நடாத்தப்பட்டுள்ள ஆய்வில் டெங்கு வைரஸில் பிறழ்வு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகப் பேராசிரியர் சந்திம ஜீவேந்திர குறிப்பிட்டுள்ளார். அதேநேரம் கொழும்பு மாநகரப் பிரதேசத்தில் 12 வருடங்களுக்கு பின்னர் டெங்கின் மூன்றாம் வகை வைரஸின் பரவுதல் அவதானிக்கப்பட்டுள்ளதாக மாநகரின் பிரதம மருத்துவ அதிகாரி டொக்டர் ருவன் விஜேமுனி சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான சூழலில் நாட்டில் தற்போது மழைக் காலநிலை நிலவி வருவதால், டெங்கு நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடிய அச்சுறுத்தல் காணப்படுகிறது. இது குறித்து கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'டெங்கு ஒழிப்புக்கான வேலைத்திட்டங்களைத் துரிமாக முன்னெடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

இந்த அறிவுறுத்தலுக்கு அமைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மாகாண செயலாளர்களுக்கு தேவையான பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

அதேநேரம், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான ஒத்துழைப்பை முப்படை மற்றும் பொலிஸாரிடம் பெற்றுக்கொள்ளவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

டெங்கானது நுளம்புகளால் காவிப் பரப்பப்படும் ஒரு நோயாகும். அதாவது டெங்கு வைரஸைக் காவிப் பரப்பும் நுளம்புகள் மழைநீர் தேங்கும் இடங்களில் முட்டையிட்டு பல்கிப் பெருகும் பண்பைத் தன்னகத்தே கொண்டுள்ளன. அதனால் சுற்றாடலில் காணப்படும் மழைநீர் தேங்கக்கூடிய சிரட்டைகள், உடைந்த மட்பாண்டங்கள், பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்கள் உள்ளிட்ட அனைத்தையும் அவைதமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.

அதனால் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி மழைநீர் தேங்க முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இதனைத் தம் பொறுப்பாகவும் கடமையாகவும் கருத வேண்டிய பொறுப்பு மக்கள் முன்பாக உள்ளது. இதன் ஊடாக மழை நீர் தேங்கக் கூடிய கைவிடப்பட்ட அனைத்து திண்மக் கழிவுப்பொருட்களையும் ஒழுங்குமுறையாக முகாமைத்துவம் செய்து சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக்கொள்ளும் போது டெங்கு வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். அதன் மூலம் இந்நோய் அச்சுறுத்தலைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

அதேநேரம் இந்நோய்க்கு உள்ளாகி இருந்தால் அதனை உரிய பரிசோதனை மூலம் ஆரம்ப கட்டத்திலேயே அடையாளம் கண்டு சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளும் போதும் இந்நோயை முழுமையாக் குணப்படுத்திக் கொள்ளவும் முடியும்.

ஆனாலும் மக்கள் மத்தியில் நுளம்புகளின் பெருக்கம் மற்றும் டெங்கு காய்ச்சல் குறித்து காணப்படும் கவனயீனத்தையும் அசிரத்தையையும் இந்நுளம்புகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதன் விளைவாகவே இந்நோய் அச்சுறுத்தலாக இருந்து கொண்டிருக்கிறது. மக்களின் பங்களிப்பு ஒழுங்குமுறையாகக் கிடைக்கப்பெறுமாயின் இந்நோய் அச்சுறுத்தலை கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என்பதே மருத்துவர்களின் கருத்தாகும்,

ஆகவே டெங்கு கட்டுப்பாட்டின் நிமித்தம் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அது நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும். அதுவே இன்றைய தேவையும் கூட.

editor.tkn@lakehouse.lk

# சமூகத்திற்காக தன் வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்த மகாபுருஷர்

**முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் தேசமான்ய எம்.ஏ. பாக்கீர் மாக்காரின் 106 ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதன் நிமித்தம் இக்கட்டுரை பிரசுரமாகிறது**



இலங்கை மாதா ஈன்றெடுத்த தவப்புதல்வர்கள் பலர். அவர்களில் முக்கியமானதொரு தலைவராகப் போற்றப்படுபவராக மர்ஹூம் தேசமான்ய எம்.ஏ.பாக்கீர் மாக்கார் திகழ்கின்றார். இன, மத, மொழி பேதம் கடந்து பேசப்படும் ஒரு மகத்தான மனிதராகவே அவர் விளங்குகிறார்.

இலங்கையில் முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றப் பிரதேசம் என்று பெயர்பெற்ற பேருவளை மண்ணில் புகழ்பூத்த மருத்துவத்துறை சார்ந்த பரியாரியார் எனும் 'வெதமாத்தயா' எனும் குடும்பத்தில் 1917 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி ஹக்கீம் அலியா மரைக்காயர் முஹம்மத், றாஹிலா உம்மா தம்பதியின் புதல்வராக பிறந்த பாக்கீர் மாக்கார் சின்னவயது முதலே துடிப்பு மிக்கவராகவே காணப்பட்டதால் குடும்பத்தில் அனைவரதும் அன்புக்குப் பாத்திரமானவராகவே காணப்பட்டார். சிறுவயது முதலே ஆன்மீகப் பற்றுமிக்கவராகவும் ஐவேளைத் தொழுகையை நேரம் தவறாமல் தொழுது வருபவராகவும் இருந்துவந்தார்.

ஆரம்பம் முதலே தமிழோடு சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஆற்றலை வளர்த்துக் கொண்ட பாக்கீர் மாக்கார் இளவயது முதலே பேருவளையில் மக்களின் ஆதரவுடன் சமூகப்பணிகளில் ஈடுபடலானார். கொழும்பிலும், பேருவளையிலும் இளைஞர்களுடன் இணைந்து பல்வேறு அமைப்பு ரீதியில் செயற்பட்டுவந்தார். கொழும்பு சாஹிராக் கல்லூரியில் முஸ்லிம் தலைவர் ரி.பி. ஜாயா அதிபராகக் கடமையாற்றிய வேளையில் அவரது மாணவராக இருந்து பெரும் பணியாற்றியவர் இவர். பட்டப்படிப்பை முடித்த பாக்கீர் மாக்கார் சட்டத்தரணியாக வெளியேறி களுத்துறை நீதிமன்றில் சட்டத்தரணியாக சேவை புரிந்த போது தம்மை நாடிவந்த ஏழை மக்களின் வழக்குகளுக்கு பணம் பெறாமல் இலவசமாகவே வாதாடி பிரச்சினைகளை தீர்க்க உதவினார்.

முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றத்தில் அக்கரை காட்டிய பாக்கீர் மாக்கார் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் முஸ்லிம்கள் கற்க வேண்டுமென விழிப்பூட்டினார். இனத்தின் மீது பற்றுடையவராக இருந்த போதிலும் அவர் தேசப்பற்று மிக்கவராகவே இளம்வயது முதல் காணப்பட்டார். சட்டக்கல்லூரி மாணவராக இருந்த காலகட்டத்தில் இரண்டாம் உலக யுத்தம் மூண்டது. பிரித்தானியாவின் குடியேற்றமாக இருந்த இலங்கை, நாட்டைப் பாதுகாக்க பாதுகாப்புப் படையை நிறுவியது. சட்டக்கல்வியை முடக்கிவிட்டு, தேசத்தைக்காக்கும் படையில் இணைந்து நாட்டின் சுதந்திரத்திற்காக அவர் பாடுபட்டார்.

1960ல் அரசியலில் பிரவேசித்த பாக்கீர் மாக்கார் தனது அரசியல் பயணத்தை முஸ்லிம் சமுதாயத்தை முன்னிருத்தி மேற்கொண்டாலும் ஒரு போதும் இன ரீதியான சிந்தனையில் ஈடுபடவில்லை. இன நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான பயணமாகவே அவரது அரசியல் பயணம் அமைந்தது.

சிங்கள மக்களின் மனங்களை வென்றெடுத்த ஒரு தலைவராக அவர் அந்த மக்கள் மனங்களில் இடம்பெற்றார். நாடு இனரீதியாகப் பிளவுபடக் கூடாது என்பதில் அன்னார் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். சகல இன மக்களையும் இணைத்துப் பணிபுரியும் நல்லெண்ணத்தைக் கொண்டிருந்தார்.

தன்னிடம் உதவி நாடி வருபவர்களை இனரீதியில் பார்க்கவில்லை. யார் வந்தாலும் அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அக்கறை காட்டிச் செயற்பட்டார். தான் சபாநாயகராகப் பதவி வகித்த காலப்பகுதியில் சபாநாயகர் இல்லமான மும்தாஸ் மஹால் 24 மணி நேரமும் மக்கள் பணிக்காக திறக்கப்பட்டே இருந்தது. 1978இல் ஐ.தே.க. ஆட்சியில் உயர் பதவியிலிருந்த போது மஹரகம கபூரியா அரபுக் கல்லூரியை தம்வசப்படுத்த கபூரியா குடும்பத்தவர்கள் முயன்ற போது அதனைத் தடுத்து நிறுத்தும் பணியை முன்னெடுத்தார். ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவிடம் தனது நிலைப்பாட்டை வலியுறுத்தினார். கபூரியா தனியார் வசம் போக இடமளிக்க வேண்டாம் எனக் கூறிய அவர், அப்படி நடந்தால் தான் அரசிலிருந்து வெளியேறத் தயங்க மாட்டேன் எனப் பிடிவாதமாக இருந்து அதில் வெற்றியும் கண்டார்.

மேலும் நாடு முழுவதுமுள்ள முஸ்லிம் வாலிபர்களை ஓரணியில் திரட்டுவதற்காக தமது காலத்தை செலவிட்டார். கிராமம் கிராமமாக சென்று இளைஞர்களை ஒன்று திரட்டி அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தை உருவாக்கினார்.

இந்த அணியில் பல்லாயிரம் இளைஞர்களை ஒன்றுதிரட்டி கிராமிய மட்டத்தில் முஸ்லிம் இளைஞர்களை ஒன்றுபடுத்தினார். பின்தங்கிய கிராமங்களிலிருந்து முஸ்லிம் இளைஞர்கள் அணிதிரண்டு கிராமிய அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க பூரண ஒத்துழைப்பை வழங்கினார். கொழும்பு 12 புறக்கோட்டை பிரதான வீதியில் இருந்த அதன் அலுவலகத்தை தலைமைச் செயலகமாக மாற்றியமைத்தார். அங்கு இளைஞர்கள் தினமும் கூடி திட்டங்களை வகுத்துச் செயற்பட்டனர். இளைஞர்களுடன் இணைந்து செயற்படும் போது அவரும் ஒரு இளைஞராகவே செயற்பட்டார். அன்னாரது அன்புப் பிணைப்புக்குள் சகல இளைஞர்களும் சங்கமமாகினார்கள்.

தனது மகன் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரையும் அந்த வழியில் நடக்க அர்ப்பணித்தார். அந்தப் பயணத்தின் அறுவடைகள் தான் என்.எம். அமீன், சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், முஹ்தீன், என்.எம். சஹீத், லுக்மான் சஹாப்தீன், பீ.எம். பாருக், ஏ.எம். வைஸ், எம்.ஐ. உதுமாலெப்பை, இஸ்மத் உட்பட நூற்றுக்கணக்கான இளைஞர் பட்டாளமொன்றை உருவாக்கினார்.

பின்னரான காலகட்டத்தில் கொழும்பிலிருந்து செயற்பட்ட இளைஞர் ஷாம் நவாஸ் துடிப்புமிக்க இளைஞராக காணப்படுகிறார். வாலிப முன்னணியின் உதவிப் பொருளாளராக, இயங்குகிறார். இடைப்பட்ட காலத்தில் தேசிய உதவித் தலைவராகவும் இயங்கினார். இப்படிப் பலர் உச்ச நிலைக்கு வந்துள்ளார்.

மர்ஹூம் பாக்கீர் மாக்காரின் பயணப்பாதையை எழுதுவதாக இருந்தால் பல நூறு பக்கங்கள் எழுதமுடியும். அந்தப் பணியை தனியான குழு அமைத்து வரலாற்றுப் பெட்டகமாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். எமது நாளைய சந்ததியினருக்காக அதனை நாம் செய்தாக வேண்டும்.

இன்று நான் இந்நாட்டின் சிறந்த ஊடகவியலாளராக இருக்கின்றேன் என்றால் அதற்கு வழித்தடம் அமைத்துத் தந்தவர் மர்ஹூம் பாக்கீர் மாக்காரே ஆவார். படித்துவிட்டு வீட்டிலிருந்த என்னை ஊடகத்துறையில் கால்பதிக்கச் செய்தவர் அவர். நான் மட்டுமல்ல இன்று நாட்டின் ஊடகத்துறையில் பெருமளவான முஸ்லிம்கள் இருக்கின்றார்கள் என்றால் அதற்கான வழிகாட்டியாக பாக்கீர் மாக்கார் அவர்களே இருக்கின்றார் என்றால் அது மிகைப்படுத்தும் வார்த்தையல்ல.

அதேநேரம் முஸ்லிம்களுக்கான தனியான தேசிய பத்திரிகையொன்று குறித்து அன்னார் கனவு கண்டார். அக்கனவு இன்னமும் நனவாக்கப்படவில்லை. வாலிப முன்னணியின் ஊடாக அவர் ஆரம்பத்தில் 'உதயம்', 'டவுன்' என்று இரண்டு பத்திரிகைகளை தனது சொந்தச் செலவில் வெளியிட்டார்.

இவ்வாறு நாட்டுக்கும் மக்களுக்கும் அளப்பரிய சேவையாற்றியுள்ள அன்னாருக்காகப் பிரார்த்திப்போம். அன்னாரது பணிகளை இறைவன் அங்கீகரித்து அன்னாருக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் சுவர்க்கத்தை வழங்குவானாக!

கலாபூஷணம் **எம்.ஏ.எம்.நிலாம்...**

# எழுத்தையும், ஊடகத்தையும் உயிராக நேசித்தவர்

**ஊடகவியலாளர் பாக்கியராஜா மோகனதாஸின் ஓராண்டு நினைவுதின அந்தியேட்டிக்கிரியை இன்று. அதன் நிமித்தம் இக்கட்டுரை பிரசுரமாகிறது**

மார்தட்டி போர் புரிந்த மறத்தமிழர் ஆளும் துறைநீலாவணையில் ஆசிரியராகவும், ஊடகவியலாளராகவும், இளம் கலைஞராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்து பொதுமக்களின் குறைகளையும், தேவைகளையும் பேனாமுனையில் அச்சொட்டாக எழுதி பிரச்சினைகளுக்கு தீர்க்கமான பல தீர்வுகளை பெற்றுக்கொடுத்தவரும், தமிழ் மக்களின் கலை, கலாசாரத்தை அடுத்த சந்ததிக்கு பேனாமுனை மூலம் கோர்ப்புச் செய்து சாதித்துகாட்டிய கலை ஆர்வலரும், ஊடகத்தேனீயாக இலக்கிய உலகில் வலம் வந்தவருமான பாக்கியராஜா மோகனதாஸ் தனது 34ஆவது வயதில் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார். அன்னார் காலமாகி ஓராண்டு நிறைவடைந்துள்ளது. அதனையொட்டிய ஓராண்டு நினைவுதின அந்தியேட்டிக்கிரியை இன்று வெள்ளிக்கிழமை (12.5.2023) துறைநீலாவணையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறுகிறது.

பாக்கியராஜா மோகனதாஸ் துறைநீலாவணையில் பாக்கியராஜா, சிவராணி தம்பதியினருக்கு 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 திகதி முதலாவது புதல்வராக அவதரித்தார். தனது ஆரம்பக்கல்வி முதல் உயர்தரம் வரை துறைநீலாவணை மகா வித்தியாலயத்தில் கற்றார். உயர் தரத்தில் சித்தியடைந்த இவர், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவனத்தின் நுண்கலைத்துறைக்கு பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொண்டார். இவரது திறமைகளை அறிந்து கொண்ட விரிவுரையாளர்கள் இவரை எழுத்தாற்றல் மற்றும் பத்திரிகைத்துறையில் ஊக்குவித்தனர். குறிப்பாக கட்டுரைகளை எழுதுவதற்கு அவருக்கு பயிற்சிகளையும் அளித்தனர்.

கற்கையை நிறைவு செய்து வெளியேறிய இவர், தொடர்ந்து பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதுவதில் நின்றுவிடாது படைப்பாளிகளின் வீடு தேடிச்சென்று அவர்களுடன் நேர்காணல்களை மேற்கொண்டு படைப்பாளிகளின் திறமையினை நாட்டில் வெளிவரும் பத்திரிகைகள் ஊடாக வெளிக்கொணர்ந்தார். இவர் தமது எழுத்தாற்றல் திறமையினை சிறப்பான முறையில் முன்னெடுத்து வந்தார்.

இந்நிலையில் கல்வி அமைச்சினால் கோரப்பட்ட தேசிய பாடசாலைகளுக்கான ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த அவர், கமு/சம்மாந்துறை மத்திய கல்லூரியில் ஆசிரியராக இணைந்து கொண்டார். சுமார் 03 வருடங்களை ஆசிரியர் பணியை அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட இவர், சிறந்த கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் மூலம் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டார்.

தினகரன் உட்பட பல பத்திரிகைகளிலும், இணையத்தளங்களிலும் 09 வருடங்கள் ஊடகவியலாளராகப் பணியாற்றியுள்ள இவர் பேனாமுனையில் செய்திகளையும், கலை இலக்கிய கட்டுரைகளையும் நிறையவே எழுதியுள்ளார். அதுமட்டுமல்லாமல் வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களின் தேவைகள், குறைபாடுகளையும் எழுதியுள்ளார். அவற்றின் ஊடாக தீர்க்கமான தீர்வுகள் அவ்வப் பிரச்சினைகளுக்ும் தேவைகளுக்கும் கிடைக்கப்பெற்றுள்ளன. இதன் ஊடாக மக்களின் உள்ளங்கவர்ந்த ஊடகவியலாளரானார் மோகனதாஸ்.



நூற்றுக்கும் மேற்பட்ட படைப்பாளிகளின் ஆக்கங்களையும், அரசியல்வாதிகளின் நேர்காணலையும் மேற்கொண்டுள்ள இவர், அவற்றைப் பத்திரிகைகளில் வெளிக்கொண்டு வந்துள்ளார். இந்நிலையில் சுமார் 73 கலைஞர்களின் படைப்புக்களைத் தொகுத்து 'படைப்பாளிகளின் ஆளுமை' எனும் தலைப்பில் நூலொன்றைத் தொகுத்து 2021 இல் திருகோணமலையில் வெளியீட்டு வைத்தார்.

இவ்வாறு ஊடகத்துறையில் ஊடகத்தேனீயாக அங்கும் இங்கும் பறந்து தமது எழுத்தாற்றல் மூலம் பல படைப்புக்களையும், கலையம்சங்களையும் உலகயறியச் செய்த இவர், ஊடகத்துறையைத் தொழிலாகக் கொள்ளாமல் பணியாக போற்றி வாழ்ந்து காட்டியவராவார். அத்தோடு எழுத்தையும், ஊடகத்தையும் உயிராக நேசித்து வந்தார்.

இவரின் இலக்கியத்திறமை மற்றும் எழுத்துத்திறமைக்கு 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் இளம் கலைஞர் விருது வழங்கி கௌரவித்தமையானது இவருடைய கலை இலக்கியத்திறமைக்கு வழங்கிய கௌரவம் என்றால் அது மிகையாகாது.

இவரின் இறப்பினால் கிழக்கு மண் ஒரு இளம் ஊடகவியலாளரை இழந்து தவித்துள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

**க.விஜயரெத்தினம்...**
*(வெல்லாவெளி தினகரன் நிருபர்)*

# உருகி உருகி ஒளியூட்டும் சேவைக்கு...

**(சர்வதேச தாதியர் தின (இன்று) கவிதை)**

அகிலத்தின் அச்சாணி
ஆரோக்கியம் அதில்
தாதியத்தின் முக்கியம்
நாமடைந்த பாக்கியம்
நம் நாடடைந்த
நல் சுகாதாரச் சுட்டெண்கள்
தாதியர் பெற்ற
வெற்றிக் கிண்ணங்கள்

இச் சௌபாக்கிய சுவர்க்க தீவின்
சுகதேகி பிரஜைகளை
சிருஷ்டிக்கும் சிற்பிகளாய்
"நைட்டிங்கேல்" வாரிசுகள்
தேசத்தை நேசிக்கும்
தாதிய தேவதைகளின்
வலுவான சேவைகள் அவை
ஏக இறைவன் ஜீவன பரிசுகள்

அவர்கள் நடுநிசியில் விழித்திருப்பதால்
நண்பகலிலும் உறங்க முடிகிறது எங்களுக்கு
சாதி பேதமில்லாது மக்களுக்கு
கொதிக்காமல் இன்முகத்துடன்
கனிவோடு பணியாற்றுவதால்
அகச் சுரப்பிகள்
அளவோடு சுரக்கின்றன
எம் கண்களும் பனிக்கின்றன

பல பொழுதுகள் நா வறண்டு
பசி கண்டும் செவிலியர்
முகம் சுழிக்காமல்
பணிவுடன் பணி தொடர்வதினால்
பிணியாளர் உணவுக்கால்வாய் ஈரமாகயிருக்கிறது

விபரமாய் விரைவாக
விரல்கள் அசைவதால் தானே
அவசர சிகிச்சையிலும்
சுவாச அசைவு சீராகயிருக்கிறது
நீங்கள் குனிந்து குனிந்து
சரீரம் தொட்டவுடன்
பூதவுடல் கூட சட்டென்று
கெட்டியாக எழும்பி நடக்கிறது

மடிந்து போவென்று
கடிந்து பேசி கல்லாக நிற்காமல்
துடிப்பாக சுழல்வதால் தானே
மரணப்படுக்கையிலும்
இதயத் துடிப்பு நிற்காமல்
இன்னும் அடிக்கிறது
இடர் சமயம் அமையும்
எதையும் செய்யும்



ஊதியம் ஈடுசெய்யா தாதியம்
இமயம் அவர் இதயம்

கைபிடித்து கைகொடுத்து
தூக்கிவிடும் வேண்டுகோள்கள்
அனைத்தும் நிறைவேற்றும்
கருணையுள்ளமுள்ள தாதியர்
நலிவுற்றவர் வாழ்வின்
ஆதர்ச ஊன்றுகோல்கள்

தேவலோகத்தின் தேவதைகள்
தெய்வீகச் சேவையில்
செவ்வனே செய்யும்
செப்பமான செவிலியர்
முடிவிலிப் பணியில்
தம் உயிரை பணயம் வைத்த பயணம்
ஓட்டமும் நடையுமாய்
இளைப்பாறும் வரை
மெழுகுவர்த்தி உருகி உருகி
ஒளியூட்டும் சேவைக்கு ஏது கரை

தரமான தன்னிகரற்ற சேவை
தாராளமாய் தரணியெங்கும்
நோயாளர் பாதுகாப்பு அரண் எழுப்பி
காத்திடும் காவலர்கள்
முற்றிய தொற்றா நோய்கள்
முற்றிலும் ஓடியோழியட்டும்
உயிர் கொல்லி தொற்று நோய்களும்
தோற்றே போகட்டும்

நோவிலும் சாவிலும்
ஆத்மாவின் காயங்களை வருடும்
புனித தேவர்கள் அவர்கள்
மருத்துவத்தின் மையப்புள்ளி
பாராட்டுவோம் பாரெங்கும்
செவிலியர் பெயர் சொல்லி
உம் புகழ் பார் கடந்தும்
சதா ஓங்கி ஒலிக்கட்டும்



**மருத்துவர் அஸாத் எம். ஹனிபா**
வைத்திய அத்தியட்சகர்

# அல்லாஹ்வின் வல்லமையை எடுத்தியம்பும் பிரபஞ்சம்



மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

**அல் குர்ஆன் என்பது மாபெரும் அருள்மறை. உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொரு மனிதனதும் இம்மை மறுமை வாழ்வின் சுபீட்சமும் விமோசனமும் தான் அதன் இலக்கு. மனித வாழ்வுக்கு நேர்வழிகாட்டுவதே அதன் பொறுப்பும் கடமையும் ஆகும்.**

சர்வ வல்லமை படைத்த அல்லாஹ் தஆலாவை ஆசானாகக் கொண்டுள்ள இந்த அருள்மறை என்றும் உயிரோட்டத்துடன் இருக்கும் அற்புதத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இது தனியே ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கோ காலத்திற்கோ பிராந்தியத்திற்கோ அருளப்பட்ட ஒன்றல்ல. அல்லாஹ் தனக்கு அளித்துள்ள பொறுப்பை அச்சொட்டாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது அல் குர்ஆன்.

அதேநேரம் அல் குர்ஆனின் உலகம் உள்ளிட்ட பிரபஞ்சம் குறித்த போதனைகள், அறிவுரைகள் மற்றும் கட்டளைகளை எடுத்து நோக்கினால் அவை அல்லாஹ்வின் அற்புதமாகவும் அவனது வல்லமையையும் ஆற்றல்களையும் எடுத்தியம்பக்கூடியனவாகவும் இருப்பதை அவதானிக்கலாம்.

இது தொடர்பில் அல்லாஹ்தஆலா, **'(ஆரம்பத்தில்) வானம் (என்றும்) பூமி (என்றும் தனித்தனியாக) இல்லாமல் இருந்ததை நாமே பிரித்தமைத்து (வானத்தில் இருந்து மழையைப் பொழியச் செய்து, அந்த மழை நீரைக் கொண்டு (உயிருள்ள) ஒவ்வொன்றையும் வாழ்ந்திருக்கச் செய்தோம்' (21:30)** என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

உண்மையில் உலகம் உள்ளிட்ட முழுப் பிரபஞ்சமுமே மாபெரும் அற்புதமாகும். அதனை நோக்கும் எவரும் இந்த உண்மையை கண்டறிந்து கொள்வர். இப்போது பூமி என்றும் கோள்கள், நட்சத்திரங்கள் என்றும் இருக்கும் எல்லாமே ஆரம்பத்தில் ஒன்றாவே இருந்துள்ளன. அவற்றை அல்லாஹ்வே பிரித்தமைத்துள்ளான். இது 20 ஆம் நூற்றாண்டின் பெருவெடிப்பு கொள்கை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்பே அல்லாஹ் தஆலா இவ்வசனத்தை அருளி வானம், பூமி தனித்தனியாக அன்றி ஒன்றாக இருந்ததையும் அவற்றை நாமே பிரித்தமைத்தோம்என்பதையும்எடுத்தியம்பியுள்ளான்.

அதேநேரம், **'(நபியே.. அவர்களை நோக்கி) வானங்களிலும் பூமியிலும் உள்ளவற்றை (சிறிது) கவனித்துப் பாருங்கள் எனக் கூறுங்கள்' (10:101)** என்றும் **'வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும் இரவு பகல் மாறிமாறி வருவதிலும் அறிவுடையோருக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன (3:190)** என்றும் **'அவனே வானங்களையும் பூமியையும் அவற்றுக்கு மத்தியிலுள்ளவற்றையும் படைத்து வளர்ப்பவன் (37:05)** என்றும் அல்லாஹ்வே சுட்டிக்காட்டியுள்ளான்.

இத்தோடு நில்லாமல் '(அன்றி) அவனே வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றியே படைத்தவன். **அவன் எதைப்படைக்கக் கருதினாலும் அதனை 'ஆகுக' எனக்கூறிய மாத்திரத்தில் உடனேயே ஆகிவிடுகிறது' (2:117)** என்பதையும் கூறி வைக்கவும் அவன் தவறவில்லை. இவ்வசனங்கள் அல்லாஹ்வின் வல்லமையையும் ஆற்றல்களையும் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

வானம் எவ்வளவு அழகானதாகவும் விண் பொருட்கள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. அதேபோன்று தான் பூமியும் விளங்குகிறது. அவற்றில் விதவிதமான படைப்புக்கள். அவற்றின் இயக்கங்கள், செயற்பாடுகள் அனைத்துமே மனிதனைப் பிரமிக்கச் செய்யக்கூடியனவாக உள்ளன.

இவற்றைச் சரியான கண் கொண்டு நோக்குபவர்கள், **'இத்தகையவர்கள் (தங்கள்) நின்ற நிலையிலும் இருப்பிலும் படுக்கையிலும் அல்லாஹ்வையே நினைத்து வானங்களையும் பூமியையும் அவன் படைத்திருப்பதை ஆராய்ச்சி செய்வார்கள். மேலும் எங்கள் இறைவனே... நீ இவற்றை வீணாகப் படைக்கவில்லை. நீ மிகத் தூயவன். (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக' (3:191)** என்று பிரார்த்திப்பார்கள் என அல் குர்ஆன் குறிப்பிட்டுள்ளது. அவர்கள் நிச்சயம் அவனையே புகழ்ந்து துதிப்பார்கள். அதுவே மனித இயல்பாகும்.

மேலும் **'வானங்கள் பூமியில் உள்ளவை அனைத்தும் அவனுடையதே' (2:255)** என்றும் **'வானங்களிலும் பூமியிலுமுள்ள அனைத்தும் (தங்களுக்கு வேண்டியவைகளை) அவனிடமே கேட்கின்றன. (55:29)** என்றும் அல்லாஹ்வே குறிப்பிட்டு வைத்திருக்கின்றான்.

அதேநேரம் உலகம் உள்ளிட்ட முழு பிரபஞ்சமும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்ப தம் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருகின்றன. அவற்றில் அணுவளவும் கூட அவை பிசகுவதில்லை.

இதனை இஸ்லாமிய அறிஞர் ஒருவர், 'அல் குர்ஆன் உண்மையான இருப்பைக் கொண்டிருக்கின்றது. இப்பிரபஞ்சமும் அவ்வாறான இருப்பைக் கொண்டுள்ளது. அல் குர்ஆன் எவ்வாறு குறைகள், பலவீனங்கள், தேவைகள் அற்றவையாகவும் பூரணத்துவம் மிக்கவையாகவும் விளங்குகிறதோ அதேபோன்று பூமி உள்ளிட்ட முழு பிரபஞ்சமும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் அவன் நிர்ணயித்துள்ள விதிகளுக்கும் ஏற்ப செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன' என்றுள்ளார்.

அல் குர்ஆனின் போதனைகள், அறிவுரைகளின் படி, பூமி உள்ளிட்ட பிரபஞ்சமும் படிக்கப்பட வேண்டும். நோக்கப்பட வேண்டும். அதற்கான பொறுப்பு மனிதன் மீது சுமத்தப்பட்டுள்ளது.

பூமி, வானங்கள் உள்ளிட்ட எதுவும் வீணாகவும் விளையாட்டாகவும் படைக்கப்படவில்லை. அவை ஒவ்வொன்றுக்கும் பொறுப்புகளும் கடமைகளும் அளிக்கப்பட்டுள்ளன. இதனை அல்லாஹ், **'தன்னுடைய வரையறைக்குள் (தவறாமல்) செல்லும் சூரியனும் (ஓர் அத்தாட்சியாகும்)' (36:38),** என்றும் **'சூரியனை சந்திரன் அணுக முடியாது. இரவு பகலை முந்த முடியாது. (இவ்வாறே நட்சத்திரங்கள்) ஒவ்வொன்றும் தன்னுடைய வட்டவரைவுக்குள் நீந்திச் செல்கின்றன' (36:40)** என்றும் குறிப்பிட்டுள்ளான்.

அந்த வகையில் சூரிய மண்டலத்திலுள்ள கோள்கள் தமக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பாதையில் சூரியனை வலம் வருகின்றன. அவற்றுக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை அவை அணுவளவும் மீறி செயற்படுவதில்லை. அவ்வாறு செயற்படுமாயின் அவை ஒன்றுடன் ஒன்று மோதுண்டு அழிவுறும். அத்தோடு பூமியில் மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களதும் இருப்பே கேள்விக்குறியாகிவிடும். அதேபோன்று விலகிச் சென்றாலும் அழிவுகளும் சேதங்களும் தான் விளைவாக அமையும். அதனால் அவை எதுவும் இடம்பெறாத வகையில் மிகவும் நுணுக்கமான திட்டமிடலுடன் இப்பிரபஞ்சத்தைப் படைத்திருப்பவன் அல்லாஹ் ஒருவனேயாவான்.

**'அவன் தான் (பூமியையும்) பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான்' (2:29)** என்றும் **'அவன் தான் உங்களுக்கு பூமியை (நீங்கள் வசிப்பதற்கு) வசதியாக ஆக்கி வைத்தான்' (67:15)** என்றும் அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு பூமி உள்ளிட்ட பிரபஞ்சத்தின் செயற்பாடுகளை எடுத்து நோக்கினால் அவை மனிதனுக்கு சேவையாற்றிக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். அவை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் விதிகளுக்கும் நிர்ணயங்களுக்கு மாறாக செயற்படுவதில்லை.

இதனை அல்லாஹ்வே தன் அருள்மறையில்,

**'வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்துமே (அவை) விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவனுக்கு கீழ்படிந்தே நடக்கின்றன. அன்றி (அவையனைத்தும்) அவன் பக்கமே திரும்பி கொண்டு வரப்படும்' (3:83)** என்று குறிப்பிட்டிருக்கிறான்.

ஆகவே அல்லாஹ் அல் குர்ஆன் ஊடாக மனிதனுடன் உரையாடுகிறான். அந்த உரையாடல் மனிதனின் மாறாத இயல்புடன் இடம்பெறக்கூடியதாக உள்ளது. இது மனித சமூகத்தை நோக்கிய இறுதி உரையாடலாகும். அதனால் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் மனித வாழ்வை மாற்றக்கூடிய ஆற்றலைத் தன்னகத்தே கொண்டுள்ள இக்குர்ஆன் மாறாத இயல்பைப் பெற்றுள்ளது போன்று பிரபஞ்சமும் பெற்றுள்ளது. அதனால் பிரபஞ்சத்தில் காணப்படும் அத்தாட்சிகளையும் சான்றாதாரங்களையும் பார்க்கும் இறைநம்பிக்கையாளரின் உள்ளத்திலிருந்து எவ்வாறான வார்த்தைகள் வெளிப்படும் என்பதையும் அல் குர்ஆன் குறிப்பிட்டே இருக்கிறது. அது அவனை உளப்பூர்வமாகப் புகழ்ந்து துதிப்பதாகவே இருக்கும்.

மர்லின் மரிக்கார்...

# இஸ்லாத்தில் மதச் சுதந்திரம்

நிலைபேறான மகிழ்ச்சியும் கௌரவமும் நிறைந்த ஒரு சமூக உருவாக்கத்திற்கான மிகப்பிரதான அடிப்படைகளில் ஒன்றாக மதச் சுதந்திரம் காணப்படுகிறது. அதனால்தான் இஸ்லாம் மதச்சுதந்திரம் சம்பந்தமான அதனது ஆழ்ந்த அவதானிப்பையும் வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளது. இதனை அல்குர்ஆன் இவ்வாறு பிரஸ்தாபிக்கின்றது.'

**(சத்திய இஸ்லாம்) மார்க்கத்தில் எத்தகைய நிர்ப்பந்தமும் இல்லை. (ஏனெனில்) வழிகேட்டிலிருந்து நேர்வழி திட்டமாக தெளிவாகிவிட்டது.' (சூறா: பகரா – 256)**

இது அல்குர்ஆனின் மதச்சுதந்திரப் பிரகடனமாகும். நபி (ஸல்) அவர்களை சந்திப்பதற்கு கிறிஸ்தவர்களாக இருந்த நஜ்ரான் தூதுக்குழு ஒன்று வந்த போது அவர்களை மஸ்ஜிதுன் நபவி பள்ளிவாசலில் வைத்தே உபசரித்ததோடு அவர்களின் வணக்கங்களை மஸ்ஜிதின் ஒரு புறத்தில் நிறைவேற்றவும் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். (ஆதாரம்: ஸீரது இப்னு இஸ்ஹாக)

மதீனா சாசனத்தில் ஒவ்வொரு மதத்தை சார்ந்தவர்களும் தத்தமது மதக் கடமைகளையும் அனுஷ்டானங்களையும் பூரணமாக நிறைவேற்றுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது இஸ்லாத்தின் மதச் சுதந்திரம் பற்றிய விசாலமான பார்வையை பறைசாற்றுகிறது. மதச் சுதந்திரம் பற்றி அதில் குறிப்பிடப்பட்ட முக்கியமான சில அடிப்படைகள் பின்வருமாறு காணப்படுகிறது.

- ★ முஸ்லிமல்லாதோர் அவர்களது மார்க்கத்தையும் செல்வங்களையும் பாதுகாத்துக்கொள்ள உரிமை உடையவர்கள். அவர்கள் முஸ்லிம்களது மார்க்கத்தை பின்பற்ற வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்கள். அத்துடன் அவர்களது செல்வங்கள் சூரையாடப்படவும் மாட்டாது.
- ★ நாட்டுக்குள்ளும் வெளியேயும் நடமாடுவதற்கான சுதந்திரம் நாட்டின் பாதுகாப்பிற்கு ஏற்ப உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நஜ்றான் தேச கிறிஸ்தவர்களோடு நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் மத சுதந்திரத்துக்கான வாசல் முழுமையாக திறக்கப்பட்டிருந்தது. அவ்வொப்பந்தத்தில் மதச்சுதந்திரம் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

'நஜ்ரான் வாசிகளும் அவர்களைச் சேர்ந்தோரும் அல்லாஹ்வின் பாதுகாப்பிலும், அவனது நபியும் ரசூலுமாகிய முஹம்மதுடைய (ஸல்) பொறுப்பிலும் இருப்பார்கள். அவர்களின் உயிர், சமயம், நிலம், உடமைகள் உட்பட அவர்களில் (இங்கு) இருப்பவர்கள், இல்லாதவர்கள் அடங்கலாக அவர்களின் வணக்கஸ்தலங்கள்,வழிபாடுகள் ஆகிய அனைத்திற்கும் அவர்களுக்கும் பாதுகாப்பும், பொறுப்புமுண்டு. மேலும் எந்தவொரு மத குருவும் அல்லது துறவியும் அவரது நிலையில் இருந்து நீக்கப்பட மாட்டார். அவ்வாறே எந்தவொரு மதக்கடமையை நிறைவேற்றுபவரும் அக்கடமையை நிறைவேற்றுவதில் இருந்து தடுக்கப்பட மாட்டார். சட்டபூர்வமாக அவர்களின் கைகளிலுள்ள சிறிய, பெரிய அனைத்தும் அவர்களுக்கே சொந்தம். அது வட்டியுடனும் ஜாஹிலிய்யக்கால பழிக்குப்பழி வாங்கும் தண்டனையுடனும் தொடர்பற்றதாக இருத்தல் வேண்டும். ஒருவர் இவர்களிடமிருந்து ஓர் உரிமையைக் கோரினால் இரு தரப்பினருக்கும் எத்தகைய பாதிப்பும் ஏற்படாதவண்ணம் நீதியான முறையில் அது தீர்த்து வைக்கப்பட வேண்டும்'.

(ஆதாரம்: இப்னு ஸஅத், அல் தபகத்துல் குப்றா)

மதச் சுதந்திரம் பற்றிய இஸ்லாத்தின் தெளிவான நிலைப்பாட்டை விளங்கப்படுத்தும் மற்றுமொரு குர்ஆனிய வசனம்,

**'மேலும் உம் இறைவன் நாடியிருந்தால் பூமியிலுள்ள யாவரும் ஈமான் கொண்டிருப்பார்கள், எனவே மனிதர்கள் அனைவரும் முஃமின்களாக ஆகிவிட வேண்டும் என்று அவர்களை நீர் கட்டாயப்படுத்த முடியுமா,' (.சூறா: யூனுஸ் 99)** என்று குறிப்பிட்டிருக்கிறது.

சகல மதங்களுக்கும், சமூகங்களுக்கும் வாழ்வுரிமை உண்டு 'நபி (ஸல்) அவர்கள் நன்மாராயம் கூறுபவரும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவருமாவார்'. ஆகவே முஹம்மது (ஸல்) அவர்களின் சமூகத்தினரது கடமை நபிவழி நின்று இஸ்லாத்தை வாழச் செய்வதும் பிற மனிதர்களைச் சென்றடையச் செய்வதுமேயன்றி அவர்கள் மீது திணித்து முஸ்லிம்களாக மாற்றுவதன்று. இந்த உண்மையை அங்கீகரிக்காமல் ஒருபோதும் மத சகிப்புத்தன்மை வராது. சகிப்புத்தன்மை இன்றேல் நட்புறவு நிலை பெறாது.

இஸ்லாத்தின் மொத்த செய்தியும் இதுதான். இந்த உலகம் என்பது ஒரு சோதனைக் களம். நிரந்தரமான மறு உலகில் சுவர்க்கத்தை அல்லது நரகத்தை தேர்ந்தெடுக்கும் ஒருகளம்.

இறைத்தூதர்கள் சுவர்க்கத்தைப் பற்றி சுபசெய்தி சொல்லவும், சுவர்க்கத்தின் பக்கம் மனிதர்களை அழைத்துச் செல்லக்கூடிய செயற்கரிய செயல்களின் பக்கம் வழிகாட்டவும், நரகத்தைப் பற்றி எச்சரிக்கவும், நரகத்தின் பால் மனிதர்களை அழைத்துச் செல்லக்கூடிய செயல்களில் இருந்து பாதுகாக்கவுமே அனுப்பப்பட்டார்கள். அவர்கள் வலுக்கட்டாயமாக நேரிய வழியில் மக்களை வற்புறுத்தி அழைப்பதற்காக அனுப்பப்படவில்லை.

முஸ்லிம்களின் கடமையும் இதுதான். அவர்கள் இவ்வுலக மாந்தருக்கு இஸ்லாத்தின் செய்தியை முன்மாதிரியான அழகிய நடத்தைகளைக் கொண்டும், கனிவான வார்த்தைகளைக் கொண்டும் எத்திவைக்க வேண்டும். அவர்கள் எதையும் மிகைப்படுத்தி சொல்வதையோ, கட்டாயப்படுத்தி திணிப்பதையோ இஸ்லாம் வன்மையாக கண்டிக்கின்றது.

மேலும் மறுமையில் நமக்கு கிடைக்கும் வெற்றி அல்லது தோல்வி என்பது இம்மையில் நம்மிடம் இருக்கும் இறை நம்பிக்கையைப் பொறுத்ததாகும். இறைநம்பிக்கை இல்லாவிட்டால் நற்செயல்கள் வீணே. இறைநம்பிக்கை என்பது மனிதனோடு சம்பந்தப்பட்டது. அதனை யாரும் கொண்டுவந்து திணிக்க முடியாது என்பது தான் இஸ்லாத்தின் உறுதியான நிலைப்பாடாகும். மேற்குறித்த மதச் சுதந்திரம் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு மிகத் தெளிவானது. இஸ்லாம் மாற்று மதங்களையோ, பிற சமூகத்தவர்களின் நம்பிக்கை கோட்பாடுகளையோ, கலாசார நடைமுறைகளையோ ஒருபோதும் நிந்தித்ததோ, இழிவு படுத்தியதோ இல்லை. இவ்வாறு செய்பவர்கள் இஸ்லாத்தின் வழிகாட்டல்களையும் வரையறைகளையும் மீறியவர்களாகக் கணிக்கப்படுவார்கள்.

ஆனால் இஸ்லாத்தின் கொள்கை கோட்பாடுகள் பற்றியும், மதச்சுதந்திரம் குறித்த இஸ்லாத்தின் நிலைப்பாடு பற்றியும் பிற சமூகத்தவர்களுக்கு சரியானதொரு தெளிவைக் கொடுக்க தவறியமை இஸ்லாம் குறித்து பிழையான புரிதல்களுக்கு வழிவகுத்துள்ளன. அதனால் எங்களையும் மறைத்துக்கொண்டு, எங்களது சன்மார்க்க விழுமியங்களையும் மறைத்துக் கொண்டு வாழும் மனோநிலையிலிருந்து நாம் முழுமையாக வெளிப்பட வேண்டும்.

இன்றைய சூழலில் மதச்சுதந்திரம் சம்பந்தமாக கருத்தில் கொள்ள வேண்டிய சில முக்கியமான விடயங்களை தெளிவுபடுத்துவது காலத்தின் கட்டாயமாகும். அல்லாஹ்வின் வேதமே அதை நமக்கு கற்றுத் தருகிறது **'அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைப்பவற்றை நீங்கள் திட்டாதீர்கள். ஏனெனில் அவர்கள் அறியாமையால் வரம்பு மீறி அல்லாஹ்வை திட்டுவார்கள்' (சூறா: அல் அன்ஆம் 18)**

ஆகவே இஸ்லாம் அளித்துள்ள மத சுதந்திரத்தையும் ஏனைய சமூகங்களது மத உணர்வுகளுக்கு அளித்துள்ள மதிப்பையும் அறிந்து அதற்கேற்ப செயற்பாடுகளை அமைத்துக் கொள்வது ஒவ்வொரு இறைவிசுவாசியினதும் பொறுப்பாகும்.

கலாநிதி அல் ஹாபிழ்
எம்.ஐ.எம்.சித்தீக்...
(அல்–ஈன்ஆமி) B.A.Hons, (Al Azhar university, Egypt)
M.A.& PhD (International Islamic university, Malaysia)

# உள்ளத்தின் பேருண்மை

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'மனம் ஓர் இறகைப் போன்றது. அந்த இறகோ திறந்த மைதானத்தில் கிடக்கிறது. நாலா புறத்திலிருந்தும் வீசுகின்ற காற்று அதனை இங்கும் அங்கும் புரட்டிப்போடுகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: இப்னுமாஜா)

இந்நபிமொழி மூன்று கூறுகளைக் கொண்டதாக உள்ளது.

1. ஒரு திறந்த வெளி மைதானம். அம்மைதானத்தில் நான்கு திசையிலிருந்தும் காற்று தங்குதடையின்றி வீசுகிறது. அது மட்டுமல்ல அம்மைதானத்தில் கிடக்கின்ற யாதொரு சின்னஞ்சிறு பொருளும் கண்களை உருத்துகிறது. அனைவரது கவனத்தையும் ஈர்க்கிறது.

2. அந்த திறந்தவெளி மைதானத்தில் ஓர் இறகு கிடக்கிறது. அதனை எடுப்பார் எவரும் இல்லை. அதனை எடுத்து பாதுகாப்பான இடத்தில் வைக்கக்கூடிய எவரும் இல்லை. அதனை எடுத்துப் பயன்படுத்தக் கூடியவரும் எவரும் இல்லை.

3. கேட்பாரற்று, கவனிப்பாரற்று கிடக்கின்ற அந்த இறகு வரை செல்லக்கூடியது காற்று மட்டுமே.

மற்றொரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'மனிதர்களின் மனங்கள் யாவும் கருணை மிக்க அல்லாஹ்வின் இரு விரல்களுக்கு இடையே சிக்கியிருக்கும் ஒரே ஒரு மனதைப் போன்றவையே. தனது இரண்டு விரல்களுக்கிடையே அதனைப் பிடித்திருக்கும் கருணை மிக்க அல்லாஹ் தனது விருப்பத்திற்கு ஏற்ப அப்படியும் இப்படியும் திருப்பிக் கொண்டே இருக்கின்றான்' என்று குறிப்பிட்டதோடு பின்வருமாறு பிரார்த்தித்துமுள்ளார்கள்.

'யா அல்லாஹ்! இதயங்களைத் திருப்பியமைப்பவனே! எங்களது இதயங்களை உனது கீழ்ப்படிதலின் பக்கம் திருப்புவாயாக!'

மனிதன் தனது மன ஓட்டங்களுக்குக் கட்டுப்பட்டவன் என்பது ஒரு பேருண்மை ஆகும். மனிதனைச் சீர்திருத்துவதுதான் வாழ்க்கையை சீர்திருத்துவதாகும். அதுவே வெற்றிக்கான உத்தரவாதமாகும். மறுமை வெற்றிகூட உண்மையில் மனதைச் சீர்திருத்துவதை பொருத்தே இருக்கின்றது. அந்நாளில், செல்வமும் பிள்ளைகளும் எவ்வித பயனும் அளித்திட மாட்டா. ஆனால், எந்த மனிதர் தூய்மையான உள்ளத்துடன் அல்லாஹ்வின் சமூகத்திற்கு வருகை தருகின்றாரோ அவரைத்தவிர' (அல்குர்ஆன்: 26:88,89)

(கூறப்படும்) இதுதான் உங்களுக்கு வாக்களிக்கப்பட்டு வந்தது. அதிகம் மீளக்கூடியவராகவும் மிகவும் பேணுதலுடன் வாழக்கூடியவராகவும் இருந்த ஒவ்வொருவருக்கும் உரியது. அவரோ பார்க்காமலேயே கருணை மிக்க அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொண்டிருந்தார். மேலும், அவன் பக்கம் திரும்பக்கூடிய உள்ளத்துடனும் வந்திருக்கின்றார். நுழைந்து விடுங்கள் சுவனத்தில் முழு அமைதியுடன் (அல்குர்ஆன்: 50:32,33)

எனவே உள்ளத்தின் பேருண்மையை அறிந்து செயற்படுவோம்.

தொகுப்பு: அபூமுஜாஹித்...

# மனித நேயத்தின் மகத்துவம்

இறை நம்பிக்கை என்பது இறைவனை வணங்குவதும், மற்ற ஏனையக் கடமைகளை செய்வதும் மட்டுமல்ல. பக்கத்து வீட்டுக்காரரின் பசியை போக்குவதிலும் உள்ளது என்ற மனித நேயத்தை நபி(ஸல்) அவர்கள் உலகிற்கு எடுத்துக்கூறியுள்ளார்கள்.

'தன் அண்டை வீட்டார் எவராக இருப்பினும் அவர்கள் பசித்திருக்கும் போது, தான் மட்டும் வயிறார உண்பவர் ஓர் இறை நம்பிக்கையாளராக இருக்கமுடியாது' என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: மிஷ்காத்)

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், வழிப்போக்கன் ஒருவனுக்கு தன் இடத்தில் தங்கிச் செல்ல இடமளித்து உபசரித்தார்கள். அடுத்த நாள் அவரை காணச் சென்றபோது அங்கு அவர் இருக்கவில்லை. அவர் தங்கியிருந்த இடம் அசுத்தமாகக் காணப்பட்டது. நபிகளாரே தனது கரங்களால் அவ்விடத்தைச் சுத்தம் செய்யத் தொடங்கினார்கள். அப்போது அங்கு தங்கி இருந்தவர், தான் மறந்து விட்டுச்சென்ற பொருளை எடுப்பதற்காக திரும்பி வந்திருந்தார். நபிகளாரே தன் கரங்களால் அவ்விடத்தை சுத்தம் செய்வதைக் கண்டு அதிர்ந்து போனார். இவ்வாறு ஏன் செய்தீர்கள்? என்று அவரிடம் ஒரு வார்த்தை கூட நபிகளார் கேட்கவுமில்லை, அவரை கடிந்து கொள்ளவுமில்லை. அவர் மனம் புண்படாதபடி நபிகளார் மிருதுவாக அவரது உடல் நலம் குறித்து விசாரித்தார்கள்.

இங்கு நபி(ஸல்) அவர்களின் மனிதநேயம் மிகைத்து நிற்கிறது. தவறிழைத்தவரின் மனம்கூட புண்பட்டு விடக்கூடாது என்பதில் நபிகளார் உறுதியாக இருந்தார்கள். 'மனிதர்களிடம் இரக்கம் காட்டாதவர்களுக்கு அல்லாஹ் இரக்கம் காட்டமாட்டான்' என்றும் நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

அல்லாஹ்வின் இரக்கத்தை பெற வேண்டுமானால் மனிதர்களிடமும் இரக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது இதன் மூலம் தெளிவாகிறது. மனித உயிரின் மகத்துவம் குறித்து அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

'எவர் ஒருவர் மற்றோர் ஆன்மாவை கொலை செய்கிறாரோ, அப்போது அவர் மனிதர்கள் அனைவரையும் கொலை செய்தவர் போல ஆகிவிடுவார். எவரொருவர் அதனை (மனித ஆன்மாவை) வாழ வைக்கிறாரோ, அவர் மனிதர்கள் எல்லோரையும் வாழ வைத்தவரை போல ஆகிவிடுவார்'. (அல் குர்ஆன் 5:32) இந்த இறைவசனம் மனித நேயத்தின் உச்சத்தை உலகிற்கு பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

ஆகவே மனிதாபிமானம் என்பது இரக்கம் காட்டுவது, கனிவாகப் பேசுவது, பசித்தவருக்கு உணவு கொடுப்பது, பிறர் உணர்வை மதித்து நடப்பது, நலிவுற்றோருக்கு உதவி புரிவது, உறவுகளை பேணி வாழ்வது, மன்னிப்பது போன்ற அழகிய நற்செயல்களால் ஆனது என்பதை நபியின் வாழ்வு கற்பிக்கும் மனித நேயப் பாடம் என்றால் அது மிகையாகாது.

இல்மா...

# தெஹிவளை - கௌஸிய்யாஹ் அரபுக் கல்லூரியின் முப்பெரும் விழா

தெஹிவளை அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாஹ் அரபு கல்லூரி மற்றும் இஸ்லாமிய நூலகத்தின் வெள்ளி விழா, 11 ஆவது பட்டமளிப்பு விழா மற்றும் 18 ஆவது தலைப்பாகை சூடும் விழா ஆகிய முப்பெரும் விழாக்கள், நாளை (13) சனிக்கிழமை மாலை 3.45 மணி முதல், அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாஹ் அரபுக் கல்லூரி மண்டபத்திலும், (14) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் தெஹிவளை ஈகல் லேக் சைட் பாதுகாப்புப் படையினரின் வரவேற்பு மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில், பிரதம அதிதிகளாக அஸ்ஸெய்யித் நகீப் மௌலானா, அஸ்ஸெய்யித் நஜீப் மௌலானா மற்றும் கௌரவ அதிதிகளாக அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாஹ் தலைவர் அல்ஹாஜ் எம்.எச். ஹாஜா ஹுஸைன், அஸ்ஸெய்யித் ஏ.ஐ. அனீஸ் பூக்கோயாத் தங்கள், அஸ்ஸெய்யித் ஏ.ஐ. உவைஸ் பூக்கோயாத் தங்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தியா தமிழ்நாடு, ஜாமிஆ அல் அன்வாருல் குத்ஸிய்யா அரபுக் கல்லூரியின் துணை முதல்வர் மௌலவி அஃப்ழலுல் உலமா ஜே.எம். ஜைனுல் ஆப்தீன் (மஹ்ழரி) இங்கு சிறப்புரை நிகழ்த்துவார். சிறப்பு அதிதிகளாக ஸாதாத்துமார்கள், கௌஸிய்யாஹ் கல்லூரி நிர்வாகிகள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், முரீதீன்கள், முஹிப்பீன்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அன்றைய தினம், (2019) ஆலிம்கள் 6 பேரும், (2021) ஆலிம்கள் 15 பேரும், (2022) ஆலிம்கள் 16 பேரும், (2020) ஹாஃபிழ்கள் 4 பேரும், (2021) ஹாஃபிழ்கள் 6 பேரும், (2022) ஹாஃபிழ்கள் 11 பேரும், மௌலவி மற்றும் ஹாஃபிழ் பட்டங்களைப் பெறவிருப்பதோடு, மாணவர்கள் 6 பேரும் தலைப்பாகை சூடி கௌரவிக்கப்படவுள்ளனர்.

## இலங்கைசவுதி நட்புறவு... (03ஆம் பக்கத் தொடர்)

இரு நாடுகளுக்கிடையிலான பரஸ்பர நல்லுறவை பலப்படுத்தவும் வரலாற்று ரீதியான தொடர்பு, சமூக கலாசார மற்றும் வர்த்தக ரீதியிலான பிணைப்புக்களை வலுப்படுத்தவும் இதன் மூலம் வழி பிறக்கும் என நம்பப்படுகிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள அரபுலகுடனான உதவிகளையும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையலாம்.

இரு நாடுகளின் சுற்றாடல் துறை, காலநிலை என்பன தொடர்பான அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ள வழி பிறக்கும் எனவும் நம்பப்படுகின்றது.

## சர்வதேச விசாரணைகள்... (03ஆம் பக்கத் தொடர்)

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தினூடாக வெளிப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், ஜனாதிபதியுடனான சந்திப்பில் சர்வதேச விசாரணையை அழுத்தமாக வலியுறுத்தப் போவதாகவும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ அனர்த்தம் தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில், உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சர்வதேச பொறிமுறையிலான விசாரணையை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில், சர்வதேச பொறிமுறை நாட்டுக்கு முரணானதென்றும், உள்ளக பொறிமுறை மூலமாகவே தீர்வு காணமுடியும் எனவும் அரசாங்கம் பிரச்சினையை இழுத்தடிப்பு செய்து வருகிறது. சர்வதேச பொறிமுறையிலான விசாரணையை மறுக்கும் அரசாங்கம், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து விவகாரத்தில் நட்டஈடு பெற்றுக்கொள்ள வெளிநாட்டு நீதிமன்றத்தை நாடியுள்ளது.

## ரயில்வே துறைக்கு...

சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுபற்றித் தெரிவித்த அமைச்சர்:அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்யும் திட்டத்தின் கீழ் சுயாதீனமாக ஒய்வு பெற்றுச் செல்லும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க ரயில்வே திணைக்களத்திலும் சில ஊழியர்கள் சுயாதீனமாக ஓய்வு பெற்றுச் சென்றிருக்கலாம். எந்த அழுத்தங்களும் இல்லாமல் சுயாதீனமாக ஓய்வு பெறுபவர்களுக்கு அத்தகைய தீர்மானத்தை எடுக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## மக்களது வைப்புத் தொகை, ...

பல்வேறு ஊகங்கள் இருந்தாலும், நிதி அமைப்பு ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த மத்திய வங்கி எப்போதும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், எதிர்காலத்திலும் அவ்வாறே செயற்படும் என்றும் ஆளுநர் கூறியுள்ளார்.

ஒருவித உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் இருந்தாலும், பொதுமக்களின் வைப்புத்தொகையைப் பாதுகாப்பது மற்றும் வங்கி அமைப்பின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வட்டி விகிதங்கள், குறிப்பாக சந்தை வட்டி விகிதங்கள் ஆண்டின் இரண்டாம் பாதியில், வேகமாக குறையுமென எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

## தென்கிழக்கு வங்கக்...

காணப்படுவதுடன், தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக ஒரு சூறாவளியாக விருத்தியடையக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது. அடுத்த சில நாட்களில் இது,ஒரு பாரிய சூறாவளியாக வலுவடையக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

வட அகலாங்குகள் 03N இற்கும் 20N இற்கும் கிழக்கு நெடுங்கோடுகள் 85E இற்கும்100E இற்கும் இடையிலுள்ள கடற்பரப்புகளில் உள்ளன. இதனால், கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் மறு அறிவித்தல் வரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

காலியிலிருந்து மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

## நடுத்தர வர்க்கத்தினருக்கு...

866 வீடுகளைக் கொண்ட இந்த வீடமைப்புத் திட்டம் வெலிசர, நிட்டம்புவ, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, அத்துருகிரிய மற்றும் கடுவெல பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படவுள்ளன. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால், இவ்வீட்டுத்திட்டங்கள் நிர்மாணிக்கப்படும்.

இந்த ஐந்து வீடமைப்புத் திட்டங்களில் நிட்டம்புவ மற்றும் வெலிசர வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் இந்த வருடத்துக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நிட்டம்புவ வீடமைப்புத் திட்டத்தில் , மூன்று அறைகள் உள்ள நூறு வீடுகள் , இரண்டு மாடிகளாகவும் மற்றும் இரண்டு அறைகள் கொண்ட முப்பது வீடுகளாகவும் நிர்மாணிக்கப்படவுள்ளன. வெலிசரை வீடமைப்புத் திட்டம் 408 வீடுகளைக் கொண்டுள்ளது. இதில், 204 வீடுகள் இரண்டு அறைகளாகவும் மூன்று அறையுள்ள 204 வீடுகளும் உள்ளன.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டேயில் அமையவுள்ள வீட்டுத் தொகுதியில் 160 வீடுகள் உள்ளன. இதில் 84, இரண்டு அறை வீடுகளும் 72, மூன்று அறை வீடுகளும் 04 சொகுசு வீடுகளும் உள்ளடங்குவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## இம்ரான்கானை விடுவிக்க...

செய்ய நேற்று உத்தரவிட்டது.

ஊழல் வழக்கில் விசாரணைக்காக இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் ஆஜரான பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை, கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற □ரேஞ்சர்ஸ்□ எனப்படும் எல்லை பாதுகாப்பு படையினர் கைது செய்தனர். அவரை, 08 நாள் காவலில் வைத்து விசாரிக்க பாகிஸ்தான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், கைதுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், இம்ரான் கான் கைது செய்யப்பட்டமை சட்ட விரோதம், நீதிமன்றத்தில் யாரையும் கைது செய்யக்கூடாது. அவரை விரைவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டுமென உத்தரவிட்டனர். இதையடுத்து நீதிமன்றத்தில் இம்ரான் ஆஜர்படுத்தப்பட்டார்.

அவரை விடுதலை செய்ய உத்தரவிட்ட நீதிபதி, இம்ரான் மீதான வழக்கு தொடர்பாக உயர் நீதிமன்றத்தை அணுக உத்தரவிட்டார்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் (வயது 70), இஸ்லாமாபாத் உச்ச நீதிமன்றத்தில் ஊழல் வழக்கு ஒன்றில் ஆஜராக வந்தபோது, அவரைச் சுற்றி வளைத்து துணை இராணுவத்தினர் கைது செய்தனர்.

அல் காதிர் அறக்கட்டளை வழக்கில் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்த சம்பவம் நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பல்வேறு இடங்களில் வன்முறை வெடித்தது. இதற்கிடையே நீதிமன்ற வளாகத்தில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டதை எதிர்த்து, அவரது வழக்கறிஞர்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, இம்ரான் கைது செய்யப்பட்டது சட்டவிரோதம் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. மேலும், அவரை ஒரு மணி நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் உத்தரவிட்டது. இதையடுத்து இம்ரான் கானை ஊழல் தடுப்பு பிரிவு பொலிஸார் பலத்த பாதுகாப்புடன் உச்ச நீதிமன்றத்துக்கு அழைத்து வந்து ஆஜர்படுத்தினர். இதனால் உச்ச நீதிமன்றத்தை சுற்றி உள்ள வீதிகள் மூடப்பட்டன. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தன .

## வடக்கு, கிழக்கு முஸ்லிம்களது...

மற்றும் மலையகப் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதற்கு மலையக மக்களின் பிரதிநிதிகள், கட்சிகளுடனும் ஜனாதிபதி பேச்சு நடத்த வேண்டியதன் அவசியத்தை ஹரீஸ் எம்,பி வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதியின் செயலாளர்,

நீண்டகாலத் தீர்வை எட்டும் வகையில் இதய சுத்தியுடன் ஜனாதிபதி பேச்சுவாரத்தைகளை முன்னெடுப்பார். தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக சமூகங்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அர்த்தபுஷ்டியான தீர்வை காண்பதற்கே இந்தப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கூறினார்.

## சொத்துக்கள், உயிர்களை இழக்கும்...

இவ்வாறு சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவில் குடியேற முயற்சித்தவர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்ப அவுஸ்திரேலியா அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆட்கடத்தல்காரர்களின் தந்திரோபாயத்தில் சிக்கி இவர்கள் இவ்வாறு சட்ட விரோதமாக வெளிநாடு செல்வதற்கு முயற்சிக்கின்றனர். இதனால், இவர்கள் பெருமளவு பணத்தை ஆட்கடத்தல்காரர்களுக்கு வழங்குகின்றனர். இதனால்,சொத்துக்கள் விரயமாவது மட்டுமன்றி, உயிருக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்படுகிறது.

மேலும்,இவ்வாறானவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டதன் பின்னர், இலங்கை பொலிஸாரால் கைது செய்யப்படுகின்றனர். இவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளில் மேலும் இவர்கள் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள். அவுஸ்திரேலிய எல்லை பாதுகாப்புக் கொள்கை மிகவும் கடுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. அவுஸ்திரேலிய கடற்கரை பாதுகாப்பு அதிகாரிகள் 24 மணி நேரமும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதால்,உழ்நுழைய எவ்வித சாத்தியங்களும் இல்லை என்பதை,சட்ட விரோத குடியேற்றவாசிகள் உணர்ந்து கொள்வது அவசியம்.

## பத்து வருட புதிய GSP...

ஒன்றியத்துக்குமிடையிலான கூட்டு ஆணைக்குழுவின் 25ஆவது அமர்வில் து இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

இக்கூட்டத்துக்கு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்த்தன மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் *Paola Pampaloni* ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

வெளியுறவு அமைச்சும் ஒரு அறிக்கையில், கூட்டு ஆணையம் இருதரப்பு மற்றும் பரஸ்பர நலன்களின் பரந்த அளவிலான இருதரப்பு மற்றும் பலதரப்பு பிரச்சினைகள் தொடர்பில் விவாதிக்கும். அத்துடன் எதிர்கால ஒத்துழைப்புக்கான பகுதிகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்படவுள்ளது.

கூட்டு ஆணையத்தின் கீழ் நிறுவப்பட்ட மூன்று பணிக்குழுக்களின் முடிவுகள், அதாவது ஆளுகை, சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் மீதான பணிக்குழு; வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான பணிக்குழு, அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான செயற்குழு குறித்தும் கூட்டத்தின் போது விரிவாக விவாதிக்கப்படும்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள், நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், வர்த்தகம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு, கல்வி, சுற்றுச்சூழல், பாதுகாப்பு, மீன்பிடி, பொதுப் பாதுகாப்பு ஆகிய அமைச்சுகளின் பிரதிநிதிகளை இலங்கை பிரதிநிதிகள் கொண்டுள்ளனர்.

## வெடுக்குநாறி மலை...

நீதிமன்றத்தால் நேற்று (11) விடுவிக்கப்பட்டனர்.

வவுனியா, வெடுக்குநாறிமலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த இறை விக்கிரகங்கள் அண்மையில் உடைத்து அழிக்கப்பட்டன.இதையடுத்து வவுனியா நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் மீண்டும் விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்தது.

எனினும், விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்ட போது நீதிமன்ற உத்தரவை கருத்தில் கொள்ளாது தொல்பொருட்களுக்கு சேதம் விளைவித்ததாக ஆலய பூசகரும், நிர்வாக உறுப்பினர் ஒருவரும் நேற்று கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைதனாவர்களை நெடுங்கேணி பொலிஸார் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

எனினும், வழக்கின் முறைப்பாட்டாளர்களாக ஆலய நிர்வாகமும் பூசகரும் இருப்பதால் அதே வழக்கில் அவர்களை சந்தேக நபர்களாக பெயரிடுவது வழக்குக்ஞ முரணாக அமையும். இதைச் சுட்டிக்காட்டிய சட்டத்தரணிகள், அவர்களை வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு கோரினர். பொலிஸார் மற்றும் சட்டத்தரணிகளின் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்திய நீதிமன்றம், கைதான இருவரையும் வழக்கிலிருந்து விடுவித்தது.

அத்துடன், ஆலயத்தில் கட்டுமானங்களையோ மாற்றங்களையோ ஏற் படுத்தக்கூடாதென்று எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், பூஜை வழிபாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை விக்கிரகங்களை உடைத்தவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையை விரைந்து எடுக்குமாறும் பொலிஸாருக்கு பணிக்கப்பட்டது.

வழக்கில் ஆலய நிர்வாகம் சார்பில், சிரேஸ்ட சட்டத்தரணி தி.திருஅருள் தலைமையிலான வவுனியா சட்டத்தரணிகள் குழாம் முன்னிலையாகியிருந்தனர்.

## வேட்பாளர்களான அரச...

பின்பற்றியே, நடவடிக்கைகளை முன்னெடுத்ததாகவும் பிரதமர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று தயாசிறி ஜயசேக்கர மற்றும் அனுர பிரிய தர்ஷன யாப்பா ஆகிய எம்பிக்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கவில்லையே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். அதேவேளை, எதிர்க்கட்சி இதனை பிரச்சனையாக்கிக் கொள்ளக் கூடாது. அனைவரும் இணைந்து இதற்கு தீர்வு காண முடியும் என்றும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் சபையில் மேலும் தெளிவுபடுத்திய பிரதமர்:

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று என்னோடு பேசும் போதும் இது தொடர்பில் கலந்துரையாடினார்.

முதலில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை நாம் மறந்து விடக்கூடாது. அந்த வகையில் இந்த விடயம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஒன்றாகும்.

இரண்டாவதாக தேர்தல் சட்டமென ஒன்று நடைமுறையில் உள்ளது. அது, நாம் அனைவரும் இணைந்து நிறைவேற்றிய சட்டம். அந்த வகையில் இது விடயத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு இணங்கவே நாம் செயற்பட முடியும்.

தேர்தல் ஆணைக்குழுவின் நிபந்தனையின்படியே அவர்கள் கடமைக்கு செல்வது தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளோம். நாம் தேர்தல் ஆணைக்குழுவை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி இந்த செயற்பாடுகளை மேற்கொண்டோம்.

தற்போது பெருமளவானோருக்கு இந்த நிவாரணம் கிடைத்துள்ளது. சில இடங்களில் சிக்கல்கள் இருக்கலாம். அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டது போல், நாம் அவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தோம். தாம் போட்டியிடும் தேர்தல் தொகுதிக்கு வெளியே அருகிலுள்ள பிரதேசத்தில் கடமைக்கு செல்லுமாறு நாம் சுற்றறிக்கை வெளியிட்டிருந்தோம்.

அவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படும் இடம் தொடர்பில் பிரச்சனைகள் இருந்தால் தேர்தல் ஆணைக்குழுவுடன் பேசி அதனை தீர்க்க முடியும். எவ்வாறெனினும் முழுமையாக தேர்தல் சட்டத்திற்கு மாறாக செயற்பட முடியாது.

வேட்பாளர்களான அரசாங்க ஊழியர்கள் விடுத்த வேண்டுகோள் தொடர்பிலும் நாம் தேர்தல் ஆணைக் குழுவுடன் அவ்வப்போது கலந்துரையாடி யுள்ளோம்.

இதில் எந்த அரசியல் பிரச்சனையும் கிடையாது. இதில் சிறிய சரி செய்தல் ஒன்று மட்டுமே உள்ளது என்பதை நாம் உணர வேண்டும்.

## ஆசியாவின் ஒற்றுமைக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

ஏற்படுவதைத் தடுக்க நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். ஆசியாவின் ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு இலங்கை எந்த வகையிலும் துணைபோகாது என்பதையும் வலியுறுத்துகிறேன்.

## அரகலய பின்னணியில்...

அம்பலப்படுத்தி புத்தகம் எழுதியுள்ளார். ஜே.வி.பி, அரகலயவின் ஒரு பகுதியாகும். அவர்களே இப்போது அரகலயவின் பின்னணியில் சில வெளிநாட்டு குழுக்கள் இருப்பதாக வெளிப்படுத்தியுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ எம்பி மேலும் கூறியுள்ளார்.

தற்போது அரகலயவினால் நியமிக்கப்பட்ட அரசாங்கமே இருக்கின்றது. அரகலயாவினாலேயே, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார் .இதன் காரணமாகவே இந்த அமைச்சரவையும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் .

## பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு...

பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடற்றொழில் மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

இதனால்,வாழ்வாதாரத்தை இழந்த 15,000 கடற்றொழிலாளர்கள் மற்றும் கடற்றொழில்சார் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட சுமார் 5,000 பேருக்கு நட்டஈடுகள் வழங்கப்படவுள்ளன.

இதன் முதற் கட்டமாகவே நேற்று முப்பது பேருக்கு காசோலைகள் வழங்கப்பட்டன.ஏனையோருக்கான காசோலைகள், அந்தந்த பிரதேச செயலகங்களூடாக வழங்கப்படும்.

## நடைமுறை செயற்பாடுகளுக்கு...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட காணிச் சட்டங்களே இன்றும் நடைமுறையில் உள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். பல்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டுவரப்பட்ட காணிச்சட்டத் திருத்தங்கள் நடைமுறைச் செயற்பாடுகளுக்கு பொருத்தமற்றதாக காணப்படுவதாகவும் அவர் தெரித்தார்.

அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு காணிகளை பெற்றுக்கொடுப்பதிலுள்ள சிக்கல்களை நீக்கி,புதிய தேசிய காணிக் கொள்கையை உருவாக்குவது தொடர்பிலும் இங்கு தீர்க்கமாக ஆராயப்பட்டது.

## 195 நாடுகளின் தலைநகரங்களை...

படைத்து வரும் 04 வயது சிறுவன் தொடர்பில் , நுவரெலியாவில் செய்திகள் பதிவாகியுள்ளன.

2018 மே 20 ஆம் திகதி பிறந்த சிறுவனுக்கு நான்கு வயதாகிறது. நுவரெலியா லவர்ஸ்லீப் விநாயகபுரம் பிரதேசத்திலுள்ள தோட்டத்தில் வசிக்கும் குமாரவேல் காலாநேஷன் மற்றும் செல்வராஜ் லலிதாம்பிகையின் மகனான காலாநேஷன் என்ற சிறுவனே, இவ்வாறு சாதனை படைத்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

உலக வரை படத்தில் நாடுகளை தொட்டு காண்பிக்கும் பயிற்சியை இந்த சிறுவனுக்கு இரண்டு வயதிலிருந்தே அவருடைய பெற்றோர் அளித்துள்ளனர். ஆசியாவில் சாதனை படைக்கும் வகையில் சிறுவனுக்கு பயிற்சியளிக்கப்படுகின்றது. அதன்பின்னர் கின்னஸ் சாதனைக்கு விண்ணப்பிக்கும் வகையில், பயிற்சியளிக்கப்படுமென அச்சிறுவனின் பெற்றோர் தெரிவித்தனர்.

## அமைதி வழிப் போராட்டத்தில் ...

சஜித்பிரேமதாசா:

நாட்டில் மிகவும் ஆபத்தான சூழ்நிலை உருவாகி வருகிறது. நிகேஷல மீது நேற்று முன்தினம் கடுவலை முன்னாள் பிரதி மேயர் சந்திக அபேரத்னவால் ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இத்தாக்குதலில் முன்னாள் பிரதி மேயரும் ஈடுபட்டார்.

தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தாக்கியவர்களென இரு தரப்பிலிருந்தும் சிலர்,கைது செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்ப் பட்டியல் சமூக வலைதளங்களில் பகிரப்படுகின்றன. இவர்களை கவனமாக இருக்குமாறும் பல்வேறு அச்சுறுத்தல்கள், பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.எனவே, பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட சகலரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

இப்போராட்டத்தின் பக்கவிளைவின் பயனாகவே தற்போதைய ஜனாதிபதியும் பதவிக்கு வந்துள்ளார். இதனால்,இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது நடத்தப்படும் தொடர் தாக்குதல்களின் ஒரு பகுதியே இதுவெனவும் தெரிவித்தார்.

## இலங்கை மாணவனுக்கு...

நடைபெறவுள்ளது. இச்சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான விசேட உரையொன்றை ஆற்றுவதற்கு டிலான் மகேன் குணரத்ன தெரிவு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இதன்போது தென்மேற்கு சட்டக் கல்லூரியில் சிறப்புரை ஆற்றுவதற்கு இலங்கையின் சட்டக்கல்லூரி மாணவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

கனடாவில் பிறந்த டிலான் மஹேன் குணரத்னவின் பெற்றோர் இலங்கையர்கள். இவர்களின் மகனான டிலான் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள கால் ஸ்டேட் யுனிவர்சிட்டியில் இளங்கலைப் பட்டம் பெற்றார்.

அதன்பிறகு கனடாவின் டொராண்டோவில் 'ஒய்டிவி' சனலில் பணியாற்றினார். 75,000 அமெரிக்க டொலர் உதவித்தொகையை பெற்று 'தென்மேற்கு' சட்டக்கல்லூரியில் இவர் நுழைந்துள்ளார்.

## 16 வயது மாணவியின்... 10ஆம் பக்கத் தொடர்

மேலும் பிரதான சந்தேக நபர் கடல் வழியாக வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லும் நோக்கில் அம்பலாங்கொட பகுதியில் இருந்து வாடகை கார் ஒன்றில் காலிக்கு செல்ல முயற்சித்த போது பொலிஸார் மேற்கொண்ட சில உபாயங்களால் 9ஆம் திகதி அதிகாலையில் ஹிக்கடுவை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். அன்றைய தினம் பல்வேறு கோணங்களில் பிரதான சந்தேக நபரை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தினர். இதன் போது சந்தேக நபர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில், தாங்கள் இருவரும் மது அருந்திய பின்னர் எமது அறையில் நிர்வாணமாக ஆடிப் பாடி சந்தோஷமாக இருந்தோமே தவிர, தாங்கள் எவ்விதத்திலும் உடலுறவில் ஈடுபடவில்லை எனவும் இச்சந்தர்ப்பத்தில் டிஹாராவின் தொலைபேசிக்கு பல அழைப்புகள் வந்ததாகவும் அதற்கு பதிலளித்த டிஹாரா, 'நீ என்னை நாசமாக்கி விட்டாய்', 'நீ எனக்கு இப்படி செய்யலாமா?' என ஆவேசப்பட்டதாகவும் அதன் பின்னர் பைத்தியம் பிடித்தது போல் அறையினுள் அங்கும் இங்கும் ஓடித் திரிந்த டிஹாரா சடுதியாக ஜன்னல் அருகில் இருந்த கதிரையில் ஏறி வெளியே குதித்ததாகவும் யாராவது அவரை அச்சுறுத்தி, மிரட்டி இருக்கலாம்' என தான் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும் பிரதான சந்தேக நபர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்து மறுநாள் 10ஆம் திகதி காலை களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் சந்தேக நபரை ஆஜர் செய்த பொலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க, நீதிமன்ற பரிந்துரையின் பேரில் 48 மணி நேரம் சந்தேக நபரை தடுத்து வைத்து களுத்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர். அதே சமயம் நால்வரினதும் தொலைபேசி அழைப்புகள் தொடர்பிலும் மேலதிக கவனம் செலுத்தி விபரங்களை திரட்டும் முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். இவ்வாறு விடை காணாத பல்வேறு மர்மங்களை கேள்விக் கணையாக தொடுத்துவிட்டு எம்மிடையே பிரிந்து சென்ற டிஹாவின் பூதவுடல் 10ஆம் திகதி மாலை களுத்துறை எட்டவிலவத்தை பொது மயானத்தில் பெரும் திரளான பிரதேசவாசிகளின் பங்குபற்றலுடன் இறுதிக்கிரியை இடம்பெற்றது.

இச்சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான கயான் இவ்வாறு ஏற்கனவே பல யுவதிகளின் வாழ்க்கையுடன் விளையாடியுள்ளதாகவும் பல இளம் பெண்களுடன் உறவுகளை ஏற்படுத்தி ஏமாற்றி வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அவர் இலங்கையில் உள்ள ஒரு பெரிய குத்தகை நிறுவனம் (*Leasing company*) ஒன்றின் தவணைகளை உரிய காலத்தில் செலுத்தத் தவறிய வாகனங்களை கைப்பற்றும் (சீசர் ,*Seizure*) நபராக பணியாற்றி வந்துள்ளார். இவர் இறந்த டிஹாரா என்ற மாணவியை டிக் டொக் சமூக ஊடகங்கள் மூலம் அறிமுகம் செய்து கொண்டுள்ளனர் என்றும் ஒரு வதந்தி நிலவுகிற என்பதால் ஸ்மார்ட் தொலைபேசி பாவனையில் ஈடுபடும் பாடசாலை மாணவர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் பெற்றோர்கள் அதிக கவனத்தில் கொள்ள வேண்டியதும் அவசியம்.

# நகர்வலம்



## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ அனர்த்தம்

# பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு இதுவரை ரூ.03 பில். நட்டஈடு வழங்கல்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் கம்பஹா, கொழும்பு, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் நேரடியாக பாதிக்கப்பட்ட 15,032 கடற்றொழிலாளர்களுக்கு 03 பில்லியன் ரூபா வரை நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இந்த கப்பல் விபத்து இடம்பெற்ற காலப்பகுதியில், நான் கடற்றொழில் வள இராஜாங்க அமைச்சராக பதவி வகித்தேன். இதன்போது மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் கடற்றொழில் வள அமைச்சு ஊடாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் பல்வேறு தரப்பினர் பொறுப்பற்ற வகையில் தெரிவித்த கருத்துக்கள் நட்டஈடு பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு எங்கு வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்பதை 225 பாராளுமன்ற உறுப்பினர்களால் தீர்மானிக்க முடியாது.

துறைசார் நிபுணர்கள் சமர்ப்பித்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு சட்ட ஆலோசனைகளுக்கு அமைய சிங்கப்பூர் நாட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த கப்பல் விபத்து தேசிய பிரச்சினையாக கருதப்படுவதால் இந்த விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டுள்ளது என்பதை உறுதியாக குறிப்பிட முடியும்.

இந்த கப்பல் விபத்து விவகாரத்தில் நீதியமைச்சின் தலைமைத்துவத்தில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அதிகார சபைகள் உட்பட சகல தரப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டன. கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு, கடற்கரை பிரதேசங்களை பாதுகாப்பதற்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுத்தோம்.

தீ விபத்துக்குள்ளான கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் தடை விதித்தோம். இவ்விடயத்தில் துரிதமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை சிறந்த முறையில் செயற்படுத்தினோம்.

முழுமையான மதிப்பீடு செய்யாமல் நியூ டயமன் கப்பலை நாட்டின் கடற்பரப்பில் இருந்து வெளியேற்ற வேண்டாம் என சட்டமா அதிபர் உறுதியாக அறிவுறுத்தியிருந்த பின்னணியில், கப்பலை வெளியேற்றியமை பிரச்சினைக்குரியதாக உள்ளது.

ஆகவே இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக் குழுவை அமைக்குமாறு ஜனாதிபதியும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கடல் மார்க்க கேந்திர மையமாக இலங்கையை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கொள்கையில் இருந்துகொண்டு கப்பல் போக்குவரத்துக்கும், கப்பலில் கொண்டு செல்லும் பொருட்களுக்கும் தடை விதிக்க முடியாது. அது தொடர்பில் ஒரு தரப்பினர் குறிப்பிடும் கருத்துக்கள் அடிப்படையற்றவை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முன்னாள் சபாநாயகர் தேசமான்ய

# எம்.ஏ. பாக்கிர் மாக்கார் நினைவு சொற்பொழிவு இன்று



மறைந்த முன்னாள் சபாநாயகர் தேசமான்ய எம்.ஏ. பாக்கிர் மாக்காரின் 1 06 ஆவது பிறந்த தினம் இன்று (12) அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்னாரது பிறந்த தினத்தை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய அலைவரிசைகளில் அன்னாரது நற்பணிகள் தொடர்பாக விசேட உரைகள் இடம்பெறவுள்ளன.

இன்று 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிங்கள சேவையில் நண்பகல் 12.00 மணிக்கு FM 91.7/91.9 அலைவரிசையில் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தனவும் தமிழ் சேவை இரவு 07.30 FM 102.1/91.9 அலைவரிசையில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ராசபுத்திரனும் முஸ்லிம் சேவையில் இரவு 8.05 மணிக்கு FM 102.3/102.1 அலைவரிசையில் ஸம் ஸம் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி எம்.ஏ மொஹமட் ஹிஷாமும் ஆங்கில சேவை அலைவரிசையில் 06.30 மணிக்கு உயர்நீதிமன்ற சட்டத்தரணி (திருமதி) லிஹினி பெர்ணாந்துவும் உரை நிகழ்த்துவர்.


## கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

# விண்ணப்பத்துக்கான அறிவித்தல்

ஐக்கிய அரபு இராச்சியம், டுபாய், ஜுமைரா 1. கொமியுனிடி 332, 22C ஸ்ட்ரீட், விலா 3 என்ற முகவரியில் வசித்த இங்கிலாந்து விதன்ஷோவில் விதன்ஷோ வைத்தியசாலையில் மரணமெய்திய ஹோவட் விலியம் தோமஸ் கொத் என்பவரின் இறுதி விருப்பாவணத்தை மறுமுத்திரையிடுவதற்காக, (1977ம் ஆண்டு 20ம் இலக்க சட்டம் மற்றும் 1993-14ம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட) குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் 554 (U) பிரிவின் கீழ் விருப்பாவணம் மற்றும் மரண சாதனம் விண்ணப்பம் சம்மந்தமாக

ஹோவட் விலியம் தோமஸ் கொத்

**- இறந்தவர் -**

வழக்கு இல. : DTS /425/2022
தன்மை : மரணசாசனம்
பெறுமதி : ரூ. 138,264,088.31/-
நடைமுறை : சுருக்கமுறை

**-எதிர்-**

**ஏன்று க்ரோதர் கொத்**
இல.10573, சன்செட் ரிஜ் டிரைவ்,
சென் டீகோ,
கெலிபோனியா 92131-2376
ஐக்கிய அமெரிக்கா

தற்பொழுது
இல. 821, கன்ட்ரி க்ளப் லேன்,
கொறொனாடோ
கெலிபோனியா 92131-2376
ஐக்கிய அமெரிக்கா

தனது பதிவுசெய்யப்பட்ட அற்றோணி தத்துவக்காரரான முஹம்மது ருஷ்தி காலித் இலக்கம். 17/2, 5வது ஒழுங்கை, கொழும்பு-03 மூலம்

**விண்ணப்பதாரி -**

இதன் மூலம் அறிவிக்கப்படுவதாவது இன்றைய திகதியிலிருந்து 28 நாட்கள் காலவதியாகிய பின் இங்கு குறிப்பிடப்படும் ஐக்கிய அரபு இராச்சியம், டுபாய், ஜுமைரா 1, கொமியுனிடி 332, 22C ஸ்ட்ரீட், விலா 3 என்ற முகவரியில் வசித்த இங்கிலாந்து விதன்ஷோ வில் விதன்ஷோ வைத்தியசாலையில் மரணமெய்திய ஹோவட் விலியம் தோமஸ் கொத் என்பவரது பூதல் சொத்துக்கள் தொடர்பிலான பிரைட்டன் டிஸ்ட்ரிக்ட் ப்ரொபேட் ரெஜிஸ்ட்ரியினால் 2018 ஜனவரி 15ஆம் திகதி வழங்கப்பட்ட இறுதி விருப்பாவணத்தின் ப்ரொபேட் பத்திரத்தை மறுமுத்திரையிடுவதற்கான விண்ணப்பம் (1977ம் ஆண்டு 20ம் இலக்க சட்டம் மற்றும் 1993 ஆம் ஆண்டு 14ம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் அத்தியாயம் XXXVIII B இன் பிரிவு 554U இன் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்படும்.

**2022/05/08 திகதியன்று**

**விண்ணப்பதாரியின் பதிவுபெற்ற சட்டத்தரணி**


# வடபுலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட சமூகங்களை மீளக்குடியேற அழைப்பு



### சமூக ஐக்கியத்தை ஏற்படுத்த இதுவே வழி என்கிறது தேசியவாத முன்னணி

வட மாகாணத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீளவும் தங்களது சொந்த தாயகத்தில் மீளக் குடியமரத் தயாராகுமாறு தேசியவாத முன்னணியின் முக்கியஸ்தர் ஜிஹான் ஹமீட் கோரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர், நாட்டில் நிலவும் சுமுக சூழலில், இலங்கையர் ஒவ்வொருவரதும் பூர்வீக வாழிடங்களில் வாழும் உரித்தை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.தேசியவாத முன்னணி இவ்விடயத்தில் உறுதியுடனுள்ளது. இனச் சுத்திகரிப்பை எந்த ஜனநாயக அரசாங்கமும் ஏற்கப்போவதில்லை.

எனவே,வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களை பூர்வீக வாழிடங்களில் மீளக் குடியமர்த்தும் செயற்பாடுகளில் ஈடுபட தேசியவாத முன்னணி ஈடுபட்டுள்ளது. வெளியேற்றப்பட்ட மக்களை சொந்த இடங்களில் குடியேற்றுவதனூடாகவே இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த இயலும். சிவில் சமூகத்தை வெளியேற்றிய பயங்கரவாத சிந்தனையை தோற்கடிக்க, பூர்வீக பூமிகளில் மக்களை குடியேற்றுவதே பொருத்தமானது.

இப் பொறுப்பிலிருந்து ஒருபோதும் தமது அணி,விலகிச் செயற்படப் போவதில்லை என்றும் அதன் முக்கியஸ்தர் ஜிஹான் ஹமீட் தெரிவித்துள்ளார்.

# வெலிகம அறபாவின் "1978" பழைய மாணவர் ஒன்றுகூடல்



**வெலிகம தினகரன் நிருபர்**

வெலிகம அறபா தேசிய பாடசாலையின் 1978 ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் ஒன்று கூடலொன்று 45 வருடங்களின் பின்னர் களுத்துறை மாவட்ட மதுகம பகுதியில் அமைந்துள்ள *Rannagala Estate Bungalow* உல்லாச விடுதியில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட அன்றைய மாணவர்களுள் இன்று வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, ஆசிரியர்களாக, உலமாக்களாக, வர்த்தகர்களாக, தொழிலதிபர்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் சேவை செய்து வருகின்றனர்.

இதில் உள்ளூர், வெளியூர் மாணவர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படிப்புகளை தொடர முடியாத மாணவர்கள் இனங் காணப்பட்டு அவர்களுக்கு உதவுதல், தீராத நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற வசதியற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டல் கற்ற பாடசாலையின் மேம்பாட்டுக்காக அர்ப்பணித்தல் போன்றவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

# வத்தளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினரின் வீட்டில் திருட்டு

## ரூபா 10 இலட்சம் பெறுமதியான நகைகள் மாயம்

**(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)**

வத்தளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினரொருவரின் வீட்டிலிருந்து சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம் ஆகியவை கடந்த செவ்வாய்க்கிழமை ( 9 ) இரவில் திருடப்பட்டுள்ளதாக வத்தளை பொலிஸார் தெரிவித்தனர். வத்தளை, அல்விஸ் நகரத்தின், 3ம் குறுக்குத் தெருவில் வசித்து வருகின்ற முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினரின் வீட்டிலேயே மேற்படி திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினர் வத்தளை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பேரில் பொலிசார் இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். திருடப்பட்ட தங்க நகைகளில் 6 பவுண் எடையுள்ள மூன்று தங்க மாலைகள் மற்றும் இரண்டு தங்க மோதிரங்கள் என்பன உள்ளடங்குகின்றன எனவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர். வத்தளை பொலிஸார் குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# முஸ்லிம் சேவை 'பாரம்பரியம்' நிகழ்ச்சியில் சம்மாங்கோட்டு பள்ளி அபுல் ஹஸன் (காஹிரி)



எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய் கிழமை இரவு 8.15 மணியளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில் முஸ்லிம் சேவைக்கு பங்களிப்பு செய்தோர் வரிசையில் புறக்கோட்டை சம்மாங்கோட்டு பள்ளியின் முன்னாள் கதீப், பேஷ் இமாம் காலஞ்சென்ற மௌலவி அல்ஹாஜ் எம்.கே.ஈ. அபுல் ஹஸன் (காஹிரி) அவர்களின் நினைவுகள் பரிமாறப்பட இருக்கின்றன.

இவர், 1960 தொட்டு நீண்ட காலமாக இஸ்லாமிய நற்சிந்தனை, குர்ஆன் விளக்கம், விசேட உரைகள், பிரார்த்தனைகள் போன்ற இன்னோரன்ன சன்மார்க்க நிகழ்ச்சிகளை வழங்கி வானொலி நேயர்கள் மத்தியில் பெரும் பிரபலம் பெற்ற ஒரு சன்மார்க்க அறிஞராவார்.

இவரது நினைவுகளை இவரோடு மிக நெருக்கமாக பழகியவர்களான புறக்கோட்டை சம்மாங்கோட்டு பள்ளி கதீப், பேஷ் இமாம் மௌலவி அல்ஹாஜ் எஸ். ஓ. எம். காழி அலாவுதீன் சித்தீக்கி (பாஸில் பாகவி), தமிழ்த்தென்றல் அலி அக்பர் ஆகியோர் நினைவு கூருவர்.

இந்நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவை பணிப்பாளர் பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

# 16 மாணவிகளை துஷ்பிரயோகம் செய்த கணித பாட ஆசிரியர்

### களுத்துறை வடக்கு பகுதியில் சம்பவம்; ஒளிப்பதிவுகளை மடிக்கணினியில் சேமித்து வைத்திருந்ததாகவும் தகவல்

**களுத்துறை சுழற்சி நிருபர்**

களுத்துறை வடக்கு பகுதியில் கணித பாட பிரத்தியேக வகுப்பு நடத்திவரும் ஆசிரியர் ஒருவர் மாணவிகள் 16 பேரை பாலியல் துஷ்பிரயோகத்து உட்படுத்தி அவற்றை ஒளிப்பதிவு செய்து மடிக்கணனியில் சேமித்து வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் தேடப்பட்டு வந்த நபரை சந்தேகத்தின் பேரில் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்பு பணியக பொலிஸாரால் நேற்று (11) காலை கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பிரத்தியேக வகுப்பு நிறைவடைந்ததும் மாணவிகளை வீடுகளுக்கு அழைத்து செல்லும் போர்வையில் களுத்துறை, லாகோஸ் தோட்ட காட்டுப் பகுதிக்கு கூட்டிச் சென்று காரில் வைத்து பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி அதனை தனது கையடக்க தொலைபேசியில் ஒளிப்பதிவு செய்துள்ளார். மேலும் பெற்றோர் வீடுகளில் இல்லாத சந்தர்ப்பங்களில் இணையத்தள (சூம்) தொழில்நுட்பம் மூலம் மாணவிகளுடன் இணைப்புகளை ஏற்படுத்தி முறையற்ற முறையில் நடாத்தப்பட்டு ஒளிப்பதிவு செய்து மடிக்கணினியில் களஞ்சியப்படுத்தி வைத்துள்ளார் எனவும் ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவருகின்றது.

குறித்த நபரின் மனைவி தற்செயலாக கணினியில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த காணொளிகளை கண்டறிந்து மாணவிகளின் பெற்றோர்களுக்கு தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து களுத்துறை வடக்கு மற்றும் தெற்கு பொலிஸ் நிலையங்களில் சில முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதேநேரம் குறித்த நபரின் மனைவியும் தனது கணவர் பல பெண்களுடன் தகாத உறவுகளைப் பேணி வருவதாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

## யானை தாக்கி பெண் பலி

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

காட்டு யானையின் தாக்குதலில் பெண் ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக ஹபரனை பொலிஸார் (10) தெரிவித்தனர்.

இச்சம்பவம் ஹபரனை சூரியகம பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர். 64 வயதுடைய ஹபரனை சூரியகம பகுதியை வசிப்பிடமாக கொண்ட பெண் ஒருவரே இவ்வாறு சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.



கடவத்த யோர்க் சர்வதேசப் பாடசாலையின் வெசாக் தின நிகழ்வு அண்மையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் ரம்முதுகல விஹாரையின் விஹாராதிபதி மற்றும் தலைமையாசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டிருந்த போது பிடிக்கப்பட்ட படங்கள்.

(படம்: ரன்ஜித் அசங்க)

National Lotteries Board — புதன்கிழமை 2023.05.10 — www.nlb.lk

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
| --- | --- | --- | --- | --- |
| மஹஜன சம்பத | 5110 | ரூ. 20,324,153.00 | P | 6 6 0 8 7 2 |
| ராசி சுப பலன் | 419 | ரூ. 2,575,333.00 | | 03 04 11 29 |
| ஜாதிக சம்பத | 1565 | ரூ. 10,830,710.00 | | 6 8 2 2 1 0 |
| கொவிசெத | 3352 | ரூ. 102,183,416.64 | R | 37 40 54 60 |
| தன நிதானய | 1140 | ரூ. 89,334,778.40 | M | 10 21 44 75 |
| மெகா பவர் | 1458 | ரூ. 320,325,114.00 | O | 23 01 10 14 44 |

# குருநாகல் பானகமுவ அந்நூர் தேசிய பாடசாலையின் புதிய மூன்று மாடி கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

## பழைய மாணவர் சங்கத்தினால் 8 கோடி ரூபா செலவில் நிர்மாணிப்பு

குருநாகல் பானகமுவ அந்நூர் தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் ஊர் மக்களினால் 8 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அதிபர் ஏ. எம். இர்சாட் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் எம். எம். தஸ்லீம் மற்றும் பானகமுவ முன்னாள் சமாதான அமைப்பின் தலைவர் சமூக செயற்பாட்டாளர் ஏ. பீ. ஏ. மலீக் ஆகியோர்களுடன் ஊர் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கொழும்பு சாஹிராக் கல்லூரியின் உப அதிபரும் வளவாளருமான றஸீன் ஹஸன் விசேட உரையும் பழைய மாணவர் சங்க உறுப்பினரும் கல்விப் பிரிவின் பொறுப்பாளர் ஆசிரியர் எம். ஆர். எம். அஸ்ஹர் வரவேற்புரையினையும் பாடசாலை மாணவர்களின் விசேட கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் எம். எம். அஹ்மட் ரஸ்மி, செயலாளர் எம். ஏ. அப்துல் ரஹீம் உள்ளிட்ட பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மூன்று மாடிக் கட்டடத்தில் ஒரு கேட்போர் கூடமும் 20 வகுப்பறைகளும் அமையப்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பாடசாலை அதிபர் ஏ. எஸ். எம். இர்சாட் உரையாற்றும் போது

இன்றைய நாள் இப்பாடசாலையின் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். ஒரு பாடசாலையின் பௌதிக வளங்களும் மானுட வளங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு செயற்படும் போதுதான் அந்தப் பாடசாலையின் அபிவிருத்தி மேலோங்கிச் செல்கிறது.மாணவர் வளப் அதிகரித்து செல்வதற்கு ஏற்ப பௌதிக வளம் அமைந்திருத்தல் வேண்டும். ஆனால் பௌதிக வளம் பற்றாக்குறை நீண்ட காலமாகக் காணப்படுகின்றது. 2018 இல் 1200 மாணவர்களைக் கொண்டிருந்த இப்பாடசாலை இப்பொழுது 1800 மாணவர்களையும் தாண்டி விட்டது. ஆனால் கட்டடங்களின் எண்ணிக்கையோ அதே அளவில் தான் காணப்படுகிறது. வகுப்பறைகளின் எண்ணிக்கையும் அதிகளவில் அதிகரித்து விட்டது.

க. பொ. த உயர்தரப் பிரிவுகளில் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞான பாடங்கள் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகின்றன. எனினும் மாணவர்களின் தேவைக்கு ஏற்ப இங்கு வகுப்பறைகளோ பிரதான பௌதிக வளம்பற்றாக் குறையாகக் காணப்படுகின்றது.

2018 இல் ஒரு வகுப்பறைக் கட்டடத்தைப் பெற்றுக் கொள்ள பாரிய முயற்சிகள் செய்து அது நிறைவேறிய போதிலும் பின்பு அது கிடப்பில் போடப்பட்டது. அதன் பின்பு மாணவர்களின் அதிகரிப்புக்கு ஏற்ப வளங்களைப் பெற்றுக் கொள்ள பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விசேடமாக இந்த நாட்டில் காணப்படுகின்ற வெளிநாட்டு நிறுவனங்கள் அதிகாரிகள் போன்ற நபர்களை நாங்கள் சந்தித்தோம்.

குறிப்பாக பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து நாங்கள் பல இடங்களுக்குச் சென்றோம். அவர்கள் அதற்கு உதவிகள் செய்வதாக வாக்களித்த போதிலும் அது நிறைவேறவில்லை. அதன் பின்பு வெளிப் பகுதிகளிலுள்ள சில தனவந்தர்களைச் சந்தித்தோம். அவர்களும் பல்வேறு வாக்குறுதிகளைத் தந்து விட்டு பல்வேறு சிக்கல்கள் காரணமாக அவை நிறைவேறாமல் போனது.

அதிலும் குறிப்பாக பானகமுவ என்ற பெயரைக் கேள்விப்படும் பொழுது உதவி செய்ய முன்வருவது குறைவு. காரணம் என்னவென்றால் பானகமுவ கிராமம் என்பது இலங்கையில் ஒரு வளமிக்க கிராமம் என்ற வகையில் மக்களால் மதிக்கப்படுகிறது. அது உண்மைதான்.

இதனால் பொருளாதார ரீதியாக உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் பல சிரமங்கள் காணப்பட்டன. இவற்றை நாங்கள் கருத்திற் கொண்டு நீண்ட காலமாக பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் , பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள், ஊரில் உள்ள மிக முக்கிய பிரமுகர்கள் எனப் பல தரப்பினர்களுடன் பல்வேறு இடங்களில் கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தோம். அதாவது குறிப்பாக நமது பிரச்சினைகளுக்கு நமக்கு நாமே என்ற தொனிப்பொருளில் நாமே தீர்வு காண வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். அப்பொழுதுதான் இந்தப் பிரச்சினைக்கு தீர்வை இலகுவாகக் காண முடியும் என்பது மட்டுமல்ல எமது வளங்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும். அதேநேரம் எங்கள் ஊரில் உள்ள செல்வந்தர்களுக்கு ஒரு நிரந்த உதவியினைச் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்ற அடிப்படையில் எமது பழைய மாணவர் சங்கம் இந்தப் பாரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

பானகமுவ மக்களைப் பொறுத்தவரையில் சிறந்ததொரு பழைய மாணவர் சங்கத்தை நீங்கள் வைத்துக் கொண்டுள்ளீர்கள் எனலாம். எங்களுடைய கல்லூரியின் வளர்ச்சிக்கும் கல்லூரியின் எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் இச்சங்கம் மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருப்பதோடு மிகவும் சிறந்த முறையில் அர்ப்பணிப்போடு பாடுபட்டு வருகின்றது.

இந்த கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக அதாவது இரு வகுப்பறைக் கட்டடத் தொகுதியும் ஒரு கேட்போர் கூடமும் எட்டு கோடி செலவில் நிர்மாணிப்பதற்கான ஒரு பாரிய வேலைத் திட்டத்தை மேற்கொள்ள பழைய மாணவர் சங்கம் முன் வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயம். வடமேல் மாகாணத்தில் பழைய மாணவர்களினால் எந்தவொரு பாடசாலையிலும் இவ்வாறானதொரு பாரிய வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட வில்லை என்று கூறுமளவுக்கு இவர்களுடைய பங்களிப்பு அமைந்துள்ளது. அந்தத் திட்டத்தை நாங்கள் சிறப்பாக நிறைவேற்றுவோம் என்றால் வடமேல் மாகாணத்தில் இப்பாடசாலை பலம் வாய்ந்த ஒரு பாடசாலையாகவும் பலம்வாய்ந்த ஒரு பழைய மாணவர் சங்கமாகவும் குறிப்பிட முடியும் என்று கட்டட நிர்மாணப் பணிகளுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளவதற்காக எமது கல்விப் பணிமனையின் அதிகாரிகளைச் சந்திக்கச் சென்ற போது அங்குள்ள உயர் அதிகாரிகள் இவ்வாறு கூறி வியப்புற்றார்கள். அவர்கள் இந்தப் பணத்தை நீங்கள் எவ்வாறு திரட்டப் போகின்றீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு எமது பழைய மாணவர்கள் சங்கம் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டதுடன் ஊர் மக்களுடைய ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டுள்ளனர் என்று நான் பதிலளித்தேன்.









உண்மையில் இதற்கான முழுமையான ஒத்துழைப்பையும் ஊர் மக்கள் செய்கின்றார்கள். ஒட்டுமொத்த செல்வந்தர்களும் பாடசாலை என்ற மகுடத்தின் கீழ் ஒன்று பட்டுள்ளமை பாராட்டத்தக்க அம்சமாகும். முழு பானகமுவவுக்கும் ஒரே ஒரு பாடசாலைதான் இருக்கிறது. இப்பாடசாலையினை ஒரு தேசிய பாடசாலை வரைக்கும் படிப்படியான தகைமைகளை உயர்த்திக் கொண்டு வந்துள்ளோம்.

குறிப்பாக க. பொ. த உயர்தரப் பிரிவுகளில் கணிதம், விஞ்ஞானம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு இது ஒரு வன் ஏ.பி பாடசாலையாக பரிணமித்து விட்டது. எனவே இந்தக் கல்வி வலயத்தில் காணப்படக் கூடிய மிக முக்கியமான தமிழ் மொழி மூலப் பாடசாலை இதுதான். க. பொ. த உயர்தரத்தில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.தரம் ஐந்து, க. பொ. த சாதாரண தரம் போன்ற பாடங்களைக் கற்பதற்கான வெளிப்பகுதிகளிலுள்ள மாணவர்களும் கல்வி பயில்கிறார்கள்.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களில் தரம் 09க்கு மேல் கல்வி பயிலுவதற்காக அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த வகுப்பறைக் கட்டடத் தேவைகள் முழுமையாக நிறைவேறி விட்டால் இன்னும் ஒரு 20 வருட காலத்திற்கு பாடசாலைக்குரிய வகுப்பறைக் கட்டடத் தேவைகள் அவசியமில்லை. வேறு தேவைகள் இருக்கின்றன. அவற்றை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.இம்மையிலும் மறுமையிலும் வெளிச்சத்தை ஏற்படுத்தக் கூடிய இவ்வாறான நிகழ்வில் கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### பானகமுவ சமாதான அமைப்பின் தலைவரும் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினருமான எம். எம். தஸ்லிம்

இன்று உலகில் உள்ள முழு நாடுகளும் கல்விக்காகவே செலவு செய்கின்றன. நாடுகள் மட்டுமல்ல ஒவ்வொரு குடும்பத்திலும் இன்று கல்விக்காக செலவு செய்வது முதன்மை பெற்றுள்ளது. ஒரு காலத்தில் எமது சாதாரண வருமானத்தில் முதலாவதாக சாப்பாட்டுக்காக ஒரு தொகையினை ஒதுக்கிவிடுவோம். இரண்டாவது உடு துணிகள். அதற்குப் பின் பிரயாணங்கள், அத்துடன் ஒரு வீட்டில் ஆண் பிள்ளை ஒருவர் இருந்தால் அவருக்கு மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்தல், பெண் பிள்ளைகளுக்கு ஒரு தொகையை ஒதுக்கி வைத்து விடுவோம். மிகுதி இருந்தால் மட்டும்தான் கல்விக்கு ஒதுக்கீடு செய்வோம். இன்று அந்த சூழல் இல்லை. சாப்பாடு இல்லா விட்டாலும் முதலில் கல்விக்காகத் தான் ஒதுக்கீடு செய்கிறார்கள். அந்தளவுக்கு உலகம் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. இன்றுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் உலகத்தோடு போட்டி போடுமளவுக்கு அறிவு இருத்தல் வேண்டும். ஆதலால் எங்களுடைய பிள்ளைகளைத் தயார் செய்ய வேண்டி இருக்கிறது.

எங்கள் ஊரில் உள்ள மிகப் பிரதான வளம் எமது பாடசாலையாகும். எங்களுடைய ஊரை முன்னேற்ற வேண்டும் என்றால் எங்களுடைய பாடசாலைதான் மிக முக்கியமானது. அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. எங்கள் குடும்பத்தை, பிள்ளைகளை, ஊரை முன்னேற்ற வேண்டும் என்றால் இது ஒன்றினால் மட்டும்தான் முடியும். நீங்கள் பாடசாலைக்குச் செய்யும் உதவிகள் மிகப் பெறுமதிமிக்கது. அக்காலத்தில் இந்த ஊர் மிகவும் பின்தங்கிய பிரதேசமாகும். எங்களது உம்மாமார்கள் பகல் சோறு சமைக்கின்ற போது பள்ளிக்கென கையால் ஒரு பிடி அரிசியை எடுத்து வைப்பார்கள். அப்பொழுது எல்லா வீடுகளிலும் கோழி வளர்ப்பார்கள். ஒரு நாளைக்கு மூன்று நான்கு கோழிகள் முட்டையிட்டால் அதில் ஒரு முட்டையை பள்ளிக்கென்று எடுத்து வைப்பார்கள். அவ்வாறுதான் அக்கால கட்டத்தில் இங்குள்ள பள்ளிகள் நிர்மாணிக்கப்பட்டன. ஆனால் இன்றைக்கு பலர் அதற்காக முன் வந்து உதவி செய்கிறார்கள்.

எங்களுடைய தேவை குறித்து வேறு ஊர் மக்களிடம் சென்று கையேந்தவில்லை. குருநாகல் மாவட்டத்தில் 160 கிராமங்கள் உள்ளன. ஆனால் எங்களுடைய பானகமுவ என்ற ஊர் தனித்துவமான தன்மையுடன் செயற்பட்டு வருகிறது. எங்களுடைய ஊர் தேவைகளுக்கு பிற ஊர்களுக்குச் சென்று பணம் அறவிடுவதில்லை. பள்ளிவாசல்களாக இருந்தாலும் சரி பாடசாலைகளை மீள் புனர்நிர்மாணம் செய்வதாக இருந்தாலும் சரி நாங்கள் வெளியே சென்று உதவிகள் கேட்டதில்லை. எங்களுடைய அனைத்து தேவைகளையும் எங்கள் ஊர் மக்களின் ஊடாகவே நிறைவு செய்து வருகின்றோம். இது இறைவன் எங்களுக்கு வழங்கிய அருட்கொடை என்று கூறலாம். கொடுக்கின்ற மனம் இருப்பதன் காரணமாகத்தான் இந்த ஊரிலே எத்தனையோ செல்வந்தர்கள் உருவாக்கி இருக்கின்றார்கள். யார் கொடைகளை அள்ளி வழங்கி வருகின்றார்களோ அந்த கொடைகளுக்கு மேலதிமாக இன்னுமின்னும் பெருகிக் கொண்டுதான் செல்லும். நாங்கள் பணத்தை வாரி வழங்குவதன் மூலம் தங்களுடைய பணம் குறைந்து போய் விடும் என்று யாரும் நினைக்கக் கூடாது.அந்தச் செல்வம் கூடிக் கொண்டுதான் போகும்.

தர்மம் தலைகாக்கும் என்பார்கள். பாரிய விபத்துக்களில் இருந்து பாதுகாப்பது இந்த தர்மங்கள்தான். நோய் நொடிகளில் இருந்து பாதுகாப்பும் கிடைக்கும். பாடசாலைகளுக்கு வழங்கும் கொடைகள் குறித்து நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. நீங்கள் உங்களுடைய தகுதிக்கு ஏற்றவாறு செய்யுங்கள். குறைந்தது ஒரு செங்கல்லையாவது வழங்குங்கள். உங்கள் மனதில் உள்ள எண்ணத்தை இறைவன் பார்ப்பான். இது என்னுடைய பிள்ளைகள் படிக்கின்ற பாடசாலை. எமது பரம்பரைகள் படிக்கின்ற பாடசாலை. எதிர்காலத்தில் இந்தப் பாடசாலை நல்ல உயர் நிலை அடைய வேண்டும் என்ற சிந்தனை ஒவ்வொருவருடைய மனதிலும் எழ வேண்டும்.

நாம் இப்பொழுது அரசாங்கத்தை நம்பி இருக்க முடியாது. நமக்கு நாமே தான் உதவ வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### பானகமுவ சமாதான அமைப்பின் முன்னாள் தலைவர் சமூக சேவையாளர் ஏ. பி. ஏ. மலிக்

பானகமுவ அந்நூர் பழைய மாணவர்கள் எம்மை இவ்விடத்திற்கு அழைத்து கண்ணியப்படுத்துவதற்கான ஒரு நோக்கம் இருக்கிறது.

நாம் மரணிக்கும் போது இந்த ஊருக்கு என்ன செய்தோம். இந்தப் பாடசாலைக்கு என்ன செய்தோம். இந்த நாட்டுக்காக என்ன செய்தோம். நம்மோடு சேர்ந்து வாழும் மக்களுக்காக என்ன செய்தோம். எமது ஊர் பாடசாலையின் கல்வி வெளிச்சத்திற்காக நாம் ஏதாவது செய்தோமா அப்படிச் செய்திருந்தால் நாம் உலகை விட்டுப் பிரிந்து செல்லும் போது நாம் சிரித்துக் கொண்டு செல்லலாம்.

நாங்கள் இந்த உலகத்தை விட்டுச் செல்லும் போது இந்த மனிதன் இந்த உலகத்தில் இன்னும் கொஞ்சம் நாள் வாழ்ந்து இருக்கக் கூடாதா, இவரால் நமது சமூகத்திற்கு நல்லது நடந்து இருக்காதா என்று மக்கள் எல்லோரும் அழ வேண்டும். கண்ணீர் வடிக்க வேண்டும். அத்தகைய ஏற்பாடு ஒன்றைத்தான் எமது பழைய மாணவர் சங்கத்தினர் செய்திருக்கிறார்கள்.









இதற்காக யார் யாரெல்லாம் பங்காளிகளாக இருக்கின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள்புரிய வேண்டும். நமக்கிடையே ஒற்றுமை என்னும் கயிற்றைப் பற்றிப் பிடித்து எங்களுக்கிடையே காணப்படும் வேற்றுமைகளைக் களைந்து இது எங்களது ஊர் நாம் பிறந்த மண் எமது தாய் தந்தையர்கள் பிறந்த மண். நாங்கள் எல்லோரும் இந்தப் பாடசாலையில் படித்தவர்கள் எமது மக்கள் எல்லோரும் இங்கே படிக்க வேண்டும் என்ற தூய்மையான எண்ணத்தோடு இந்தப் பாடசாலையை கட்டி எழுப்புகின்ற நோக்கத்தோடு நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் எம். எம். அஹ்மட் ரஸ்மி

2020ஆம் ஆண்டு எட்டாம் மாதம் முதல் இதுவரையிலும் 54 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எம்மோடு தோளோடு தோள் நின்று செயற்பட்ட பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுக்கும் இப்புதிய வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பும் நல்லாதரவும் வழங்கிய செல்வந்தர்கள், பெற்றோர்கள், ஊர் மக்கள் அனைவருக்கும் எமது பழைய மாணவர் சங்கம் சார்பாக அனைவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்பால் அலி...





# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

புலமைப் பரிசில் பரீட்சை தரம் - 5
பகுதி – II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**I. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடைதருக.**

சிங்கத்தின் வீட்டில் கொண்டாட்டம்
சிறுத்தைகள் எல்லாம் பெருங்கூட்டம்

சிலந்தி கட்டும் வலை
குரங்கு கட்டும் மாலை

ஒட்டகம் கொட்டகை ஆக்கும்
சிவிங்கி சரங்கள் தூக்கும்

கரடி கொட்டும் மேளம்
குதிரை தட்டும் தாளம்

1. மேலே உள்ள பாடலில் மாலை கட்டும் விலங்கு எது?

…………………………………………………………………………………………

2. பாடலிலுள்ள பிராணிகளில் பாலைவனத்தில் பயணம் செய்யும் விலங்கு எது?

…………………………………………………………………………………………

3. பாடலிலுள்ள பண்புப் பெயர் ஒன்றினை தருக.

…………………………………………………………………………………………

4. பாடலில் இடம்பெற்ற வாத்தியக் கருவிகளின் பெயர்களை எழுதுக.

…………………………………………………………………………………………

5. வீட்டில் என்பதற்கு ஒத்தகருத்து தருக.

…………………………………………………………………………………………

6. பெருங்கூட்டம் என்பதனை பிரித்து எழுதினால்

…………………………………………………………………………………………

**II. பின்வரும் பழமொழிகளைப் பூரணப்படுத்துக.**

7. அடம்பன் கொடியும் ………………………………………………………………

8. யானைக்கொரு காலம் வந்தால் …………………………………………………

9. ஐந்தில் வளையாதது …………………………………………………………………

**III. சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

10. மல்லிகைப்பூ சினைப் பெயராகும் (……)

11. மாணவர்கள் உயர்திணை பன்மை பெயர்ச்சொல்லாகும் (……)

12. 'கவிதா' பொருட்பெயராகும் (……)

**IV. பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் அமைக்குக.**

13. கிழக்கு / சூரியன் / பந்து / மிளிர்கிறான் / செந்நிற / வானில் / போல

…………………………………………………………………………………………

14. பிரவீன் / எழுதினான் / கணித்து / கணக்குகளை / புத்தகத்தில் / உள்ள

…………………………………………………………………………………………

**V. பின்வரும் பிராணிகளின் இளமைப் பெயர்களை எழுதுக.**

15. i. தவளை - ………………………… ii. கரடி - ………………………………
iii. சிங்கம் - ………………………… iv. புலி - ………………………………

16. உள்ளீட்டு மரபுப் பெயர்கள்
i. பலா - …………………………… ii. பயறு - ……………………………
iii. அவரை - ………………………… iv. கற்றாளை - …………………………

17. சுதந்திரமற்று வாழ்பவன் ……………………………………………………………

18. ஒத்தகருத்து சொல்லை தெரிந்தெடுக்க
i. அரவம் (பாம்பு / சனம் / சாந்தம்)
ii. கல்வி (மலை / வித்தை / செல்வம்)

19. பின்வரும் தமிழ் சொற்களின் ஆங்கில கருத்தை எழுதுக.
i. புதன்கிழமை - …………………… ii. அறுபது - ……………………

20. பின்வரும் வாக்கியங்களின் சிங்கள கருத்தை தமிழ் மொழியில் எழுதுக.
i. உங்களுக்கு என்ன வேண்டும்? ………………………………………………
ii. நேரம் என்ன? ………………………………………………………………

**VI.**

21.




மேலே வரைபில் ஒரு நாளில் சந்தையில் விற்கப்பட்ட பழங்களின் எண்ணிக்கை காட்டப்பட்டுள்ளது.

i. மாவை விட பலாப்பழம் எத்தனை அதிகமாக விற்கப்பட்டது?

…………………………………………………………………………………………

ii. விற்கப்பட்ட மொத்த பழங்களின் எண்ணிக்கை யாது?

…………………………………………………………………………………………

iii. குறைவாக விற்கப்பட்ட பழவகை எது?

…………………………………………………………………………………………

22. ஒரு முகவையில் 6 *l* 750 ml பால் இருந்தது. மற்ற முகவையில் 2 *l* 400 ml பால் இருந்தது. மொத்த பாலின் அளவு யாது?

…………………………………………………………………………………………

23. 99999 இதனை எண் பெயராக எழுதினால்?

…………………………………………………………………………………………

24. 2878, 3348, 4348, 3433 இதனை ஏறுவரிசையில் எழுதுக.

…………………………………………………………………………………………

25. 

இக்கடிகார முகம் காட்டும் நேரம் இரவு எனில் இதனை நியம நேரமாக எழுதிக் காட்டுக.

…………………………………………………………………

26. 2 kg 250g கடலை ரூபாய் 1350.00 எனில், 1kg கடலையின் விலை என்ன?

…………………………………………………………………………………………

27. 6, 12, 24, 48, ……… எண் தொடரை பூரணப்படுத்துக.

28.




இவ்விரு எண் சட்டங்கள் காட்டும் எண்களையும் கூட்டினால் கிடைப்பது

…………………………………………………………………………………………

29. 750 இதன் 1/3 பங்குடன் 75 ஐக் கூட்டி 5 ஆல் வகுத்தால் கிடைக்கும் எண் யாது?

…………………………………………………………………………………………

**VII. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. பீதுருதாலகால மலை அமைந்துள்ள மாவட்டம்
i. கொழும்பு ii. நுவரெலியா iii. கண்டி

31. தேசிய இலட்சினையிலுள்ள தர்மசக்கரம் குறிப்பது
i. தார்மீகம் ii. நிலைத்திருப்பு iii. தன்னிறைவு

32. இலங்கையிலுள்ள நிர்வாக மாவட்டங்களின் எண்ணிக்கை
i. 25 ii. 23 iii. 22

33. இறக்கை இல்லாது உரோமத்தினால் மூடப்பட்ட பறவையினம் எது?
i. கிவி ii. வாத்து iii. கோழி

34. களனி கங்கை உற்பத்தியாகும் இடம் எது?
i. சிவனொளிபாத மலை ii. மத்திய மலை நாடு
iii. பதுளை

35. வெள்ளை நிறப் பூவானது
i. செவ்வந்தி ii. செவ்வரத்தை iii. நந்தியாவட்டை

36. தாவர இலைகளில் கூடமைக்கும் பிராணியானது
i. மைனா ii. தேனி iii. செவ்வெறும்பு

37. உணவை கொறித்து உண்ணும் பிராணியானது
i. கோழி ii. எலி iii. பூனை

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

38. குந்துகாலி என அழைக்கப்படும் பறவை
i. புளுணி ii. புறா iii. குருவி

39. உமிழ்நீரினை பயன்படுத்தி கூடமைக்கும் பிராணி
i. ஈசல் ii. சிலந்தி iii. வண்ணத்துப்பூச்சி

40. ரூபாய் 500 நாணயத்தாளிலுள்ள பிறெயில் புள்ளிகளின் எண்ணிக்கை
i. 5 ii. 3 iii. 2

41. பின்வருவனவற்றுள் கிராமிய விளையாட்டானது
i. வலைப்பந்து ii. கூடைப்பந்து iii. பல்லாங்குழி

42. ஒலிம்பிக் விளையாட்டில் நீல நிற வளையம் குறிப்பது
i. அமெரிக்காக் கண்டம் ii. ஐரோப்பாக் கண்டம் iii. ஆசியாக் கண்டம்

43. உதைப்பந்தாட்டப் போட்டியில் ஓர் அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கையானது?
i. 11 பேர் ii. 7 பேர் iii. 6 பேர்

44. நீண்ட நாட்கள் உயிர் வாழக்கூடிய பிராணியானது
i. யானை ii. கடலாமை iii. பாம்பு

45. கல்சியம் அடங்கியுள்ள உணவுகளை உட்கொள்வதனால் உடலுக்கு கிடைக்கும் நன்மையானது
i. எலும்புகள் வலுப்பெறல் ii. உடல் வளர்ச்சி
iii. உடல் பருமன்

46. வெடித்துப் பரவும் வித்தல்லாதது
i. காசித்தும்பை ii. பருத்தி iii. நெருஞ்சி

47. கோள் மண்டலத்திலுள்ள கோள்களின் மிகச்சிறிய கோளானது
i. வியாழன் ii. புதன் iii. செவ்வாய்

48. துறைமுகங்களில் கப்பல்கள் தரித்து நிற்பதற்காக பயன்படும் உபகரணமானது
i. கப்பி ii. நங்கூரம் iii. தகடுகள்

49. தாமதமாக முளைக்காத வித்து
i. கடுகு ii. தக்காளி iii. கத்தரி

50. இலங்கைகேயுரிய முலையூட்டி விலங்கானது
i. குரங்கு ii. புலி iii. சருகுமான்

51. ஒரு தடவை மட்டும் காய்க்கும் தாவரமானது
i. வாழை ii. மா iii. தென்னை

52. தூய நீரின் தன்மையானது
i. நிறமுள்ளது ii. சுவையுள்ளது iii. மணமற்றது

53. வாகனம் ஒன்றின் தடுப்பு பிரயோகிக்கப்படும் போது ஒளிரும் விளக்கின் நிறமானது
i. மஞ்சள் ii. சிவப்பு iii. வெள்ளை

54. 
இப்படத்தில் காணப்படும் ஓவியமானது
i. சிகிரியா சுவரோவியம்
ii. இசுறுமுனி படம்
iii. எம்பக்க தேவாலயம்

55. ஆறு கடலுடன் கலக்கும் இடம் அழைக்கப்படுவது
i. கழிமுகம் ii. கடல்நீரேரி iii. துறைமுகம்

56. அதிக எண்ணிக்கையுடைய மாவட்டங்களைக் கொண்ட மாகாணத்தின் பெயரானது
i. வடமேல் மாகாணம் ii. வடமாகாணம் iii. கிழக்கு மாகாணம்

57. பிராணிகளிடமிருந்து பெறப்படும் மிகப்பெறுமதி வாய்ந்த பொருளானது
i. பால் ii. முத்து iii. தேன்

58. தேசியகொடியில் காணப்படும் அரச இலைகளின் நிறமானது
i. மஞ்சள் ii. பச்சை iii. சிவப்பு

59. தளபாடங்களை அமைக்கப் பயன்படும் தாவர வகையானது
i. தென்னை ii. பனை iii. தேக்கு

60. நான் எனது பாடசாலையின் அதிபரானால் என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

## கடந்த வார (28.04.2023) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 1 | 11. 1 | 21. 3 | 31. 1 |
| 2. 3 | 12. 2 | 22. 1 | 32. 2 |
| 3. 2 | 13. 2 | 23. 2 | 33. 1 |
| 4. 1 | 14. 3 | 24. 3 | 34. 2 |
| 5. 2 | 15. 2 | 25. 2 | 35. 3 |
| 6. 2 | 16. 1 | 26. 1 | 36. 2 |
| 7. 1 | 17. 2 | 27. 2 | 37. 1 |
| 8. 1 | 18. 1 | 28. 1 | 38. 3 |
| 9. 3 | 19. 2 | 29. 1 | 39. 1 |
| 10. 1 | 20. 3 | 30. 3 | 40. 3 |

# 16 வயது மாணவியின் மர்ம மரணம்

வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஆயிரமாயிரம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஒளிந்து கொண்டிருந்த அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க களுத்துறை போதி விகாரையின் உச்சத்தில் தோன்றிய சித்திரை பௌர்ணமி நிலவின் மாலை ஒளியும் அச் சுற்று வட்டாரத்தை மென் மேலும் மெருகூட்டிக் கொண்டிருக்க, களுத்துறை போதி விகாரைக்கு மிகவும் அண்மையிலேயே கடலுடன் சங்கமிக்கும் களுகங்கை கடலில் இருந்து வீறுகொண்டு எழுந்து வரும் கடல் அலைகளை கட்டுப்படுத்தி மெல்லிய ஓசையுடன் கடற்கரையுடன் முட்டி மோதி கடலுடன் ஒன்றறக் கலந்துக் கொண்டிருந்தது.

வார நாட்களில் மிகவும் பரபரப்பாக இயங்கிவரும் தெற்கு கரையோரப் புகையிரத வீதி அன்றைய தினம் விடுமுறை என்பதால் என்னவோ ஓரளவு அமைதியாகவே காணப்பட்டது. எனினும் அச்சந்தர்ப்பத்தில் காற்றலையை கிழித்துக் கொண்டு காலி நோக்கி அகோர ஒலியெழுப்பிக் கொண்டு கடந்துச் சென்ற அந்த புகையிரதத்தின் சத்தத்திலும் கூட அவளால் எழுந்திருக்க முடியவில்லை. ஏனெனில் அவளது இறுதி மூச்சு காற்றுடன் கலந்து உயிரற்ற நிர்வாண தேகம் மட்டுமே புகையிரத வீதியின் ஓரமாக அமைதியாக துயில் கொண்டிருந்தது.

மே மாதம் 7ஆம் திகதி அதிகாலை காட்டுத் தீயாக பரவிய அச்செய்தியால் களுத்துறை பிரதேசவாசிகளை மட்டுமின்றி இலங்கையர் அனைவரினதும் மனதில் ஒரு கனம் சோகத்தை குடிகொள்ள வைத்தது அந்த மலர்ந்தும் மலராத 16 வயது பாடசாலை மாணவியின் மர்ம மரணம். இதனை கேள்விப்பட்ட அனைவரும் அவள் மூன்றாவது மாடியில் இருந்து கீழே தள்ளி கொலை செய்யப்பட்டாளா? அல்லது கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டாளா? ஒவ்வொருவரும் தன்னைத்தானே கேட்டுக் கொண்ட முதல் கேள்வி. பிரதேசவாசிகள் ஒவ்வொருவரினதும் முகத்தில் ஏதோ ஒரு சோகம் வெளிப்படையாகவே தெரிந்தது. ஆம், அவள் தான் டிஹாரா நிர்மாணி நிஷங்க த சில்வா. களுத்துறை நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரபல மகளிர் பாடசாலை ஒன்றில் 11 ஆம் தரத்தில் கல்வி பயின்று வந்த மிகவும் திறமையான மாணவிகளில் ஒருவர் அவர். பதினாறு வயது பருவ மங்கை. இவர் களுத்துறை போதனா வைத்தியசாலை அமைந்துள்ள நாகொட பகுதியில் வசித்து வரும் நடுத்தர குடும்பம் ஒன்றில் ஒரே மகளாக பிறந்தவர். இவருக்கு மேலும் இரு சகோதரர்களும் உள்ளனர்.

கடந்த மே மாதம் 06 ஆம் திகதி இவளது பாடசாலையிலேயே உயர் தரத்தில் கல்வி





பயின்று வரும் பபாரா என்ற நெருங்கிய நண்பி ஒருவருடன் களுத்துறை நகரில் காணப்படும் வெசாக் அலங்காரங்களை கண்டு களிப்பதற்கும் அதேநேரம் வெசாக காலங்களில் வீதியோரங்களில் வழங்கப்படும் அன்னதான நிகழ்வுகளில் கலந்துக் கொள்ளவும் டிஹாரா தனது தாயாரிடம் அனுமதி கோரியுள்ளார். எனினும் டிஹாராவின் தாயார் அதனை நிராகரித்த போதிலும் இறுதியில் மகளின் விடாப்பிடியான வற்புறுத்தல் காரணமாக மகளது ஆசையை நிறைவேற்றும் நோக்கில் அரைமனதுடன் ஒத்துக்கொண்டு தானசாலைக்கு போக அனுமதியும் வழங்கியுள்ளார். இதனிடையே ஏற்கனவே திட்டமிட்டபடி டிஹாராவுக்கு ஆள் அடையாள அட்டை இல்லாத காரணத்தால் மற்றொரு நண்பியின் ஆள் அடையாள அட்டையையும் பெற்றுக்கொண்டு இருவரும் களுத்துறை மாநகரத்தை வந்தடைந்தனர்.

அந்தி மயங்கும் மாலை நேர வெசாக் பௌர்ணமி தினம் என்பதால் களுத்துறை போதி விகாரையில் அலங்கரிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான வர்ண மின்குமிழ்கள் மிகவும் பிரகாசமாக ஒளிர்ந்துக் கொண்டிருந்தன. ஆங்காங்கே பக்தி கீதங்கள் ஒலிக்க தானசாலைகள் மற்றும் மின் அலங்காரங்களாலும் களுத்துறை நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. இந்நிலையில் பபாரா உடன் டிஹாரா களுத்துறை நகரை வந்தடைந்த போது அங்கே பபாராவின் காதலன் இஷான் காரில் கயான் உடன் வந்து இவர்களின் வருகைக்காக காத்திருந்தான்.

பின்னர் நால்வரும் இணைந்து சுமார் 6.30 மணியளவில் களுத்துறை நகரின் முச்சந்தி என்றழைக்கப்படும் பகுதிக்கு அண்மித்து காணப்படும் களுத்துறை களப்பு பகுதிக்கும் பிரதான காலி வீதிக்கும் இடைப்பட்ட புகையிரத தண்டவாளத்திற்கு மிகவும் அருகாமையில் அமைந்துள்ள ஐந்து மாடிக் கட்டிடத்தில் தற்காலிகமாக தங்கக்கூடிய ஏழு அறைகளை கொண்ட சிறிய ஹோட்டல் ஒன்றுக்கு சென்றுள்ளனர். அங்கு நால்வரும் தங்குவதற்கு ஒரு அறை தேவைப்படுவதாக அவர்கள் கூறியுள்ளார். எனினும் ஹோட்டல் நிர்வாகம் நால்வருக்கும் ஒரேயொரு அறை வழங்க முடியாது தேவைபடுமாயின் இரண்டு ஜோடிகளுக்கும் வெவ்வேறு இரு அறைகளில் தங்கலாம் என தெரிவித்துள்ளனர். இதனடிப்படையில் ஒரு குளிரூட்டப்பட்ட அறையும் குளிரூட்டல் வசதி இல்லாத மற்றுமொரு அறையையுமாக 6ஆம் மற்றும் 7ஆம் இலக்க இரு அறைகளை பதிவு செய்து கொண்டுள்ளனர்.

இவ்வாறு அறைகளை பதிவு செய்து கொண்டு பின்னர் நால்வரும் குளிரூட்டப்பட்ட அறையில் ஒன்றுகூடி இந்த ஹோட்டலில் கீழ் தளத்தில் அமைந்துள்ள உணவு விற்பனை பகுதியில் இருந்து டெவல் சிக்கன் மற்றும் சமைத்த பன்றி இறைச்சி என்பவற்றை ஓடர் செய்து அறைக்குள் வரவழைத்துக் கொண்டு ஹோட்டலுக்கு வெளியில் இருந்து பிரத்தியேக முறையில் கொண்டு வந்த உயர் ரக மதுபானத்தை அருந்தியதை கண்டதாக ஹோட்டல் ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சுமார் 7.20 மணியளவில் இஷான் பபாரா ஜோடி இன்னும் அரைமணி நேரத்தில் மீண்டும் வருவதாக தெரிவித்து விட்டு ஹோட்டல் இருந்து விடைபெற்று அங்கிருந்து வெளியேறி உள்ளனர். அதே சமயம் 7.40 மணியளவில் கயானும் மீண்டும் வருவதாக கூறிவிட்டு அவசர அவசரமாக ஹோட்டலில் இருந்து வெளியேறி உள்ளான். இதனிடையே இஷானுக்கு தொலைபேசியில் தொடர்புக் கொண்ட கயான், டிஹாரா பைத்தியம் பிடித்தாற் போல் உடைகளை கலைந்து எறிந்து விட்டு ஜன்னலில் ஏறி வெளியே குதித்து விட்டதாகவும் சில நேரம் அவள் இறந்து இருக்கலாம். எனவே உடனே அவர்களை இங்கு வந்து அந்த உடலை அப்புறப்படுத்துமாறும் தான் ஏதாவது வெளிநாட்டுக்கு தப்பிச் செல்வதாகவும் கூறியதாகவும் சில தகவல்கள் மூலம் அறியக் கிடைக்கின்றது.

தன்னோடு வந்த டிஹாராவை தனியே விட்டு விட்டு செல்ல விரும்பாத பபாரா இஷானுடன் புகையிரத வீதி ஊடாக டிஹாராவை தேடிச் சென்றாள். செல்லும் வழியில் அவளது செருப்பு புகையிரத வீதியில் சிக்கிக் கொண்டதால் இஷான் மட்டும் முன்னோக்கி சென்று பார்த்த போது அவன் அங்கே கண்ட காட்சி ஒரு சில நிமிடங்கள் அவனை நிலைகுலைய வைத்தது. ஆம் அங்கே டிஹாராவின் அசைவற்ற நிர்வாண உடல் கண்களைத் திறந்த நிலையில் புகையிரத தண்டவாளத்தில் கிடந்தது. உடனடியாக தனது மேற்சட்டையை கலைந்து டிஹாராவின் உடலை மூடி புகையிரத தண்டவாளத்தில் இருந்து தூக்கி புகையிரத வீதி ஓரமாக வைத்து விட்டு பபாராவிடம் ஓடிச்சென்று நடந்தவற்றை கூறப் பயத்தால் கலவரமடைந்த இருவரும் களுத்துறை வடக்கு, விலேகொடை பகுதியில் அமைந்துள்ள இஷானின் வீட்டுக்கு நேரே சென்றனர். இதற்கிடையில் குறித்த ஹோட்டலில் இரண்டாவது மாடியில் உணவருந்த வந்து இருந்தவர்களில் ஒருவர் புகையிரத வீதியில் பெண் ஒருவர் வீழ்ந்து கிடப்பதாக ஹோட்டல் முகாமையாளருக்கு தெரிவித்ததை தொடர்ந்து 1990 அவசர ஆம்புலன்ஸ் சேவைக்கு தகவல் வழங்கப்பட்டது. உடனடியாக விரைந்து வந்து உடலை பரிசோதனை செய்த அம்புலன்ஸ் அதிகாரிகள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தை அடுத்து களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து களுத்துறை தெற்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ருவன் விஜேசிங்க தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையின் போது ஹோட்டலில் இருந்து தப்பிச் சென்ற பிரதான சந்தேக நபர் 29 வயதுடைய தனுஷ்க்க கயான் சாபந்து எனவும் இவருக்கு இரண்டு மனைவிமார் இருப்பதாகவும் இவர்களில் ஒருவர் பாணந்துறை பகுதியில் இரு பிள்ளைகளுடன் வசித்து வருவதாகவும் மற்றவர் களுத்துறை இசுரு உயன பகுதியிலும் வசித்து வருவதாக தெரியவருகின்றது.

இதன் போது ஹோட்டலில் இருந்து தப்பிச்சென்ற கயான் அவனது நண்பன் அஞ்சனவுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பண்டாரகம பகுதியில் குறித்த இடத்தில் தனது காரை விட்டுச் செல்வதாகவும் அதன் சாவி 'மட்காட்' க்கு அடியில் வைத்து இருப்பதாகவும் வந்து காரை எடுத்துச் சொல்லுமாறும் தெரிவித்துள்ளான். எனினும் காரை எடுத்துச்செல்லும் வழியிலேயே அஞ்சனவினை கைது செய்த பொலிசாரின் கவனம் பபாரா மற்றும் இஷான் மீது திரும்பியது. இருவரும் அன்றைய தினமே இரவோடு இரவாக களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸார் நீதிமன்றில் முறைப்பாடு செய்ததை யடுத்து, களுத்துறை பதில் நீதவான் பந்துல வீரசிங்க சம்பவ இடத்திற்கு வந்து உயிரிழந்தவரின் சடலத்தை பார்வையிட்டா ர். பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். அதன் அடிப்படையில் பிரேத பரிசோதனை செய்த உதவி தடயவியல் அலுவலர் டி. கே. வேணு ராஜித் வெளிப்படையான தீர்ப்பை வழங்கியதுடன், மேலதிக பரிசோதனைகளுக்காக டிஹாராவின் உடல் பாகங்களை அரசாங்க மரண விசாரணை அதிகாரி மற்றும் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி கூடத்திற்கு அனுப்புமாறு பரிந்துரைத்தார்.

உயிரிழந்த டிஹாராவின் தோழியான களுத்துறை நாகொடையைச் சேர்ந்த பபாரா அவரது காதலன் வடக்கு களுத்துறை விலேகொடவைச் சேர்ந்த இஷான், பிரதான சந்தேகநபரின் காரை எடுத்துச்சென்ற பேருவளை, வலத்தர பகுதியைச் சேர்ந்த அஞ்சன ஆகியோரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு களுத்துறை பதில் நீதவான் பந்துல வீரசிங்க உத்தரவிட்டார்.

06ஆம் பக்கம் பார்க்க...

நாராயணசாமி ஜெயரட்ணம்
களுத்துறை சுழற்சி நிருபர்

# கிழக்கின் குரல்





சிலோன் மீடியா போரத்தின் வேண்டுகோளுக்கிணங்க, நீதிக்கான மையத்தின் அனுசரணையுடன் ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (10) சாய்ந்தமருதில் இடம்பெற்றது. நீதிக்கான மையத்தின் தலைவர் சட்டத்தரணி ஸஹ்பி எச்.இஸ்மாயீல் மற்றும் உறுப்பினர்களால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்படுவதை படத்தில் காணலாம்.

(படம்: கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

## கிழக்கில் டெங்கு பரவும் அபாயம் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை

### அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தல்

**(முள்ளிப்பொத்தானை குறூப், கந்தளாய் தினகரன், அன்புவழிபுரம் தினகரன் நிருபர்கள்)**

டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக முன்னெடுக்க வேண்டுமென அதிகாரிகளுக்கும், சுகாதாரத் தரப்பினர்களுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பணிப்புரை விடுத்துள்ளார்.

மாகாண டெங்கு கட்டுப்பாட்டு செயலணியினருடன் புதன்கிழமை (10) திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரம் இதுவரை 1289 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், அதில் இருவர் உயிரிழந்துள்ளதாகவும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.ஜி.எம்.கொஸ்தா இக் கூட்டத்தின் போது தெரிவித்தார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடத்தில் இதுவரை 1368 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 1250 டெங்கு நோயாளர்களும், அம்பாறை மாவட்டத்தில் 77 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளதாக தெரிவித்த அவர், கிழக்கு மாகாணத்தில்



உள்ள அனைத்து அரச திணைக்களங்கள், பொது இடங்கள், பாடசாலைகள் மற்றும் அரச குடியிருப்பு தொகுதிகளை இலக்கு வைத்து டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் வகையில் எதிர்வரும் 16 ஆம் திகதியை விசேட மாகாண டெங்கு ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்துவதற்கும் செயலணி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அனிஸ்டஸ் ஜெயராஜாவின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு பேரிழப்பாகும்

### கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை அனுதாபம்

**(சாய்ந்தமருது விசேட நிருபர்)**



தமிழ், முஸ்லிம் சமூகங்களின் உறவுப் பாலமாக திகழ்ந்த எழுத்தாளர், பண்ணுரலாசிரியர் அனிஸ்டஸ் ஜெயராஜாவின் திடீர் மறைவு இரு சமூகங்களுக்கும் பேரிழப்பாக அமைந்திருக்கிறது என, கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை தெரிவித்துள்ளது.

பேரவை சார்பில் அதன் செயலாளர் செயிட் ஆஷிப் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முஸ்லிம் காங்கிரஸினதும் அதன் மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பினதும் அரசியல் எழுச்சிக்காக பெரும்பங்காற்றியுள்ள அமரர் அனிஸ்டஸ் ஜெயராஜா முஸ்லிம் அரசியலில் முக்கிய வகிபாகமாகத் திகழ்ந்திருக்கிறார்.

"அஷ்ரப்பின் அந்த ஏழு நாட்கள்", தென்கிழக்கு அலகு, மூன்று சமூகங்களினதும் முன்மாதிரி பூமி", "கிழக்கின் இதயம் தேசத்தின் உதயம்" போன்ற நூல்களை எழுதி வெளியிட்டிருப்பதன் மூலம் அனிஸ்டஸ் ஜெயராஜா என்கிற பெயர் முஸ்லிம்கள் மத்தியில் பிரபலம் பெற்றிருந்தது.

இவற்றுள் அஷ்ரப்பின் அந்த ஏழு நாட்கள் என்ற பரபரப்பான அரசியல் தகவல்களைக் கொண்ட நூல் மிகவும் ஜனரஞ்சகமாக அமையப்பெற்றிருந்ததுடன், முஸ்லிம் அரசியல் வரலாற்றில் தடம்பதித்த ஒரு புத்தகமாக பார்க்கப்படுகிறது.

## ஊடக கற்கை பாடத்தை தேர்ந்தெடுக்க நடவடிக்கை

**(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)**

கிழக்கு மாகாண பாடசாலைகளில் ஊடக மன்றங்கள் அமைக்கப்பட்டு ஊடக கற்கை பாடத்தை மாணவர்களை தேர்ந்தெடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

விருப்பத்திற்குரிய பாடங்களில் ஒன்றாக தகவல் ஊடகக்கற்கை பாடத்தை மாணவர்கள் தேர்ந்தெடுக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கையில், குறைவான மாணவர்களே இதற்கு தோற்றுவதாக குறிப்பிடுகின்றனர்.

தகவல் ஊடகத்துறை விருத்தியடைந்து வரும் நிலையில், மாணவர்கள் இந்த பாடத்தை தேர்ந்தெடுத்து சித்திபெறுவதன்மூலம் சிறந்த தொழில்வாய்ப்பை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெற முடியுமென தெரிவிக்கின்றனர்.

பல்கலைக்கழக நுழைவு, கல்விக் கல்லூரிகளுக்கான தேர்வுகளுக்கு இவ்வாறான பாடங்கள் முக்கியத்துவம் பெறுவதை நினைவூட்டுகின்றனர்.

## புவிச்சரிதவியல் பணியகத்தினால் பாதுகாப்பு தரப்பினருக்கு தெளிவூட்டல்

**(கல்லடி குறூப் நிருபர்)**



புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தின், கனியங்கள் மற்றும் சுரங்க வளங்கள் தொடர்பான சட்டத்தில் பின்பற்றப்படவேண்டிய விடயங்கள் தொடர்பான தெளிவூட்டல் செயலமர்வு, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தின், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய பொறியியலாளர் டபிள்யூ. எம்.ரி.யு. ஜயசிங்க தலைமையில், மண்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (10) இடம்பெற்றது.

சட்டவிரோத கனிமங்கள் அகழ்வை தடுப்பதற்கு தேவையான சட்ட ஆலோசனைகள் மற்றும் இவ் அகழ்வினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டது.

இத் தெளிவூட்டல் செயலமர்வின் போது விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிசார் பங்கு பற்றியதுடன், அவர்கள் கள விஜயங்களில் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் அதிகாரிகளினால் தெளிவுபடுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தின், பொலன்னறுவை மாவட்ட பிராந்திய அகழ்வு பொறியியலாளர் எச்.எ.சி.கே.டபிள்யூ.பண்டார, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தின் சட்டப் பிரிவின் உதவி பணிப்பாளர் ஈ.எச்.ஆர் பிரியந்த மற்றும் புவிச்சரிதவியலாளர் டபிள்யூ. ஏ. கயும் விக்கிரமசிங்க உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## மூதூரில் மாடுகள் திருட்டு

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட நாணல்சேனை கால்நடை வளர்ப்பு தோட்டக் கிராமத்தில் இருந்து, கடந்த ஒரு வார காலத்திற்குள் இரு பசுக்கள் மேய்ச்சல் நிலங்களில் இருந்து களவாடப்பட்டுள்ளதாக கால்நடை உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மேலும் இம்மாடுகளை தாம் இரவில் அடைத்து பாதுகாத்து காலையில் மேய்ச்சலுக்காக பண்வெட்டான், வண்ணாங்குழி மற்றும் பால்துறை போன்ற மேட்டு நிலங்களுக்கு சென்ற மாடுகளே களவாடப்பட்டுள்ளதாக உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

## டிப்பர் வாகன உரிமையாளருக்கு அபராதம்

**(பாலமுனை தினகரன் நிருபர்)**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெள்ளப்பாதுகாப்பு வீதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி, மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகன உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா முன்னிலையில் வியாழக்கிழமை (11)ஆஜர்படுத்திய போது 15,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

வாகன உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது.

## விவசாயிகளுக்கு அனைத்து கொடுப்பனவுகளும் வழங்கப்படும்

### விவசாய குழு கூட்டத்தில் தீர்மானம்

**(வாச்சிக்குடா விசேட நிருபர்)**

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் அனைவருக்கும் மானிய பசளை உள்ளிட்ட அனைத்து கொடுப்பனவுகளும் வழங்கப்படும் என பிரதேச விவசாய குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்ற பிரதேச விவசாய குழுக்கூட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதேச செயலாளர், வீணாக நீர் வெளியேற்றத்தை தடுத்து விவசாய செய்கைக்கு தேவையான நீரை வழங்குவதுடன் விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துவது அரச அதிகாரிகளின் கடமையாகும் என்றார்.

இதன்போது விவசாயிகளின் தேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டனர். இதற்கமைவாக பின்வரும் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.விவசாய செய்கையினை மேற்கொண்டுள்ள அனைவரும் இணைந்து யானைக்காவல் செய்கின்றவர்களுக்கான கொடுப்பனவை வழங்குவது எனவும், சாந்திபுரம் செல்லும் வீதியினை விவசாய அமைப்புக்களின் நிதிப்பங்களிப்புடன் சீரமைப்பது எனவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு அலிக்கம்பை கிராமத்தை சூழ்ந்துள்ள சிறு பற்றைகளை பொதுமக்கள் மற்றும் விவசாய அமைப்பு பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் அகற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## சாய்ந்தமருதில் நடமாடும் சேவை; மக்களின் பிரச்சினைக்கு உடனடி தீர்வு

**(கல்முனை குறூப் நிருபர்)**



சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொது மக்கள் நடமாடும் சேவையொன்று நேற்று 11 வியாழக்கிழமை இடம் பெற்றது. பொலிவேரியன் கிராமத்தில் அமைந்துள்ள மத்திய கலாசார மண்டபத்தில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் இடம் பெற்றது.

இந்நடமாடும் சேவையில் காணி, சமூக சேவைகள், சமூர்த்தி, மோட்டார் போக்குவரத்து, திட்டமிடல், கலாசாரம், மகளிர் அபிவிருத்தி, தேசிய அடையாள அட்டை, பொலிஸ், தேசிய வீடமைப்பு அதிகார சபை, பதிவாளர் திணைக்களம் மற்றும் சமநல சேவைகள் திணைக்களம் ஆகிய பிரிவுகள் கலந்து கொண்டு பொது மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் முதியோர் அட்டைகளும் சிலருக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், அங்கவீனமுற்ற நபர் ஒருவருக்கு சக்கர நாற்காலியும் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள பொது மக்கள் பலரும் கலந்து கொண்டு தங்களது தீர்க்கப்படாத நீண்ட கால பிரச்சினைகளை முன்வைத்து தீர்வுகளைப்பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முவஃபிகா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஏ.ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஐ.எம்.சம்சுதீன், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் கிளினிக் நோயாளர்களுக்கு தனியான கட்டடம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வருகை தரும் கிளினிக் நோயாளர்களுக்கான தனியான ஒரு பிரிவாக கிளினிக் கட்டடம் ஒன்று செவ்வாய்க்கிழமை (09) திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர். எஸ். சசிகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர் ஜி. சுகுணன் கலந்து கொண்டு புதிய கிளினிக் பிரிவினை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் சுகாதார பணிமனையின் உத்தியோகத்தர்கள், நோயாளர்கள், வைத்தியசாலை நிருவாகத்தினர் என பலர் கலந்து சிறப்பித்ததுடன் புதிய கிளினிக் கட்டட தொகுதி அமைக்கப்பட்டுள்ளதால், நோயாளர்கள் வைத்தியசாலை நிருவாகத்தினருக்கு நன்றிகளை தெரிவித்தனர்.

## அம்பாறை மாவட்ட இளைஞர்களுக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்பு

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



அம்பாறை மாவட்டத்திலுள்ள இளைஞர்களுக்கு தேசிய ஜனநாயக முன்னணியின் தலைவர் ருஷான் மலிந்த ஜப்பானில் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஜப்பானின் நகாயி குழுமமும், சகுராய் குழுமமும் இணைந்து இத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது. ஆறு மாதங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்ட இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அவர்களில் 300 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இக் குழு NAQ 5 தேர்வுக்கு அனுப்பப்பட்டு அவர்களில் முப்பத்தெட்டு (38) பேர் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

அவர்களில் அதிக மதிப்பெண் பெற்ற இருபத்தி இரண்டு பேர் கொண்ட முதல் குழு இந்த மாதத்திற்குள் ஜப்பானுக்கு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்று வருட பயிற்சி விசாவில் செல்பவர்களுக்கு பயிற்சி காலத்தில் மாதம் இலங்கை ரூபாவில் ஐந்து இலட்சம் கிடைக்கும். இம்மாதம் வெளியேறும் இளைஞர்களின் இறுதி நேர்காணலை நகாயி குழுமத்தின் தலைவர் கட்சுதோஷி நகாயி நடத்தினார்.

தெஹியத்தகண்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசிய ஜனநாயக முன்னணியின் தலைவர் ருஷான் மலிந்தவும் கலந்து கொண்டார்.

## நல்லிணக்கதை கட்டியெழுப்பும் முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**

சமூகங்களுக்கிடையிலான சமாதானத்தையும், சகவாழ்வையும் பேணி வருவதற்காக தேசிய சமாதானப் பேரவை அமுல்படுத்தும், மாவட்ட சர்வமதப் பேரவையின் செயற்பாடுகளை எதிர்வரும் ஆண்டும் செயற்படுத்துவதற்கான திட்ட முன் மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் செயலமர்வு மட்டக்களப்பில் புதன்கிழமை (10) இடம்பெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவைக்கான இணைப்பாளர் ஆர். மனோகரன் தலைமையில், மட்டக்களப்பு கூட்டுறவுக் கட்டிடத் தொகுதியின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இச் செயலமர்வில் இந்து, இஸ்லாமிய, பௌத்த சமூகங்களைச் சேர்ந்த மாவட்ட சர்வமதப் பேரவை



உறுப்பினர்களும் அதன் சமாதான செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வில் இன ஐக்கியத்தை கட்டிக்காக்கும் விடயங்கள் பற்றிய கரிசனைகள் முன்வைக்கப்பட்டன. சமூக நல்லுறவு, சகவாழ்வு, நல்லிணக்கம் ஆகியவற்றோடு வாழும் எதிர்கால இளம் சமூகத்தை உருவாக்குவதோடு, சமாதானத்தைச் சீர் குலைக்கும் எந்த நடவடிக்கையையும் முன் கூட்டியே அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் இணைப்பாளர் மனோகரன் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் குடிசன மதிப்பீட்டு கருத்தரங்கு



**யாழ். விசேட நிருபர்**

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (10) நடைபெற்றதுடன், எதிர்வரும் 2024ஆம் ஆண்டுக்கான குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பு தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலக தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரக் கிளையின் ஏற்பாட்டிலும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் தொகை மதிப்பு மாவட்ட ஆணையாளருமான அ.சிவபாலசுந்தரனின் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது. இதன்போது, எதிர்வரும் 2024ஆம் ஆண்டுக்கான 15ஆவது குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கான தொகை மதிப்பு ஆணையாளர் மற்றும் பிரதித் தொகை மதிப்பு ஆணையாளர்களுக்கான தொகை மதிப்புத் திட்டங்கள், தொகை மதிப்பின் அமைப்பு, தொகை மதிப்பீட்டின் கடமைகள் மற்றும் பொறுப்புகள், காலவரையறை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

இந்தக் கருத்தரங்கில் தொகை மதிப்புத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் அனோஜா செனவிரட்ண, தொகை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் கள முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.எச். மன்சூர், பிரதிப் பணிப்பாளரும் மாவட்ட இணைப்பாளருமான மஞ்சுள ஏக்கநாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## யாழ்ப்பாணத்தில் கைதி உயிரிழப்பு

**யாழ். விசேட, சாவகச்சேரி விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதியொருவர் நேற்று வியாழக்கிழமை (11) உயிரிழந்துள்ளார்.

உடுவில், மல்வம் பிரதேசத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான 32 வயதுடைய யோகராசா கஜன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுநீரகப் பாதிப்பு காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த சில வாரங்களாக இவர் சிகிச்சை பெற்று வந்ததாகவும் இந்நிலையில், சிகிச்சை பலனின்றி இவர் உயிரிழந்துள்ளதாகவும், வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

## கேப்பாபிலவில் உள்ளூர் துப்பாக்கியுடன் ஒருவர் கைது



**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேப்பாபிலவு காட்டுப்பகுதியில் உள்ளூர் துப்பாக்கி மற்றும் 20 லீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரை கடந்த செவ்வாய்க்கிழமை (09) மாலை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய அவ்விடத்துக்குச் சென்று புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபரைக் கைது செய்துள்ளதுடன், இவரிடமிருந்து துப்பாக்கியையும் கசிப்பையும் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்டுள்ள துப்பாக்கி மற்றும் கசிப்புடன் சந்தேகநபரை முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

இச்சந்தேகநபரிடம் முள்ளியவளை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

*கல்வி அமைச்சு - ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி*

## 2023/2024 ஆம் ஆண்டிற்கான சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்விப்பத்திரம் கோரல்

ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் 2023/ 2024 ஆம் ஆண்டிற்கான சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் தகைமையுடைய நிறுவனத்திடமிருந்து கேள்விச் சபையின் தலைவரினால் 2023-05-26 திகதி மு.ப 11.30 மணிவரை கோரப்படுகிறது. அன்றைய தினம் பி..ப 2.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கட்டிட வசதி, மேசை, கதிரை, மற்றும் தண்ணீர் வசதி இக்கல்லூரியினால் வழங்கப்படும். கல்லூரியின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரிய பயிலுனர்களுக்குத் தேவையான உணவு வகைகள், காகிதாதிகள் மற்றும் தேவையான பொருட்களை விற்பனை செய்ய முடியும் என்பதுடன், அப்பொருட்கள் விசேட சலுகை விலைகளுக்கே விற்பனை செய்யப்பட வேண்டும்.

கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதும், நிராகரிப்பதற்குமான அதிகாரம் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் கேள்வி மனு குழுவிற்கே உரித்தாகும்.

இக்கேள்விப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவத்தை மீளளிக்கப்படாத கட்டணமான ரூபா 1000/- ஐ (ஆயிரம் ரூபாய்) செலுத்திய பின்னர் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி பதிவாளரிடம் 2023-05-25 திகதி பி.ப. 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பதிவுத்தபாலின் மூலம் பீடாதிபதி, ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி, பத்தனை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2023/2024 ஆம் ஆண்டிற்கான சிற்றுண்டிச்சாலை நடாத்துதல்." என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**பீடாதிபதி**
**ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி,**
**பத்தனை.**

## பெறுகை அறிவித்தல்

## லங்கா சதொச லிமிட்டட்டுக்கு பொதிகளை வழங்கல்

விலைமனு இலக்கம்: LSL/PRO/05/26/Pouches/2023
தேசிய போட்டிரீதியான விலைமனு கோரல்

லங்கா சதொச லிமிட்டட்டுக்கு கீழ் குறிப்பிடப்பட்ட உலர் உணவு பொருட்களை பொதியிடுவதற்கு தேவையான பொதிகளை வழங்குவதற்கு உள்நாட்டு உற்பத்தியாளர்களிடம் இருந்து, **லங்கா சதொச லிமிட்ட் பெறுகைக் குழு தலைவரினால்** முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**விபரக்குறிப்பு** : விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு.

**தேவை:**

| உருப்படி விபரம் | அளவு |
|---|---|
| சீனி (சிவப்பு) - 01Kg Pkts | 120,000 |
| சீனி (வெள்ளை) - 01Kg Pkts | 250,000 |
| சிவப்பு பருப்பு - 01Kg Pkts | 150,000 |
| சோயா மீட் - 250g Pkts | 100,000 |
| சோயா மீட் - 500g Pkts | 100,000 |

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களினால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த ஆங்கில மொழியிலான குறித்த முழுமையான **விலைமனு ஆவணத்தை ரூபா 3,000.00 (மீளளிக்கப்படாத) விலைமனு கட்டணத்தை செலுத்தி 2023 மே மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 2023 ஜூன் மாதம் 02 ஆம் திகதி வரையான காலத்தில்** கீழுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம்,**
**பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி)**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2023 மே மாதம் 23 ஆம் திகதி** மு.ப. 11.00க்கு மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் **2023 ஜூன் மாதம் 02 ஆம் திகதி பி.ப. 01.00க்கு** அல்லது அதற்கு முன்னர், மேலுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில், வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். விலைமனுக்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/26/Pouches/2023"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்கள் மூலமும் இலங்கையில் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட நிபந்தனையற்ற **ரூபா 61,500.00 பெறுமதியான விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படும்) விலைமனுவுடன் சமர்ப்பித்தல்** வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2023 ஜூன் மாதம் 02 ஆம் திகதி பி.ப. 01.00க்கு** நிறைவடைவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.
சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி, பெறுகை (திவின்) – 070 156 04 28

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்கும் இறுதி முடிவு **லங்கா சதொச லிமிட்ட் பெறுகைக் குழு தலைவர் வசமானதாகும்.**

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,
லங்கா சதொச லிமிட்ட், சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

## தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

**கைத்தொழில் அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## இரத்தினபுரி தெமுவாவன "இரத்தினக்கல் கோபுரத்தில்" அமைந்துள்ள 27 கடை அறைகளை 30 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குதல்

**விலைக்கோரல் இல. NGJA/18/63/2023/01**

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக இரத்தினபுரி - தெமுவாவன சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண விற்பனை நிலையத்திலுள்ள (இரத்தினக்கல் கோபுரம்) 27 கடை அறைகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்-**

| விபரங்கள் | பணம் / திகதி |
|---|---|
| மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் | ரூபா 10,000.00 + 2.5% SSCL + 15% VAT |
| விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள்/ நேரம் | 2023-06-02ஆம் திகதி பி.ப. 2.00 மணி |
| விலைமனுக்கள் திறக்கப்படுதல் | 2023-06-02ஆம் திகதி பி.ப. 2.05 மணி |

| தொ. இல. | கடை இலக்கம் | மாடி | கடையின் பரப்பளவு (சதுர அடிகள்) | உத்தேச பாவனை | மாதாந்த வாடகைத் தொகை (ரூபா) (வரி இன்றி) | அடிப்படை குத்தகை பெறுமதி (ரூபா) (வரி இன்றி) | பிணை முறி (ரூபா) (வரி இன்றி) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 01 | 1ஆம் மாடி | 219 | இரத்தினக்கல், ஆபரணங்கள் மற்றும் வைரம் தொழில் சார்ந்த கடை அறைகள் மட்டும் | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 02 | 02 | 1ஆம் மாடி | 219 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 03 | 03 | 1ஆம் மாடி | 219 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 04 | 04 | 1ஆம் மாடி | 385 | | 95,000.00 | 7,485,000.00 | 420,000.00 |
| 05 | 05 | 1ஆம் மாடி | 289 | | 80,000.00 | 6,303,000.00 | 352,000.00 |
| 06 | 06 | 1ஆம் மாடி | 280 | | 77,000.00 | 6,067,000.00 | 340,000.00 |
| 07 | 07 | 1ஆம் மாடி | 224 | | 68,000.00 | 5,358,000.00 | 300,000.00 |
| 08 | 08 | 1ஆம் மாடி | 168 | | 58,000.00 | 4,570,000.00 | 255,000.00 |
| 09 | 09 | 1ஆம் மாடி | 136 | | 48,000.00 | 3,781,000.00 | 215,000.00 |
| 10 | 10 | 2ஆம் மாடி | 193 | | 55,000.00 | 4,333,000.00 | 245,000.00 |
| 11 | 11 | 2ஆம் மாடி | 193 | | 55,000.00 | 4,333,000.00 | 245,000.00 |
| 12 | 12 | 2ஆம் மாடி | 193 | | 55,000.00 | 4,333,000.00 | 245,000.00 |
| 13 | 13 | 2ஆம் மாடி | 341 | | 78,000.00 | 6,146,000.00 | 350,000.00 |
| 14 | 14 | 2ஆம் மாடி | 289 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 15 | 15 | 2ஆம் மாடி | 280 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 16 | 16 | 2ஆம் மாடி | 224 | | 65,000.00 | 5,121,000.00 | 286,000.00 |
| 17 | 17 | 2ஆம் மாடி | 168 | | 55,000.00 | 4,333,000.00 | 245,000.00 |
| 18 | 18 | 2ஆம் மாடி | 136 | | 45,000.00 | 3,546,000.00 | 200,000.00 |
| 19 | 19 | 3ஆம் மாடி | 219 | | 55,000.00 | 4,333,000.00 | 245,000.00 |
| 20 | 20 | 3ஆம் மாடி | 219 | | 55,000.00 | 4,333,000.00 | 245,000.00 |
| 21 | 21 | 3ஆம் மாடி | 219 | | 55,000.00 | 4,333,000.00 | 245,000.00 |
| 22 | 22 | 3ஆம் மாடி | 385 | | 78,000.00 | 6,146,000.00 | 350,000.00 |
| 23 | 23 | 3ஆம் மாடி | 289 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 24 | 24 | 3ஆம் மாடி | 280 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 25 | 25 | 3ஆம் மாடி | 224 | | 65,000.00 | 5,121,000.00 | 286,000.00 |
| 26 | 26 | 3ஆம் மாடி | 168 | | 50,000.00 | 3,940,000.00 | 220,000.00 |
| 27 | 27 | 3ஆம் மாடி | 136 | | 45,000.00 | 3,546,000.00 | 200,000.00 |

**நிபந்தனைகள்:**

(I) தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் பெறுகைகள் மேற்கொள்ளப்படும் (NCB)

(II) மீளளிக்கப்படாத ரூபா 10,000.00 + 2.5% (ரூபா 250.00) SSCL + 15% VAT (ரூபா 1,537.50) தொகையை (ரூபா 11,787.50) கொழும்பு 03, அல்பிரட் ஹவுஸ் கார்டன், ''மெக்சன்ஸ் டவர்'' 12ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் நிதியாளருக்குச் செலுத்தியதன் பின் உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்கள் மற்றும் இயைபுடைய நிபந்தனைகளை 2023-05-12ஆம் திகதி முதல் 2023-05-31ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(III) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 2023-06-02ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, இல. 12, ''மெக்சன்ஸ் டவர்'', அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு-03 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது 4ஆம் மாடி, வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இரத்தினக்கல் கோபுரத்தின் கடை அறைகளை குத்தகை அடிப்படையில் வழங்குதல் - 2023" எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

(IV) பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களுடன் விலைமனுப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிணை முறியின் பெறுமதியை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் காசாளரிடம் வைப்புச் செய்து அந்தப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(V) விலைமனுக்கள் 2023-06-02ஆம் திகதி பி.ப. 2.05 மணிக்கு தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் 07ஆம் மாடியிலுள்ள கேட்போர்கூடத்தில் திறக்கப்படும் என்பதுடன் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே இரத்துச் செய்யப்படும். இந்த விலைமனு திறப்பு நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு: உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) - 071-5362536 / 011-2332197**
**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை,**
**இல. 12, ''மெக்சன்ஸ் டவர்", அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03.**
**தொலைபேசி (0112-329295, 2325364, 2390645-8 தொலைநகல் (0112320758, 011-2332197)**
**இணைதளம் (www.ngja.gov.lk)**

# கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வரும் கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் பொருளாளர்

## தினகரனின் 91ஆவது ஆண்டு விழாவில் சிறந்த சமூக சேவையாளராக விருது பெற்றவர்

கலந்துரையாடல்
இக்பால் அலி

**தேசமான்ய செல்வம் என்டன் சால்ஸ் கண்டி பல்லேகலை கைத்தொழில் பேட்டையின் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர். கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் பொருளாளர். முன்னாள் கண்டி கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் தலைவர். இவர் கைத்தொழில் ரீதியாக பல சாதனைகளை நிலைநாட்டி வருபவர். பொதுச் சமூகப் பணிகளிலும் இளம் துடிப்புடன் தியாக அர்ப்பணிப்போடு சேவையாற்றக் கூடியவர். தேசகீர்த்தி, தேசமான்ய விருது, மத்திய மாகாணத்தின் சிறந்த கைத்தொழிலாளர்களுக்கான விருது எனப் பல்வேறு பட்ட விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்ற இவர் தொழில்நுட்ப அறிவிலும் புலமைமிக்கவர், சிறந்த வாசகர்.**

**?.ஆரம்ப வாழ்க்கை குறித்து..**

நான் கொழும்பு கொட்டஹேனையில் பிறந்தேன். அப்பா ஒரு வர்த்தகர். அவர் பெயர் மரியா செல்வம். அம்மா அந்தோனியம்மா. நாங்கள் எல்லோரும் ஐந்து பேர். ஒரு சகோதரியும் மூன்று தம்பிமார்கள். 1983 இனக் கலவரம் காரணமாக இடம்பெயர்ந்து மாத்தளைக்கு வந்து வசித்து வந்தோம்.

**?.கல்வி நடவடிக்கைகள்?.**

மாத்தளை இந்து கல்லூரியில் கல்வி கற்றேன். அங்கு ஆரம்ப முதல் இடைநிலைக் கல்வி வரையிலும் கற்றேன். அதன் பின்பு கண்டி நகரில் அமைந்துள்ள தனியார் 'மணியன்' கம்பனியில் இணைந்து தொழில் செய்தேன். அக்கம்பனியின் முகாமையாளராகப் பத்து வருடம் கடமையாற்றினேன். அக்கம்பனியின் தலைவர் குணாளன் மிக நல்ல மனிதர். அவர்களிடமிருந்து வியாபார முறைகளைக் கற்றுக் கொண்டேன். எனக்கு தொழில் வழிகாட்டல்களை செய்தவர்கள் அவரே. அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.



**?.நீங்கள் தனியாகவே கைத்தொழில் துறையினை எப்பொழுது ஆரம்பிக்க முன் வந்தீர்கள்?**

2002 இல் நத்தரம்பொத்த என்ற இடத்தில் சிறியளவில் கூடாரம் ஒன்றை அமைத்து பிளாஸ்டிக் கைத்தொழில் சாலையை நிர்மாணித்தேன். அதில் சிறிய பிளாஸ்டிக் போத்தல். சிறிய ரகப் பாத்திரங்கள் உற்பத்தி செய்தோம்.

பின்பு 2004 இல் பல்லேகலையில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டையில் ஒரு இடத்தை வாங்கி தாராபெக் என்ற கம்பனியை ஆரம்பித்தேன். அதில் ஒரு முறை பயன்படுத்தக் கூடிய குடிபான சிறிய போத்தல்கள், யோகட் கப், பிஸ்கட். சொக்லெட் வகைகளுக்கு பயன்படுத்தக் கூடிய பல்வேறு வகையிலான பிளாஸ்டிக் உறைகள் உற்பத்திப் பொருட்களை தயாரித்து விநியோகம் செய்து வந்தோம்.

இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது இதில் மேலும் பல படித்தரங்களை தாண்ட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. 2020 களில் இக்கால கட்டம் இலங்கை உட்பட உலக முழுவதும் கொரோனா தொற்று நோயினால் நாடு முற்றாக முடக்கப்பட்டிருந்த கால கட்டம் எனக் குறிப்பிடலாம். இருந்த போதிலும் மனதில் கொண்ட உறுதியுடன் அந்த இலக்கை அடைய வேண்டும் என்ற தீவிர வைராக்கியம் இருந்தது. எப்படியோ நாட்டில் என்ன பிரச்சினைகள் இருந்தாலும் கொரோனா காலத்தில் அதற்காக புதிய கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டேன். இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்த போது 'ஏன் இப்பொழுது செய்கிறீர்கள். சற்று தாமதித்து செய்யலாம் தானே' என்று என்னிடம் பலர் கூறினார்கள். அப்பொழுது கட்டட நிர்மாணப் பணிகளுக்காக 10 கோடிக்கு மேல் செலவு செய்தேன். அதேவேளை தொழில் நுட்ப இயந்திரங்களுக்காக 15 கோடிக்கு மேல் முதலீடு செய்தேன்.



பொலிசெக் என்ற பெயரில் தொழிற்சாலையை நிறுவினேன். புதிய தொழிற்சாலையில் 70 பேர் வரையிலும் வேலை செய்கிறார்கள். இரு தொழிற்சாலைகளிலும் 120 பேர் வரையிலும் பணிபுரிகின்றார்கள். இலங்கையின் எல்லாப் பாகங்களுக்கும் எங்களுடைய உற்பத்திகள் சென்று கொண்டிருக்கின்றன. அரிசி, உரம், மா, மரக்கறி முதலிய எல்லா வகையிலான உறைகளையும் உற்பத்தி செய்து விநியோகம் செய்து வருகின்றோம்.

மேலும் புதிய கைத்தொழிற்சாலை ஒன்றை நிறுவ கட்டட நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அதற்கான தொழில் நுட்ப இயந்திரங்களும் வரவுள்ளன. இப்படித் தான் எங்களுடைய கைத்தொழில் முயற்சிகள் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றன என்று கூற முடியும்.

**?.நீங்கள் இந்த துறையில் எதிர்நோக்கிய சவால்கள்?**

இந்த துறையில் அடி மட்டத்தில் இருந்து வருவது என்பது சாதாரண விடயமல்ல. அது ஒரு பெரிய சவால்தான். எனக்கு தூக்கம் இல்லாத இரவுகள் பல. எனது முதல் பிள்ளையின் முதல் பிறந்த நாள் தினம். அன்றைய தினத்தை என்னால் எந்நாளும் மறக்க முடியாது. அன்று ஓர் இயந்திரம் பழுதாகி விட்டது. உரிய நேரத்தில் பொருட்களை வழங்க வேண்டும். இரு



நாட்கள் இரவு பகல் பாராது முழு நாட்களையும் அதற்காக செலவு செய்து இவ்வியந்திரத்தைத் திருத்தி உரிய நேரத்திற்கு உற்பத்திப் பொருட்களைக் கையளித்தோம். வேலை என்பதைத் திருப்தியாகச் செய்ய வேண்டும். அதுதான் என்னுடைய நோக்கம். தொழில் என்பது தொழிலாகவே இருக்க வேண்டும்.

நான் உழைத்து நன்றாக வாழ்வதை விட தொழிலாளர்கள் நன்றாய் வாழ்வதையே நான் விரும்புகின்றேன். இங்கு தொழிலாளர் முக்கியம். அவர்கள் தான் எமக்கு உழைத்துக் கொடுக்கிறார்கள். அவர்கள் என்னிடம் வேலை செய்து கொண்டு வெளியே போய் கேட்கக் கூடாது. நாங்கள் தான் அவர்களுடைய தேவையை அறிந்து சேவையாற்ற வேண்டும். என்னிடம் வேலை செய்யும் பெண் முகாமையாளர் ஒவரின் மகன் பொலிஸ் காவல் துறையில் இணைந்து சேவையாற்ற வேண்டும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். அதற்கான உயர் அதிகாரிகளுடன் கதைத்து அத்தொழிலில் கடமையாற்ற புதிய நியமனம் பெற்றுக் கொடுத்துள்ளேன். அவர் தற்போது கஷ்டப் பிரதேசத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறார்.வெளிநாட்டுக்குச் செல்வதற்கான பண உதவிகள். இப்படி பல்வேறு வகையான பல உதவிகளைச் செய்துள்ளேன். என்னிடம் தொழில் புரியும்




எந்த தொழிலாளராக இருந்தாலும் எந்த கஷ்டத்தையும் எதிர் எதிர் நோக்கக் கூடாது என்ற வகையில் செயற்பட்டு வருகின்றேன். அதே போன்று தொழிலாளர்களும் எனக்கு நன்கு உழைத்துத் தருகிறார்கள்.

**?.நீங்கள் அதிகம் வாசிப்புத் துறையில் ஈடுபாடு காட்டி வருகின்றீர்கள். அவ்வாசிப்புத் துறையில் ஆர்வம் காட்டுவதற்கான காரணம் என்ன?**

என்னுடைய முழு விருப்பமும் வாசிப்பு ஆகும். வாசிப்பு என்பது ஒரு மனிதனை முழு மனிதனாக மாற்றும் என்று சொல்வார்கள். அது உண்மை. நான் எந்நாளும் புத்தகங்கள் வாசிப்பதனையே ஆர்வமாகக் கொண்டிருப்பேன். அதற்கு காரணம் . எங்களுக்கான புள்ளி ஏதோ ஓர் இடத்தில் தான் தொடங்கும். அப்படியானால் நிறைய வாசிக்க வேண்டும். அப்பொழுதுதான் நமக்கான ஓர் இடம் வரும். நமக்கான ஒரு புள்ளி எங்கேயோ ஓர் இடத்தில் இருக்கும். அதில் ஆழ்ந்த நம்பிக்கை எனக்கு உண்டு. தற்பொழுது நான் வாசித்துக் கொண்டுதான் இருக்கின்றேன். என்னுடைய பையில் ஓசோ அவர்களுடைய நூல் இருக்கிறது. அது வாசிக்க வாசிக்க ஓர் அறிவுக் கடலாகத் தான் இருக்கிறது.

**?.நீங்கள் சமூகப் பணிகளில் ஈடுபடக் காரணம்**

பாடசாலையில் கல்வி பயிலும் கால கட்டத்தில் இருந்து நான் சமூகப் பணிகளில் ஈடுபட ஆரம்பித்தேன் என்று கூறலாம். மாத்தளையில் இராமகிருஸ்ணன் மடத்திற்குச் சொந்தமான காணி ஒன்று இருந்தது. 1983 இல் ஜுலைக் கலவரத்தில் அதில் இருந்தவர்கள் சென்று விட்டார்கள். அதனைப் பெரும்பான்மையின மக்கள் பிடித்திருந்தார்கள். நான் அப்பொழுது க. பொ. த உயர் தரம் கற்றுக் கொண்டிருந்தேன். நாங்கள் அக்காணிக்குள் வேலியை உடைத்துக் கொண்டு உட் செல்வோம் வாருங்கள் என்று அழைப்பு விடுத்தேன். அப்போது வயது முதிர்ந்த கொஞ்சப் பேர் வந்தார்கள். அப்பொழுது என்னோடு நண்பனாக இருந்த சுதர்சன் ஆகிய இருவரும் முன்சென்று அக்காணியை பாடசாலை மைதானத்திற்குப் பெற்றுக் கொடுக்க முயற்சி செய்தோம்.

2011 இல் அமைச்சர் ரோஹன திசாநா




யக்க அவர்களுடன் கதைத்து அரசாங்க நிதி உதவியுடன் என்னுடைய நிதி உதவிப் பங்களிப்பினையும் சேர்த்து அதற்கான விளையாட்டு அரங்கு மண்டபத்தை நிர்மாணிக்க உதவி செய்துள்ளேன். குறிப்பாக அந்த விளையாட்டு மைதானத்தை முழுமையாக செப்பனிட்டுச் கொடுத்துள்ளேன் எனலாம்.

நான் பாடசாலையை விட்டு விலகினாலும் நான் படித்த பாடசாலையின் பழைய மாணவன் என்ற வகையில் அப்பாடசாலைக்கு நான் சிறு வயது முதல் இருந்தே உதவிகளையும் நல்லாதரவினையும் பங்களிப்பையும் வழங்க ஆரம்பித்து விட்டேன். பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும் இருந்தேன்.

நான் பல்லேகலை வந்த பிற்பாடு இந்த



கைத்தொழில் பேட்டையில் அந்தளவுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் இருக்க வில்லை. வீதி வசதிகள் இல்லை. பாதைகள் உடைந்து குண்டும் குழியுமாகக் காணப்பட்டன. பூப்பந்து விளையாடுவது எனக்கு அலாதியான விருப்பம். இந்தக் கைத்தொழில்பேட்டையில்60கைத்தொழிற்சாலைகள் உள்ளன. இங்கு கைத்தொழில் உரிமையாளர் சங்கம் ஒன்று இருக்கிறது. இந்தச் சங்கத்தில் 2011 ஆம் ஆண்டு செயலாளராக என்னை நியமனம் செய்தார்கள். அப்பொழுது கைத்தொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இருந்தார். அவருடைய செயலாளர் சிவஞானசோதி என்பவர் இருந்தார். அப்பொழுது அவரைச் சந்தித்து இந்த தொழில் பேட்டை நிலையத்தில் நிலவும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினேன். அவர் அமைச்சரின் ஊடக செய்து தருவதாக வாக்குறுதி வழங்கினார். சங்கத்தின் மூலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பல முறை சந்தித்து பேசினோம்.சுமார் 300 கோடி ரூபாவினை இந்த கைத்தொழில் பேட்டையை புனர்நிர்மாணம் செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்தார்.

கைத்தொழில் பேட்டை நிலையத்தில் உள்ள அனைத்து வீதிகளும் காபட் வீதிகளாக நிர்மாணிக்கப்பட்டன. மின் இயந்திர ட்ரான்ஸ்போமர்கள் இணைக்கப்பட்டன. கேட்போர் கூடம், பூப் பந்து விளையாடுவதற்கான ஒரு விளையாட்டு அரங்கு உள்ளிட்ட பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இங்குள்ள மைதானத்தில் கைத்தொழில் உரிமையாளர்கள் மாலை வேலையில் பூப்பந்து விளையாடுவோம். தற்போது இந்த கைத்தொழில் பேட்டையின் தலைவராக இருக்கின்றேன்.

இன்றைய பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் எங்கள் கைத்தொழில் பேட்டையில் உள்ளவர்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடுகள்



நிலவின. இங்கு நிறைய வாகனங்கள் உள்ளன. ஆனால் எரிபொருள் கட்டாய தேவையாக இருந்தது. எனவே நாங்கள் ஒன்று கூடி கைத்தொழில் பேட்டை நிலையத்திற்கு என்று தனியான ஓர் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை நிர்மாணித்துள்ளோம். 90 வீதம் அதற்கான வேலைத் திட்டங்கள் முடிவடைந்துள்ளன. தேவையான ளவு எரிபொருட்களை கைத்தொழில் பேட்டை நிலையத்திற்குள்ளே இனி வரும் காலங்களில் பெற்றுக் கொள்ளலாம். இச்சங்கத்தின் தலைவராக இருந்து பெற்றுக் கொடுத்த மனத் திருப்தி எனக்கு இருக்கிறது.

2010 ஆம் ஆண்டு அளவில் கண்டியில் உள்ள என்னுடைய நண்பர்கள் தமிழ் வர்த்தக சங்கத்தில் இணைந்து கொள்ள முடியுமா எனக் கேட்டார்கள். அதற்கு மறுக்காமல் இணைந்து கொண்டேன். அப்பொழுது நிர்வாக குழு உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டேன். யார் தலைவராக இருந்தாலும் சரி சங்கத்திற்கு வளர்ச்சிக்கு என்னால் இயன்ற ஒத்துழைப்பை வழங்கி வருகின்றேன். நான் இதில் தொடர்ந்து இருப்பனோ இல்லையோ சரி ஆனால் இச்சங்கத்தின் மேம்பாட்டுக்காக என்னால் இயன்ற அத்தனை முயற்சிகளையும் செய்வேன்.

2020 இல் புதிய தலைவராக வந்த ஆர். அன்பழகன் என்னைப் பொருளாளராக நியமனம் செய்தார். அதன் பிற்பாடு தமிழ் வர்த்தக சங்கம் குறிப்பிடத்தக்களவு பொருளாதாரத் துறையில் நல்லதொரு இலக்கை அடைந்துள்ளது. சமூகப் பணிகளிலும் ஒரு பரந்து பட்ட சேவைகளைச் செய்து வருகின்றது. கொரோனா தொற்றுக் காலத்தில் நாங்கள் பாரிய பங்களிப்பைச் செய்தோம்.

மலையகத்திலுள்ள தோட்டப்புறங்களுக்குச் சென்று சுமார் 700 உலருணவுப் பொதிகளை வழங்கினோம்.துரதிருஷ்டவசமாக எங்களுடைய



தலைவர் ஆர். அன்பழகன் காலமாகிவிட்டார். அது எங்களுடைய தமிழ் வர்த்தக சங்கத்திற்கு ஈடு செய்ய முடியாத பெரும் பேரிழப்பாகும். இந்த தருணத்தில் அவருடைய மனைவி மகள் பிள்ளைகள் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இருப்பினும் சங்கத்தின் பணிகள் தொய்வின்றி சென்று கொண்டிருக்கிறது. மத்திய மாகாண கல்யாண சில்கா இந்திய இலங்கை கலாசார நட்புறவு சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினராகவும் இருந்து செயற்பட்டு வருகின்றேன். நுவரெலியா மாவட்டத்தில் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்படும் வறிய மாணவர்களுக்கு நாங்கள் புலமைப் பரிசில் நிதி ஒன்றைத் திரட்டி வழங்கத் திட்டமிட்டுள்ளோம். அதற்காக 7 மில்லியன் ரூபா சேகரித்துள்ளோம். மேலும் 3 மில்லியன் ரூபா சேகரித்து அவற்றை வங்கியில் வைப்பிலிட்டு அதில் வரும் இலாபத்தின் மூலம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில் நிதி உதவியினை வழங்கவுள்ளோம். ஆரம்பத்தில் ஒரு மில்லியன் ரூபா நிதி அன்பளிப்புச் செய்துள்ளேன். இது குறுகிய காலத்தில் வெற்றியடைய வேண்டும் என்று நான் எதிர் பார்க்கின்றேன்.




பிராந்திய அபிவிருத்தி வங்கி

[illegible]

எம்.எச்.டி. கருணாரத்ன (ஜே.பீ.)
உரிமம் பெற்ற ஏலவிற்பனர்
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்



இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2023ஆம் ஆண்டிற்கான பிரதேச ஒப்பந்ததாரர்களை (மாவட்ட அடிப்படையில்), சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் பதிவு செய்தல்

பின்வரும் விநியோகங்கள் மற்றும் சேவைகளுக்காக 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவில் (PUCSL) பதிவு செய்ய விரும்பும் விநியோகஸ்தர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பொருட்கள் இல. | பொருட்கள் தொடர்பான விளக்கம் |
|---|---|
| 1 | மண்டப வசதிகள் (Venue) |
| 2 | உணவு மற்றும் விநியோகம் |
| 3 | [illegible] (backdrop) மற்றும் X-[illegible] |
| 4 | அச்சிடுதல் |
| 5 | நிகழ்வுகளை ஒழுங்கமைக்கும் நிறுவனங்கள் |
| 6 | வீடியோ மற்றும் புகைப்படம் எடுத்தல் |
| 7 | சமூக ஊடக ஒளிபரப்பு |
| 8 | கூடாரங்கள் (Tent) மற்றும் கதிரைகள் |

[illegible] www.pucsl.gov.lk [illegible] www.pucsl.gov.lk [illegible]

[illegible]

விண்ணப்பங்கள் 12 மே 2023 முதல் [illegible] (www.pucsl.gov.lk/english/category/notices) [illegible] 9.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை [illegible] 0112392607 - [illegible] 716 அல்லது 721 [illegible]

[illegible] 28, [illegible] கொழும்பு 03 [illegible] மே மாதம் 31 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்குள் [illegible] 2023 [illegible]

தலைவர்
பெறுநர் குழு
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
மின்னஞ்சல்: info@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி: 2023.05.12

# கேள்விக்கான அழைப்பு

## நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கான விலைமனுக் கோரல் – 2023ஆம் ஆண்டு

### தேசிய சுகாதார விஞ்ஞான கல்வி நிறுவகம் - களுத்துறை

களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞான கல்வி நிறுவன அதிகாரப் பிரதேசத்திற்குள் நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஔடதம் மற்றும் தகைமைகள் உள்ள மருத்துவர்களிடமிருந்து மற்றும் அமைப்புக்களிலிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. 2023.06.16 முதல் 2023.07.15 வரையான கால எல்லைக்குள் தேசிய சுகாதார விஞ்ஞான கல்வி நிறுவகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் களுத்துறை/ பேருவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளுக்குள் பெண் நாய்கள் கிட்டத்தட்ட 600 - 650 எண்ணிக்கையில் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

03. அதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகள்/ அமைப்புக்களிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு எழுத்து மூலம் வேண்டுதல் மேற்கொள்வதுடன் அதற்காக ரூ. 2000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை இவ் அலுவலகத்திற்கு செலுத்துதல் வேண்டும். கேள்வி ஆவணங்களை 2023.05.12 முதல் 2023.06.01 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை விநியோகிக்கப்படும். கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக எழுத்து மூல வேண்டுதலை மேற்கொள்ள வேண்டியதுடன், அதற்காக ரூ. 2000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை இவ் அலுவலகத்திற்கு செலுத்துதல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 2023.05.12 முதல் 2023.06.01 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை விநியோகிக்கப்படும். கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்வி சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை தேசிய சுகாதார விஞ்ஞான கல்வி நிறுவனத்தின் பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

05. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 2023.06.02 மு.ப. 10.30 இற்கு முன் பணிப்பாளர், தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம், களுத்துறை என்ற பெயரில் பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

பொறியிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் '2023ஆம் ஆண்டின் நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக விலைமனுக் கோரல்' என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி விடயம் பற்றிய சகல விபரங்களையும் கேள்வி ஆவணத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம் - 034-2222264/ 034-2222001

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**தேசிய சுகாதார விஞ்ஞான கல்வி நிறுவகம், களுத்துறை.**

---

CDU/TS/2023/7&8

## இலங்கைச் சுங்கம்

## அரசுரிமையாக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்வி

அரசுரிமையாக்கப்பட்ட வாகனங்கள், தங்கம் / வெள்ளி ஆபரணங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் ஏனைய நானாவிதப் பொருட்களை கேள்வி மூலம் விற்பனை செய்வற்கான கேள்வி கோரல் 2023-05-18ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இலங்கைச் சுங்கம், மத்திய அப்புறப்படுத்தல் பிரிவின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந்தப் பொருட்களின் பட்டியல் மற்றும் இதன் விபரங்கள் அடங்கிய படிவமொன்றை மீளளிக்கப்படாத 25.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி இலங்கைச் சுங்கத்தின் 3ஆம் மாடியில் உள்ள மத்திய அப்புறப்படுத்தல் பிரிவில் 2023 மே 15, 16 மற்றும் 17 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விற்பனைக்குள்ள பொருட்களின் பட்டியல் www.customs.gov.lk எனும் சுங்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் 2023 மே மாதம் 12ஆம் திகதியிலிருந்து காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் எண்களுடன் தொடர்புகொள்ளவும்:

**011-2430795**
**011-2143434 நீடிப்பு 7300**

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கைச் சுங்கம்,**
**சுங்க இல்லம்,**
**இல. 40, பிரதான வீதி,**
**கொழும்பு-11.**

---

## பெறுகை அறிவித்தல்

## விடுதிப் பொறுப்பாளர் (Caretaker) சேவையை வழங்குதல்

### களனிப் பல்கலைக்கழகம்

களனிப் பல்கலைக்கழகத்திற்குரித்தான (ராகம மருத்துவ பீடம் உட்பட) உள்ளக மற்றும் வெளிவாரி விடுதிகளுக்கு விடுதிப் பொறுப்பாளர் சேவையை வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்ட மனிதவலு வழங்கும் நிறுவனங்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2023-06-06ஆம் திகதி பி.ப. 2.30 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விக்காக மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கேள்விக் கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் கேள்வி மாதிரிப் படிவங்கள் மற்றும் அதற்கு இயைபான ஏனைய விபரங்களை 2023-06-05ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை உதவிப் பதிவாளரிடம் (பொது நிர்வாகம்) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (மாணவர் சேவை) அவர்களைச் சந்தித்து குறித்த விடுதிகளைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''களனிப் பல்கலைக்கழகத்தின் விடுதிப் பொறுப்பாளர் சேவை கேள்வி'' எனக் குறிப்பிட்டு பி.ப. 2.30 மணிக்கு முன் களனிப் பல்கலைக்கழகத்தின் தலுகம வளாகத்தின் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொது நிர்வாகப் பிரிவிற்குரித்தான கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத கேள்விப் படிவங்கள் மதிப்பீடு செய்யப்படாமல் நிராகரிக்கப்படும்.

2023-06-06ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு களனிப் பல்கலைக்கழகத்தின் தலுகம வளாக பீடாதிபதி கூட்ட மண்டபத்தில் கேள்விப் படிவங்கள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்.**
**2023-05-09.**

---

## ஆலய முகாமையாளர் மற்றும் காசாளர் தேவை

கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் முகாமையாளராகவும் (Manager), காசாளராகவும் (Cashier) கடமையாற்ற முன் அனுபவமுள்ள இருவர் தேவை. விண்ணப்பிப்பவர்கள் தங்களின் சுயவிபரக் கோவையுடன், இருவரின் உறுதிப்படுத்தலுடனும், வதிவட பொலிஸ் பதிவிடன் பின்வரும் மின் அஞ்சல் முகவரிக்கு sivasubramaniya.kovil@gmail.com தங்களின் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

(குறிப்பு வெளி மாவட்டங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்களுக்கு தங்குமிட வசதி தேவையாயின் ஒழுங்கு செய்து தரப்படும்.

---

**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29D இன் கீழான விற்பனை.**

## மக்கள் வங்கி - மெதிரிகிரிய கிளை (231)

### பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவு, மெதிரிகிரிய பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட, சிங்கள பற்று, லியதி 1 வெவ, 91 ஆம் இலக்க கிராம சேவை அதிகாரி பிரிவில், கடுலு வெவ 2ஆம் பிரிவு, யாய 3 (புதிய நகரம்), கிராமத்தில் அமைந்துள்ள, "கொட இடம" என அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் ஜீ.பி.இலங்கசிங்க அவர்களால் வரையப்பட்ட, 2014 ஒக்டோபர் 04 ஆம் திகதியிடப்பட்ட 2014/P/106 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள (அளவையாளர் நாயகம் அவர்களால் வரையப்பட்ட மற்றும் அவர் வசமுள்ள புலம் தாள் இல. F.C.P.P. 133 துண்டு 252 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் மீள் அளவை) பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம் : ஏ-01 : ரூ-00 : ப-01**

அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்களாக.

பொலன்னறுவை காணிப் பதிவகத்தில் இணைப்பு LDO/F/22/194 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணியைச் சென்றடைவதற்கான வழி:**
மெதிரிகிரிய மக்கள் வங்கி கிளையிலிருந்து வட்டதாகேய வீதி வழியே சுமார் 2.5 கிலோமீற்றர் வரை சென்று, மெதிரிகிரிய பொலிஸ் நிலையத்திற்கு சமீபமாக இடது பக்கத்தில் உள்ள சிறிய வீதிக்குத் திரும்பவும். இந்த வீதியில் சுமார் 600 மீற்றர் வரை சென்று நாற் சந்தியை கடந்தது மேலும் சுமார் 500 மீற்றர் வரை சென்றதும் காணப்படும் சந்தியில் வலது பக்கமாகத் திரும்பவும். குறித்த சொத்து அந்த வீதியில் முதலில் காணப்படும் ஆதனமாகும்.

**மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி**
**2023 ஜுன் மாதம் 01 ஆம் திகதி வியாழக்கிழமை**
**மக்கள் வங்கியின் மெதிரிகிரிய கிளை வளாகத்தில் மு.ப 11.00 மணிக்கு**
**எம்மால் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.**
**எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்**

**தீர்மான அறிவித்தலுக்கு**
தீர்மான அறிவித்தலுக்கு, தயவு செய்து 24.03.2023ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி பத்திரிகை மற்றும் டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை:**
ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை சதவீதம்)
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ.1,500/
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் வரி

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிரதான முகாமையாளர் - அறவீடுகள், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், பிரதேச செயலக கட்டடம், புதிய நகரம், பொலன்னறுவை என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி 027-2226626, 027-2224404 தொலைநகல் : 027-2223522

மேற்கூறப்பட்ட செலுத்தப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மேற்கூறப்பட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும் / இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது"**

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம**

*ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்*
**131 வருடகால மகோன்னத சேவை**

**தலைமை அலுவலகமும் காட்சியறையும்**
**24, டொரிங்டன் வீதி, கண்டி.**
**தொலைபேசி : 081-2227593**
**தொலை/பக்ஸ் : 081-2224371**
**மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk**

**நகர அலுவலகம்**
**6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு-08.**
**தொலைபேசி : 011-2671467, 011-2671468**
**தொலை/பக்ஸ் : 011-2671469**
**மின்னஞ்சல்: schokman@samera1892.com**

**இணையதளம்: www.sandslanka.com**

---

# அறிவித்தல்

## மாநகர சபை - குருநாகல்

### 2024 வரவு - செலவு பதிவேட்டில் இணைத்துக் கொள்வதற்கு ஆலோசனை பெற்றுக்கொள்வது தொடர்பான அறிவித்தல்

2024ஆம் ஆண்டிற்கு குருநாகல் மாநகர சபையினால் தயாரிக்கப்படுகின்ற வரவு - செலவு பதிவேட்டில் மூலதன செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் இணைத்துக் கொள்வதற்காக கருத்து மற்றும் ஆலோசனை மாநகர சபை சிவில் அமைப்பு, குடிமக்களிடமிருந்து கோரப்படுகின்றன. அவ்வாறான ஆலோசனைகளை பதிவுத் தபாலில் மாநகர ஆணையாளர், மாநகர சபை குருநாகல் என்ற முகவரிக்கு அல்லது நேரில் அல்லது ginumviyadam@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 2023, ஜுன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும், தபால் மூலம் அனுப்பும் போது, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2024 வரவு - செலவுத் திட்ட ஆலோசனை" என குறிப்பிடு மாறும் அறியத்தருகிறேன்.

**திரு.எம்.ஏ.பீ.சி. ஆலோக பண்டார**
**மாநகர ஆணையாளர்,**
**குருநாகல் மாநகர சபை காரியாலயத்திலிருந்து**
**2023 மே மாதம் 12ஆம் திகதி**

---

## பெறுகை அறிவித்தல்

## உடுபத்தாவ பிரதேச சபை

உடுபத்தாவ பிரதேச சபையினால் கெந்தயாயவத்த திண்மக் கழிவுகள் முகாமைத்துவ நிலையம் மற்றும் புன்னெஹெபொல தகனசாலை வளாகத்தில் இரு குழாய் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்வி ஆவணங்களை 2023.05.15 முதல் 2023.06.05 வரை அலுவலக நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.15 வரை பெற்றுக்கொள்ளலாம்.
2. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவண கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "குழாய்க் கிணறு நிர்மாணித்தல் - 2023" என்று குறிப்பிட்டு 2023.06.06 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு செயலாளர், உடுபத்தாவ பிரதேச சபை, உடுபத்தாவ" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கேள்விகள் திறத்தல் 2023.06.06 மு.ப. 10.15 இற்கு இடம்பெறுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
4. 2023.06.06. மு.ப. 10.00 இற்கு பின்னர் கிடைக்கும் மற்றும் குறித்த கேள்வி ஆவணங்களின் மூலம் சமர்ப்பிக்காத கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விகள் பற்றிய இறுதித் தீர்மானம் எடுத்தல் உடுபத்தாவ பிரதேச சபைக்கு உரியது.
5. இது பற்றிய மேலதிக விபரங்கள் எதிர்பார்க்கப்படின் அபிவிருத்தி அதிகாரி திரு. எச்.எல்.எம். தெபாவலவை அழையுங்கள். தொ.பே. இலக்கம் 037-2286577.

**செயலாளர்,**
**உடுபத்தாவ பிரதேச சபை,**
**உடுபத்தாவ.**

---

## 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பண மோசடி தடுப்புச் சட்டத்தின் 8(3) அத்தியாயத்தின் பிரகாரம் விடுக்கப்படும் ஆதனத்தை வலுவிழக்கச் செய்யும் அறிவித்தல்

இல. 132/2/A, பொன்சேகா வீதி, வேகட பாணந்துறை எனும் முகவரியிலுள்ள அந்தோனிகே நதிசா தமயந்தி என்பவரின் பெயரில் உள்ள பின்வரும் ஆதனம் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 35வது அத்தியாயத்தின் பிரகாரம் சட்ட விரோத செயற்பாட்டினால் அல்லது ஏதாவது சட்ட விரோத செயற்பாட்டினால் பெற்றுக்கொண்ட பணத்தினால் பெறப்பட்டு உரிமையாக்கிக் கொண்டுள்ளது தெரிய வந்துள்ளதால் அந்தச் சட்டத்தின் 7வது மற்றும் 8வது அத்தியாயத்தின் பிரகாரம் 2023-04-27ஆம் திகதி முதல் பாணந்துறை நீதிமன்றத்தில் HC/SPL/01/2023 இலக்கத்தின் கீழ் வலுவிழக்கும் கட்டளை உறுதி செய்யப்பட்டு நீடிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு பிரேமரத்ன ஜயசிங்க அவர்களினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 2016-03-11ஆம் திகதிய 1267ஆம் இலக்க விற்பனையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ள களுதேவல கிராம சேவையாளர் அதிகாரப்பிரிவில் களுதேவல கிராம சேவையாளர் பிரிவில் களுதேவல மற்றும் திப்பெத்த எனும் இரு கிராமங்களுக்கிடையில் அமைந்துள்ள எம். ஆர். ஜயசேக்கர உத்தரவுபெற்ற நில அளவையாளரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2004-05-03ஆம் திகதிய 3944ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மெண்டிஸ்வத்த எனும் பெயரைக் கொண்ட காணியில் A அரிச்சுவடியைக் கொண்ட 19.47 பேர்ச் காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள ஆதனம்.

அந்த ஆதனம் தொடர்பில் தமது உரிமைத்துவத்தை நீதிமன்றத்தில் நிரூபிப்பதற்கு உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும்பொருட்டு அறிந்துகொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

**நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம்**

---

SriLankan Airlines oneworld

## பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

**சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட் (PB 67)** ஆண்டறிக்கை 2021/2022, ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான அறிவிப்பு மற்றும் பதிலாள் படிவம் கம்பனியின் வெப்தளமான **www.srilankan.com/AGM** இலும் பங்குடமையாளர் சமூகத்தளமான கீழே குறிப்பிடப்பட்ட வெப்தளத்திலும் தரவேற்றம் செய்யப்பட்டிருக்கிறது.
**www.srilankan.com/shareholdercommunitysite**

பின்வரும் QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் உறுப்பினர்கள் தங்கள் கைபேசி ஊடாகவும் ஆண்டறிக்கையை அணுகலாம்.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் ஏயார்லைன்சின் பங்குடமையாளர்களது 44வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 2023 யூன் 2ஆம் நாள் வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில். நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

2022 மாச்சு 31இல் முடிவடைந்த நிதியியல் ஆண்டிற்கான ஆண்டறிக்கையானது, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அனைத்தையும் இலத்திரனியல் தொடர்பூட்டல் தளத்திற்கு மாறிக்கொள்ளுமாறும் சாத்தியமானளவிற்கு காகிதங்களின் பயன்பாட்டினைக் குறைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்ற 2022 ஆகஸ்ட் 8ஆம் திகதியிடப்பட்ட 04/2022ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் நியதிகளுக்கிணங்க, PDF படிவத்தில் மட்டுமே கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

ஏதேனும் விளக்கங்களுக்கு, கம்பனிச் செயலாளரை தொடர்பு கொள்ளவும்

மின்னஞ்சல்: comsec@srilankan.com தொலைபேசி: 0197331010

திருமதி டல்ரீன் திருகுமார
**கம்பனிச் செயலாளர்**
2023 மே 12

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்

# கேள்விமனு கோரும் அறிவித்தல்

தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம் 2023/24ஆம் ஆண்டில் பின்வரும் பொருள்களை வழங்கக்கூடிய வழங்குநர்களிடமிருந்து சீல் வைக்கப்பட்ட விலைகூறல் மறுக்களைக் கோருகின்றது.

| Item | Quantity Required | Required Period | Non-Refundable Bid Fee | Refundable Tender Deposit |
|---|---|---|---|---|
| Diagnostic Reagents Lancet | 2,040,000 | One year from the date of Bid Bond | 5,000.00 | 204,000.00 |
| Improvement & printing of "Medical Fitness Certificate" with security features | 900,000 | | 5000.00 | 231,750.00 |
| Envilopes (9"x4") | 1,000,000 | | 1,500.00 | 62,500.00 |
| Gloves (XS / S / M / L) | 1,680 (100 Sheet per box) | | 1,000.00 | 21,756.00 |

உத்தேச மனுதாரர்கள் தமக்குத் தேவையான விலைகூறல் ஆவணங்களை 2023 மே 15ஆம் திகதி முதல் 2023 ஜூன் 05ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00க்கும் பி.ப. 2.00க்கும் இடையே இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடையிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கணக்கியல் பிரிவில் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மீளப்பெற முடியாத கட்டணமாக மேற்குறிப்பிட்ட தொகையைச் செலுத்துவதன் மூலம் இந்த ஆவணங்களைக் கொள்வனவு செய்ய முடியும். விலைகூறல் ஆவணங்களை நிரப்பிச் சமர்ப்பிக்கும்போது மீளப்பெறக்கூடிய (4 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்) கட்டணம் ஒன்று செலுத்தப்பட வேண்டும். இந்த மீளப்பெறக்கூடிய வைப்பு இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் விலைகூறல் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

தகுதியுள்ள மனுதாரர்கள் விலைகூறல் ஆவணங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலைகூறல் முறி ஒன்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

சீல் வைக்கப்பட்ட விலைகூறல் மனுக்களைப் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடையிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் 2ஆம் மாடியிலுள்ள கணக்கியல் பிரிவில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிலையத்திற்குத் தேவையான பொருள்களின் வழங்கல்" என்று குறிப்பிடவும்.

விலைகூறல் மனுக்களை ஏற்றுக்கொள்ளுதல் 2023 ஜூன் 06ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முடிவடைந்ததும், உடனடியாகவே அவை திறக்கப்படும். விலைகூறல் மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**தலைவர்,**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்**
**இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை.**
**தொலைபேசி: 0112 814862 / 0112 814865**

---

# விலைமனுக் கோரல்

**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**கேள்வி விலை இலக்கம்: 076/T/2022**

## பலாலி சர்வதேச விமான நிலையத்தின் முனைய கட்டிடத்தின் ஓடுபாதை பகுதிக்காக தற்காலிக காப்புத்திரையொன்றினை அமைத்தல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார) கம்பனி சார்பாக தவிசாளரால் பலாலி சர்வதேச விமான நிலையத்தின் முனைய கட்டிடத்தின் விமானங்கள் இயக்கப்படுகின்ற பிரதேசத்திற்குரிய பகுதியின் (Airside) தற்காலிக காப்புத்திரையொன்றினை அமைப்பதற்காக பொருத்தமான மற்றும் தகைமைகளைக் கொண்ட விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.இதற்காக மதிப்பிடப்பட்ட தொகை (எதிர்பார்க்கப்படாத) (10%) மற்றும் வெட் வரித்தொகை தவிர்ந்த 29 மில்லியன் ரூபாவாகும்.

இவ் வேலைப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டுமான பணிகளாக, விவரக்குறிப்பீடுகள், விலைப்பட்டியல்கள் மற்றும் உரிய பொறியியல் திட்டமிடல்களுக்கமைய அனைத்து பொருட்கள் மற்றும் தொழிற்படையினை வழங்குகின்ற பிற தொடர்புடைய வேலைகள் உட்பட விமான ஓடுபாதை பிரதேசத்திற்குரிய பகுதியின் தற்காலிக எ/கு காப்புத்திரையொன்றினை அமைப்பதாகும். (தோராயமாக பகுதி - 225 சதுர மீட்டர்).

கட்டுமான காலப்பகுதிக்குரிய காலவெல்லை 90 நாட்களாகும்.

கருத்திட்டத்துக்குரிய அமைவிடம் : யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம் - பலாலி தேசிய போட்டியிடல் விலைக்கோரல் நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கேள்விகள் இடம்பெறும்.

இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத அல்லது கம்பனியுடன் தீர்க்கப்படாத தகராறு எதுவும் இருக்கக் கூடாது என்பதுடன், C4 அல்லது C5 தரத்துக்காக (கட்டிட கட்டுமானங்களுக்காக) கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் இப் பணிகள் தொடர்பில் அனுபவமுள்ள ஒப்பந்ததாரராக இருத்தல் வேண்டும்.

தவிசாளர், பெறுகைக் குழு இலக்கம் 01, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவிற்கு எழுத்துபூர்வமான விண்ணப்படிவமொன்றினை சமர்பிப்பதன் மூலம் ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு ஆங்கில மொழியில் பூர்த்திசெய்யப்பட்ட விலைக்கேள்வி இணைக்கோப்பினை 2023.05.15 ஆம் திகதி முதல் 2023.06.13 ஆம் திகதி வரை மு.ப. 09.00 மணி முதல் 15.00 மணி நேரம் வரை திருப்பிச் செலுத்தப்படாத ரூபா 8,000/= (ரூபா எட்டாயிரம்) கட்டணமொன்று காசாக செலுத்தியதன் பின்னர் கொள்வனவு செய்துகொள்ள முடியும். விலைக்கேள்வி விலாசத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட ஆவணத்தினை இலவசமாக பார்வையிட முடியும்.

அனைத்து விலைக்கேள்விகளுக்காக காசாக ரூபா மூன்று இலட்சம் (ரூபா 300,000.00) விலைக்கேள்வி பிணையம் அல்லது அட்டவணையில் பட்டியல்படுத்தியுள்ள தாபனங்களினால் கேள்வியின் அடிப்படையில் வெளியிடப்பட்ட விலைக்கேள்வி பிணைமுறியுடன் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

சகல விலைக்கேள்வியாளர்களுக்கும் மற்றும் அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு 2023.05.31 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு, விமானநிலைய முகாமையாளர் அலுவலகத்தில் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் பலாலி சர்வதேச விமானநிலையம், பலாலியில் நடைப்பெறும் ஆரம்ப விலைக்குறிப்பீட்டு கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

தவிசாளர், பெறுகைக் குழு இலக்கம் 01, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற விலாசத்திற்கு 2023.06.14 ஆம் திகதி 14.00 மணி நேரம் அல்லது அதற்கு முன்னர் விலைக்கேள்விகள் ஒப்படைக்கப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் குறித்த நேரத்தில் விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிவடைந்ததும், விலைக்கேள்வியாளர்கள் முந்நிலையில் விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக விலைக்கேள்வியாளர்களுக்கு 011-2263502/ 011-2263507 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் ஊடாக தலைவர் சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க, தொலைநகல் இலக்கம் 011-2251356 தொடர்ப்பு கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) தனியார் கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

---

**வ/ப அரச சேவை கூட்டுறவு கடன் வழங்கல் மற்றும் சேமிப்புச் சங்கம்**
**இல. 19, சவுண்டர்ஸ் பிளேஸ், கொழும்பு-12,**
**தொலைபேசி இல: 011-2327640**

# 2023.07.01 முதல் 2024.06.31 வரை வழங்குநர்களைப் பதிவு செய்தல்

- 2023.07.01 முதல் 2025.06.30 வரையான கால எல்லைக்கு கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் உற்பத்தியாளர்கள், பிரதிநிதிகள், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனிநபர்களை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பதிவு செய்வதற்காக 2023.06.09 வரை விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுகின்றன.
- பதிவு செய்வதற்காக தேவைப்படும் விண்ணப்பங்கள் 2023.05.15 முதல் 2023.06.09 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.30 வரை சங்க தலைமையகத்திற்கு வருகை தந்து ரூ. 2,000/- தொகையை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

  (இத்தொகை மீளளிக்கப்பட மாட்டாது)
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சங்கத்தின் "தலைவர்" என்று குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரிக்கு 2023.06.09 அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அத்துடன், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2023.07.01 முதல் 2025.06.30 வரை வழங்குநர்களைப் பதிவு செய்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

| | வழங்குநர்கள் | | சேவை வழங்குநர்கள் |
|---|---|---|---|
| 01 | சகல வகையான அலுவலக காகிதாதிகள் | 10 | வளிச்சீராக்கி பொருத்துநர்கள் மற்றும் சேவை வேலைகள் |
| 02 | அச்சுத்தாள் | 11 | CCTV கெமரா அமைப்பு மற்றும் சேவை விடயங்கள் |
| 03 | உருக்கு அலுமாரி, கோவை கெபினெட் மற்றும் சேப்பு வகை | 12 | சகல வகையான அலுவலக இயந்திரங்கள் பழுதுபார்த்தல் |
| 04 | அலுவலக மேசை, கதிரை மற்றும் ராக்கை போன்றன | 13 | மின் தொழில்நுட்ப சேவைகள் |
| 05 | சகல வகையான அலுவலக இயந்திரம் | 14 | அச்சு விடயங்கள் |
| 06 | கணனி உதிரிப் பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள் | 15 | அலுமினியம் பெப்ரி கேட்டர் சேவை |
| 07 | கணனி இயந்திரம் | 16 | கட்டிட நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தல் விடயங்கள் |
| 08 | ஞாபகார்த்த விருதுகள் | 17 | வாடகை அடிப்படையில் வாகன வழங்குநர்கள் |
| 09 | கணனி மற்றும் துணைப்பாகங்கள் பழுதுபார்த்தல் | 18 | விசேட வேளைகளில் காலை மற்றும் பகல் உணவு வழங்குநர்கள் |
| | | 19 | அலுவலக சுத்திகரிப்பாளர்கள் |

- வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கு பதிவு செய்யும் போது ஒரு வழங்கல் அல்லது சேவை தலைப்பிற்கு மேல் விண்ணப்பிப்போர் அந்த சகல தலைப்புகளுக்கும் பதிவுக் கட்டணமாக ரூ. 2,000/- தொகையை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டு இலக்கத்தை குறிப்பிட்டு வேறுவேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- சேவை வழங்குநரின் கீழ் இல. 16 உடன் சம்பந்தப்பட்ட ICTAD சான்றிதழுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
- பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பட்டியலில் இருந்து விலைமனுக்களை கோரல் மற்றும் சேவைகளை நிறைவேற்றிக்கொள்ளல் சாதாரண நடைமுறை எனினும் விசேட வேலைகளில் மற்றும் சங்கத்தின் விருப்பின் பேரில் அதற்கு வெளியிலும் விலைமனுக் கோரல் மற்றும் சேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் உரிமை சங்கத்திற்கு உரியது.
- மேற்படி விடயம் சார்பாக கூட்டுறவுச் சங்கம்/ கம்பனிகளுக்கும் பதிவு செய்யும் வாய்ப்பு உண்டு.
- விலைமனுக்கள் கோரப்படும் வேளையில் குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிகளுக்கு அமைவாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றாத மற்றும் உடன்படிக்கைப் பிரகாரம் நிறைவேற்றுவதை தவிர்க்கும் வழங்குநர்களின் பெயர்களை பதிவுப் பட்டியலில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

**எஸ்.பீ. போவல,**
**தலைவர்,**
**வ/ப - அரச சேவை கூட்டுறவு கடன் வழங்கல் மற்றும் சேமிப்புச் சங்கம்,**
**இல. 19, சவுண்டர்ஸ் பிளேஸ்,**
**கொழும்பு-12.**

---

# விலைமனுக் கோரல்

**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**கேள்வி விலை இலக்கம்: 073/T/2022**

## இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமானநிலையம், இரத்மலானை சிவில் விமானசேவைகள் பயிற்சி நிலையம் மற்றும் அத்திடிய இடைமாறுபாட்டு நிலையத்தின் சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் வழங்குதல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளர் இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமானநிலையம், இரத்மலானை சிவில் விமானசேவைகள் பயிற்சி நிலையம் மற்றும் அத்திடிய இடைமாறுபாட்டு நிலையத்தின் சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் இரண்டு (02) வருட காலத்துக்கு வழங்குவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிறுவனங்களிடமிருநது விலைக்குறிப்பீடுகள் அழைக்கப்படுகின்றன.

இந்த விலைக் கேள்விகள் தொடர்பாக பின்வரும் தகைமைகளைக் கொண்ட விலைக்கேள்வியாளர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியுமாக இருப்பதுடன் இக்குறித்த விலைக்கேள்வியுடன் உரிய ஆவணங்கள் சமர்ப்பிப்பதன் மூலம் தமது தகைமைகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

**விலைக்கேள்வியாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது:**

(அ) இலங்கையில் வியாபாரப் பெயர்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனி அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக இருத்தல்.

(ஆ) விலைக்கேள்வியாளரால் இதே போன்ற ஒத்த சேவையொன்று இக்குறித்த விலைக்கேள்விக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதியாகும்போது திருப்திகரமானதான முறையில் கடந்த (02) வருட காலத்துக்குள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியதுடன் அதன் பெறுமதி மாதமொன்றுக்கு ரூபா 1,500,000.00 அல்லது அதற்கு மேற்பட்ட அளவாக அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) இக்குறித்த விலைக்கேள்வியின் விலைக்கேள்வியாளருக்கு சொந்தமான பதவியணி குறைந்த பட்சம் 30 பேர்களைக் கொண்ட அனுபவம் வாய்ந்த குழுவாக இருக்க வேண்டியதுடன் இந்த விலைக்கேள்வி தொடர்பில் விண்ணப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியாகும்போது கடந்த (02) வருட காலத்துக்குள் காலம் பூராகவும் அக்கம்பனியினால் சுத்திகரிப்பு வேலைகள் இற்றை வரை தொடர்ந்தும் நிறைவேற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்புகள் திருப்பிச் செலுத்தப்படாத ரூபா பத்தாயிரம் (ரூபா 10,000.00) வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன் அதற்காக விலைக்கேள்வியாளரினால் எழுத்து மூலமாக கோரிக்கை சமர்ப்பித்தல ் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் மூலம் 2023.05.15 திகதி முதல் 2023.06.06 திகதி வரை வாரத்தில் வேலை செய்யும் நாட்களில் மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப. 03.00 மணிவரையிலான காலப்பகுதிக்குள் விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக் கொள்ள முடியும். தேவையேற்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல்தொடர் முகாமைத்துவ கிளை அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்த புள்ளி பெட்டியினுள் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும் விலைக் கேள்வியாளர்களின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்துக்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமூகமளித்தும் ஒப்படைத்து விட முடியும். வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் மூலம் வெளியிடப்படுகின்ற விலைக் கேள்விப் படிவத்தின் மூலம் மாத்திரம் இக்குறித்த விலைக்கேள்விக்காக விண்ணப்பிக்க முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2023.06.07 ஆம் திகதி 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக் கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களது அதிகாரம் வழங்கிய பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்வியைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற இலங்கை மத்திய வங்கியால் அங்கிகரீக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் தவிசாளர் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட (ரூபா 500,000.00) பெறுமதி வாய்ந்த வங்கி பிணைமுறி விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

விலைக் கேள்வியுடன் தொடர்புடைய விபரங்களைத் தெளிவுபடுத்தல்கள் 2023.05.18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இரத்மலானை கொழும்பு சர்வதேச விமானநிலையம் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் முகாமையாளர் அலுவலகத்தில் நடைபெறும் அதன்பின் தளத்தைப் பார்வையிடுதல் இடம்பெறும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற வேண்டுமாயின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் தொலைபேசி இலக்கம் 011-2264103/ 011–2264117 அழைப்பதனூடாக அல்லது மின்னஞ்சல் head.scm@airport.lk ஊடாக அல்லது www.airport.lk இணையதளத்தில் பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) தனியார் கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

# இலங்கை மகளிர் இலகு வெற்றி



பங்களாதேஷ் மகளிர் அணிக்கு எதிரான இரண்டாவது டி20 சர்வதேச போட்டியில் இலங்கை மகளிர் அணி 7 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டியது. இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை இலங்கை அணி 1–1 என சமநிலைக்குக் கொண்டுவந்தது.

கொழும்பு, எஸ்.எஸ்.சி மைதானத்தில் நேற்று (11) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பங்களாதேஷ் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது. இதனால் அந்த அணி 18.3 ஓவர்களில் 100 ஓட்டங்களுக்கே சுருண்டது.

ஒருவரும் 20 ஓட்டங்களைக் கூட எட்டாத நிலையில் ஷமிமா சுல்தான் மற்றும் சோபனா மொஸ்தாரி பெற்ற தலா 18 ஓட்டங்களுமே அதிகமாகும். இதன்போது இலங்கை மகளிர் சார்பில் உதேஷா பிரபோதனியுடன் சுகந்திகா குமாரி, இனோகா ரணவீர மற்றும் கவிஷா டில்ஹாரி தலா 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தனர்.

இந்நிலையில் இலகுவான இலக்கை நோக்கி பதிலெடுத்தாட களமிறங்கிய இலங்கை மகளிர் அணி சார்பில் அணித்தலைவி சாமிரி அத்தபத்து ஆரம்பத்தில் அதிரடியாக 6 பௌண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 33 ஓட்டங்களை பெற இலங்கை அணியின் வெற்றி வாய்ப்பு அதிகரித்தது.

தொடர்ந்து வந்த ஹர்ஷிதா சமரவிக்ரம நிதானமாக 42 பந்துகளில் ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களையும் கவிஷா டில்ஹாரி 18 பந்துகளில் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களையும் பெற்று இலங்கை அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

இதன்மூலம் இலங்கை மகளிர் அணி 18.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 101 ஓட்டங்களையும் எட்டியது. இந்தத் தொடரின் முதல் டி20 போட்டியில் பங்களாதேஷ் வெற்றியீட்டிய நிலையில் தொடரை தீர்மானிக்க இரு அணிகளும் இன்று (12) இதே எஸ்.எஸ்.சி மைதானத்தில் மூன்றாவது மற்றும் கடைசி டி20 போட்டியில் ஆடவுள்ளது.

# இலங்கை வந்தார் ஐ.சி.சி பிரதித் தலைவர் க்வாஜா

## அரசியல் தலையீடு பற்றி பேச்சு



இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு பற்றி ஆராய்வதற்காக இலங்கை வந்திருக்கும் சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் பிரதித் தலைவர் இம்ரான் க்வாஜா இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள், விளையாட்டு அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் சந்திப்புகளை நடத்தி வருகிறார்.

இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் தலையீடுகள் பற்றி ஆராய்வதற்கு ஐ.சி.சியினால் நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்டு குழுவின் அங்கத்தவரான இம்ரான் க்வாஜா கடந்த புதன்கிழமை (10) இலங்கை வந்தடைந்தார்.

இந்நிலையில் இந்த விவகாரம் குறித்த உண்மையை கண்டறியும் நோக்கமாகவே அவர் இலங்கை வருகை தந்துள்ளார். இலங்கை வந்த அவர் கடந்த புதனன்று இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் ஷம்மி சில்வா மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன்போது அவர் அரசியல் தலையீட்டினால் இலங்கை கிரிக்கெட் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் போட்டி நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கும் தாக்கங்கள் பற்றி விசாரணை மேற்கொண்டார்.

இம்ரான் க்வாஜா விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் விளையாட்டு அமைச்சு அதிகாரிகளையும் சந்திக்கவிருந்தார். இந்த சந்திப்புத் தொடர்பில் அறிவுறுத்தும் கடிதம் ஒன்று இலங்கை கிரிக்கெட் சபையால் விளையாட்டுத் துறை அமைச்சருக்கு கடந்த மே 8 ஆம் திகதி அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை இளம் அணிக்கு ஜப்பானில் மீண்டும் வெற்றி



இம்டியாஸ் ஸ்லாசாவின் சகலதுறை ஆடத்தின் மூலம் ஜப்பான் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை வளர்ந்துவரும் அணி ஜப்பான் தேசிய கிரிக்கெட் அணியுடனான இரண்டாவது டி20 போட்டியில் 68 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

ஜப்பானின் சானோ விளையாட்டு அரங்கில் நேற்று (11) நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை வளர்ந்துவரும் அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 125 ஓட்டங்களையே பெற்றது. ஷெஹான் பெர்னாண்டோ 30 ஓட்டங்களையும் ஸ்லாசா 27 ஓட்டங்களையும் பெற்றனர். இந்நிலையில் பதிலெடுத்தாடிய ஜப்பான் அணி 16 ஓவர்களில் 50 ஓட்டங்களுக்கே சுருண்டது. ஸ்லாசா 5 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரின் மூன்றாவது ஆட்டம் நாளை (13) இதே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# றோயல் கல்லூரி பெட்மின்டன்: IMC–AIC Campus அனுசரணை



படம்: கயான் புஸ்பிக்க

கொழும்பு றோயல் கல்லூரியின் பெட்மின்டன் சங்கத்தின் பிரதான அனுசரணையாளராக IMC-AIC Campus கைகோர்த்துள்ளது.

இலங்கையின் முதல் நிலையான உயர் கல்வி நிறுவனமான IMC-AIC Campus பாடசாலை மட்டத்தில் விளையாட்டு துறையை மேம்படுத்தும் நோக்கில் கொழும்பு றோயல் கல்லூரியின் பெட்மின்டன் சங்கத்துடன் இணைந்துள்ளது. 1945 ஆண்டு ரோயல் கல்லூரியில் பெட்மின்டன் விளையாட்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தற்போது அந்தக் கல்லூரியன் பிரதான விளையாட்டுகளில் ஒன்றாக மாறியுள்ளது.

கிங்ஸ்பரி ஹோட்டலில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இது தொடர்பான நிகழ்வில் கொழும்பு றோயல் கல்லூரி அதிபர் ஆர்.எம்.எம். ரத்நாயக்க, பெட்மின்டன் சங்கத் தலைவர் வசிங்க சுமனதிலக்க, IMC-AIC Campusap நிறைவேற்று பணிப்பாளர் மற்றும் நிதிப் பணிப்பாளர் டொக்டர் தாரங்கன் பக்தசீலன் உட்பட பிரமுகர்களின் பங்கேற்புடன் அனுசரணைக்கான காசோலை மற்றும் டீசேர்ட் வழங்கப்பட்டது.

# ரொக் சலஞ்சர்ஸ் சம்பியன்



**பாலமுனை விசேட நிருபர்**

பொத்துவில் பசறிச்சேனை நண்பர்கள் வட்டத்தினால் நடாத்தப்பட்ட பொத்துவில் சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பொத்துவில் ரொக் சலஞ்சர்ஸ் அணி சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

பசறிச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை (10) நடைபெற்ற இறுதிப் போட்டியில் தாண்டியடி சுப்பர் ஹிட் அணியை எதிர்கொண்ட ரொக் சலஞ்சர்ஸ் 129 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்த நிலையில் சுப்பர் ஹிட் அணி 51 ஓட்டங்களுக்கே சுருண்டது.

இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக ரொக் சலஞ்சர்ஸ் அணியின் அம்ஜத்தும் தொடரின் சிறப்பாட்டக்காரராக அந்த அணியின் தலைவர் முஹாஸும் தெரிவாகினர்.

# பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த இராணுவம் விரைவு



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து தீவிரம் அடைந்திருக்கும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கு பாகிஸ்தான் அரசு இராணுவத்தை உதவிக்கு அழைத்திருப்பதோடு இம்ரான் கான் கட்சியின் மூத்த தலைவர்களும் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இதுவரை மூன்று கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதோடு அதில் ஒருவர் கடந்த புதனன்று (10) உச்ச நீதிமன்றத்திற்கு வெளியிலும் மற்றும் ஒருவரான கான் அரசில் வெளியுறவு அமைச்சராக இருந்தவர் நேற்றைய (11) தினத்திலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதான நகரங்களில் துணை இராணுவப் படையினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டிருக்கும் நிலையில் அங்கு தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது.

துருப்புகள் நேற்று தலைநகர் இஸ்லாமாபாத்தை அடைந்ததாக அந்த நகர பொலிஸார் தெரிவித்தனர். நாட்டில் கைபேசி தரவுச் சேவைகள் தொடர்ந்து முடக்கப்பட்டிருப்பதோடு பாகிஸ்தானின் நான்கு மாகாணங்களில் இரண்டில் பாடசாலை மற்றும் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.

கிழக்கு நகரான லாஹூரில் உள்ள உயர்மட்ட இராணுவ ஜெனரல் ஒருவரின் வீடு மற்றும் இராணுவ கட்டடங்களை தாக்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏனைய பகுதிகளில் அரச கட்டடங்கள் மற்றும் சொத்துகள் மீதும் தீ வைத்தனர்.

இம்ரான் கான் கடந்த செவ்வாய்க்கிழமை ஊழல் எதிர்ப்பு நிறுவனத்தால் அதிரடியாக கைது செய்யப்பட்டார்.

வன்முறைகளில் இதுவரை ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். கானின் சொந்த மாகாணமாக பஞ்சாபில் 1,650க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவரை எட்டு நாட்கள் தடுப்புக் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதோடு அதன் பின்னர் அவரால் பிணையில் விடுதலை பெற முடியும்.

இம்ரான் கான் பிரதமர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டது தொடக்கம் அவர் மீது 100க்கும் அதிகமான ஊழல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்ரான் கான் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு மூலம் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து வான் தாக்குதல்: 27 பேர் பலி

காசா மீதான இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் தொடரும் நிலையில் ஐந்து பெண்கள் மற்றும் ஐந்து சிறுவர்கள் உட்பட உயிரிழந்த பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 27ஆக உயர்ந்திருப்பதோடு மேலும் 76 பேர் காயமடைந்துள்ளனர்.

காசாவில் இருந்து இஸ்ரேல் மீது நடத்தப்படும் ரொக்கெட் தாக்குதல்களுக்கு பதிலடியாகவே இந்த வான் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக இஸ்ரேல் கூறியிருக்கும் நிலையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கு எகிப்து முயன்று வருகிறது.

காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டு மறுதினமான கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தொடர்ச்சியான தாக்குதல்களில் மேலும் ஏழு பலஸ்தீனர்கள் உயிரிழந்ததாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்தது. புதனன்று கொல்லப்பட்ட நால்வர் பலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணியின் போராளிகளாவர்.

இந்நிலையில் நேற்று (11) அதிகாலை இடம்பெற்ற வான் தாக்குதல்களில் மேலும் ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர். காசாவின் தென் பகுதியில் உள்ள கான் யூனிசிலேயே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் தனது வீட்டின் மீது குண்டு விழுந்ததில் லயான் மதூக் என்ற 10 வயது சிறுமி கொல்லப்பட்டுள்ளார்.

தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் காசா பகுதியில் உள்ள பாடசாலைகள் தனியார் மற்றும் அரச தளங்கள் மூடப்பட்டிருப்பதோடு மக்கள் நடமாட்டமும் குறைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



கடந்த புதன்கிழமை மாலை காசாவில் இருந்து 400க்கும் அதிகமான ரொக்கெட் குண்டுகள் இஸ்ரேலை நோக்கி வீசப்பட்டதாகவும் அவை இடைமறிக்கப்பட்டு அல்லது திறந்த வெளியில் விழுந்ததாகவும் இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இஸ்லாமிய ஜிஹாத் போராட்டக் குழுவை இலக்கு வைத்து இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் அந்தக் குழுவின் ரொக்கெட் ஏவும் படைக்கு பொறுப்பான மூத்த தளபதி ஒருவர் கொல்லப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. அவர் வசித்த தொடர்மாடி குடியிருப்பு மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது அவரது மனைவி மற்றும் குழந்தைகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

தெற்கு எஷ்கோல் பகுதியில் உள்ள இஸ்ரேலியர்கள் மீது நேற்றுக் காலை காசா போராளிகள் சுமார் 10 மோட்டார் குண்டுகளை வீசினர். எனினும் எந்த குண்டும் மக்கள் இருக்கும் பகுதியில் விழவில்லை என உள்ளூர் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இஸ்ரேலின் படை நடவடிக்கை இன்னும் முடியவில்லை என்று இஸ்ரேலிய பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு கடந்த புதன் இரவு எச்சரிக்கை விடுத்திருந்தார். “இதுவரை இல்லாத அளவுக்கு பெரும் பாதிப்பை செலுத்தும் வகையில் இஸ்லாமிய ஜிஹாத் மீது நாம் தாக்குதல் தொடுத்தோம்” என்று குறிப்பிட்டார்.

இஸ்ரேல் அதன் ஆக்கிரமிப்பை அதிகரித்தால் இருண்ட நாட்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்று இஸ்லாமிய ஜிஹாத் எச்சரித்தது.

காசாவின் நிலை பற்றி ஆழ்ந்த கவலை அடைவதாக குறிப்பிட்டிருக்கும் ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ், சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட பொது மக்களின் உயிரிழப்புக்கு கண்டனம் வெளியிட்டிருப்பதோடு அதனை ஏற்க முடியாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கு முயற்சித்து வரும் எகிப்தின் பரிந்துரை ஒன்றை பதிப்பாய்வு செய்து வருவதாக இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் எலி கொஹன் குறிப்பிட்டுள்ளார். இலக்குவைக்கப்பட்ட படுகொலைகளை நிறுத்த இஸ்ரேல் இணங்க வேண்டும் என்று பலஸ்தீன தரப்புகள் வலியுறுத்தியுள்ளன.

பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் மற்றும் இஸ்ரேல் இடையே 49 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட கடந்த ஓகஸ்டில் இடம்பெற்ற மூன்று நாள் போருக்குப் பின்னர் இடம்பெற்றுள்ள மிக கடுமையான மோதலாக இது மாறியுள்ளது.

மறுபுறம் இஸ்ரேல் இராணுவத்தின் சுற்றிவளைப்புத் தேடுதல்களால் ஆக்கிமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் பதற்றம் அதிகரித்துள்ளது. இவ்வாறான தேடுதலில் கடந்த புதனன்று இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த ஆண்டு ஆரம்பித்தது தொடக்கம் இஸ்ரேலிய படையினரால் குறைந்தது 130 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதோடு இதே காலப்பகுதியில் வெவ்வேறு தாக்குதல்களில் குறைந்தது 19 இஸ்ரேலியர்கள் பலியாகினர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# மக்கள் வங்கி

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

## மக்கள் வங்கி - மாத்தறை பிராந்திய தலைமைக் காரியாலயம்

மக்கள் வங்கி மாத்தறை பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் பின்வரும் கிளைகள்/சேவை மையங்களில் 31.12.2021 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 26.05.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைககள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

| | |
|---|---|
| ஏல விற்பனை செய்யப்படும் திகதி | 27.05.2023 |
| ஏல விற்பனை செய்யப்படும் இடம் | மாத்தறை தர்மபால மாவத்தை கிளை |
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | மாத்தறை தர்மபால மாவத்தை, மாத்தறை உயன்வத்தை, கம்புருபிட்டிய, கந்தர, ஹக்மன, டிக்வெல்ல, மொறவக்க, தெனியாய, ஊருபொக்க |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | கொட்டுவேகொட, ககனதுர, கோட்டெகொட, தெய்யந்தர, மிரிஸ்ஸ, ஓபாத, பிடகத்தர, பல்லேகம. |

இந்த ஏல விற்பனையை மறு அறிவிப்பு இன்றி இரத்து செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்து செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல. 123, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை.**
**தொலைபேசி இல. 041-2222822, 041-2222781, 041-2226481**

PEOPLE'S BANK
Pride of the Nation

## பெயர் மாற்றம்

வரிப்பத்தான் சேனை 03ம் பிரிவு மஜிட்புரம் இல. 271/1 இல் வசிக்கும் கணபதிப்பிள்ளை சிவனேசன் (கணவன்) சந்திரன் மேகலாவதி (மனைவி) ஆகிய நாங்கள் புனித இஸ்லாம் மார்க்கத்தை தளுவியுள்ளதால் இன்று முதல் எங்களுடைய பெயரை கணபதிப்பிள்ளை முகம்மது யூசுப் சந்திரன் பாத்திமா செய்னப் என பெயர் மாற்றிக் கொண்டோம். எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரை பயன்படுத்துவோம் எனவும் இலங்கை சனநாயக ஷோசலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**- K.P. முகம்மது யூசுப்**
**- S. பாத்திமா செய்னப்**

**Repeat Your ad For Better Offers**

**இலங்கையில் மொன்ட்ரியல் நெறிமுறையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டம்**

**சுற்றாடல் அமைச்சு**

# பெறுகை அறிவித்தல்

## இலங்கையில் உள்ள தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களை (TVET) தரவேற்றம் செய்வதற்கு குளிர்சாதனம் மற்றும் வளிச்சீராக்கல் (RAC) பயிற்சி உபகரணங்கள் மற்றும் கருவிகளை வழங்குதல்

RAC துறையிலுள்ள TVET நிறுவனங்களை தரவேற்றம் செய்வதற்கு பின்வரும் உருப்படிகளை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கையில் மொன்ட்ரியல் நெறிமுறையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டத்தின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| Line Item | Description of items | | Bid Security (Yes / No) | Line Item | Description of items | | Bid Security (Yes/No) |
|---|---|---|---|---|---|---|---|
| **1** | **Evacuation, Charging and Recovery** | | | **3** | **Measurement Tools** | | |
| 1.1 | Manifold Gauge R-32 | 13 | Yes | 3.1 | Digital clamp - multi meter | 14 | Yes |
| 1.2 | Manifold Gauge R-134a | 10 | Yes | 3.2 | Small digital thermometer (Infrared) | 16 | Yes |
| 1.3 | Manifold Gauge Set For R600a / R290 | 8 | Yes | **4** | **Safety Tools and PPE** | | |
| 1.4 | Two-stage rotary vacuum pump | 9 | Yes | 4.1 | Safety goggles | 100 | No |
| 1.5 | Electronic weighing scale | 10 | Yes | 4.2 | Safety gloves | 100 | No |
| **2** | **Refrigeration Piping Tools** | | | 4.3 | Fire extinguisher (kg) | 17 | No |
| 2.1 | Servicing Toolbox with a handle | 15 | No | 4.4 | Nitrogen Regulator Two Stage | 9 | Yes |
| 2.2 | **General Tools** | | | 4.5 | Oxygen Regulator Two Stage | 8 | Yes |
| 2.2.1 | High Pressure Water Gun | 10 | Yes | **5** | **Auto A/C** | | |
| 2.2.2 | Air Blower | 10 | Yes | 5.1 | UV Leak Detector | 2 | No |
| 2.2.3 | Screw Driver Set(Rubber grip with plastic handle) | 10 | No | 5.2 | Quick Battery charger | 1 | No |
| 2.2.4 | Combination Plier with multi-component grips | 10 | No | 5.3 | Infrared Thermometer | 2 | No |
| 2.2.5 | Long Nose Plier with multi-component grips | 10 | No | 5.4 | Digital Multimeter | 3 | Yes |
| 2.2.6 | Diagonal Cutting Plier with multi-component grips | 10 | No | 5.5 | Analog Multimeter | 2 | No |
| 2.2.7 | Crimping tool | 10 | No | 5.6 | Power spray washing machine | 1 | No |
| 2.2.8 | Spanner | 10 | No | 5.7 | Manifold gauge set(Analog) | 2 | No |
| 2.2.9 | Torque Wrench | 10 | No | 5.8 | Hydraulic Auto A/C Hose Crimping Machine | 1 | No |
| 2.2.10 | Box Spanner Set with Box | 10 | No | 5.9 | Electric Air Blower | 1 | Yes |
| 2.2.11 | Gas welding cutting torch set | 10 | No | 5.10 | Digital Weighing Machine | 1 | Yes |
| 2.3 | Swaging and flaring tools set | 17 | No | 5.11 | Small Box Spanner Set (Socket Set) | 1 | No |
| 2.4 | Piercing Pliers | 17 | No | 5.12 | Coolant Tester | 2 | No |
| 2.5 | Tube Bender 3/8 | 13 | No | 5.13 | Vacuum pump | 2 | Yes |
| 2.6 | Tube Bender 1/4 | 11 | No | | | | |
| 2.7 | Manual Copper tube expander | 13 | No | | | | |
| 2.8 | Tube Cutter Small (3mm to 20mm) | 23 | No | | | | |
| 2.9 | Tube Cutter Medium (3mm to_30mm) | 10 | No | | | | |
| 2.10 | Pen type deburrer | 14 | No | | | | |
| 2.11 | Capillary tube cutter | 20 | No | | | | |

தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக விலைக்கோரல்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, இல. 416/C/1, ரொபட் குணவர்தன மாவத்தை, ''சொபாதம்பியச'', 7ஆம் மாடி, தேசிய ஓசோன் பிரிவு, சுற்றாடல் அமைச்சு, இலங்கையில் மொன்ட்ரியல் நெறிமுறையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பிலக்கம்: 0112034221, 0112034118

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-06-02ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் சுற்றாடல் அமைச்சின் தேசிய ஓசோன் பிரிவிற்கு மீளளிக்கப்படாத 5000.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் செலுத்தியும் மற்றும் இலங்கையில் மொன்ட்ரியல் நெறிமுறையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

விலைமனுக்களை செயற்றிட்டப் பணிப்பாளர், இலங்கையில் மொன்ட்ரியல் நெறிமுறையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டம், தேசிய ஓசோன் பிரிவு, ''சொபாதம்பியச'', 7ஆம் மாடி, இல. 416/C/1, ரொபட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியுடனான விலைமனுக்களை ஒரு கடித உறையின் இட்டு முத்திரைக் குறி பொறித்து, 2023-06-05ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது சுற்றாடல் அமைச்சின் வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பயிற்சி நிலையங்களை தரவேற்றம் செய்வதற்கு RAC பயிற்சி உபகரணங்கள் மற்றும் கருவிகளை வழங்குதல்'' எனத் தயவு செய்து குறிப்பிடவும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிப்படும்.

விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சுற்றாடல் அமைச்சின் வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவின் கூட்ட அறையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேற்கூறப்பட்ட உபகரணங்களில் ஒரு உருப்படி அல்லது வேறு விதமாக பெற்றுக்கொள்வதற்கு பெறுகை நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

அனைத்துத் தீர்மானங்களிலும் செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**செயற்றிட்டப் பெறுகைக் குழு,**
**இலங்கையில் மொன்ட்ரியல் நெறிமுறையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டம்,**
**வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவு,**
**''சொபாதம்பியச'', 7ஆம் மாடி,**
**இல. 416/C/1, ரொபட் குணவர்தன மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

# கேள்விக்கான அழைப்பு

## தென் மாகாண சபை

## மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - ஹம்பாந்தோட்டை

ஹம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை சார்பாக ஹம்பாந்தோட்டை மாவட்ட பெறுகைக் குழுவின் தலைவரால் திறன் உடைய மற்றும் தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்காணும் ஒப்பந்தத்திற்காக வேறுவேறாக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் விநியோகிக்கும் கால எல்லை - 2023.05.15 மு.ப. 09.00 முதல் 2023.06.02 பி.ப. 2.00 வரை

கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைதல் மற்றும் திறத்தல் - 2023.06.05 மு.ப. 10.00 மணிக்கு.

| தொடர் இல | வேலை விபரம் | மதிப்பிடப்பட்ட தொகை (வெட் இன்றி) ரூபா | நிர்மாண காலம் (நாட்கள்) | தேவைப்படும் பதிவு (CIDA) கட்டிடம் | கேள்விப் பிணைப் பெறுமதி (ரு) | கேள்வி ஆவணக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | லுனுகம்வெஹெர சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலககூரை, சீலின் மற்றும் திரிபோஷ களஞ்சியத்தை புதுப்பித்தல் | 4,128,922.69 | 90 | C9,C8 and C7 | 41,000.00 | 3000.00 |
| 2 | காரியமடித்த பிரதேச வைத்தியசாலை வார்ட் இல. 01 மற்றும் 02 கூரையைப் புதுப்பித்தல் | 3,443,514.16 | 60 | C9,C8 and C7 | 34,000.00 | 3000.00 |
| 3 | காரியமடித்த பிரதேச வைத்தியசாலையின் மலசலகூடத்தை புதுப்பித்தல் | 2,081,312.06 | 60 | C9,C8 and C7 | 20,000.00 | 3000.00 |
| 4 | அங்குனுகொல பெலெஸ்ஸ மாவட்ட வைத்தியசாலை வார்ட் இல. 1,2,3,4 மலசலகூட புதுப்பித்தல் | 1,737,079.34 | 60 | C9,C8 | 17,000.00 | 3000.00 |
| 5 | கட்டுவன பிரதேச வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு கட்டிடத்தின் மலசலகூட புதுப்பித்தல் | 1,731,585.57 | 60 | C9,C8 | 17,000.00 | 3000.00 |
| 6 | மித்தெனிய பிரதேச வைத்தியாசலை தடுப்பூசி மற்றும் மருந்துகட்டுதல் அறையை ஒழுங்குபடுத்தல் | 4,038,900.75 | 90 | C9,C8 and C7 | 40,000.00 | 3000.00 |
| 7 | அம்பலந்தொட்ட சுகாதார மருத்துவ அதகாரி அலுவலக மலசலகூடம் மற்றும் பக்கச்சுவரை ஒழுங்குபடுத்தல். | 2,119,911.27 | 60 | C9,C8 and C7 | 21,000.00 | 3000.00 |
| 8 | அம்பலந்தொட்ட பிரதேச வைத்தியசாலை வார்ட் இல. 03 இன் கூரையை பழுதுபார்த்தல். | 3,516,375.74 | 60 | C9,C8 and C7 | 35,000.00 | 3000.00 |
| 9 | சூரியவெவ மாவட்ட வைத்தியசாலை வார்ட் இல.. 03, 04 கூரையை புதுப்பித்தல் | 2,754,957.01 | 60 | C9,C8 and C7 | 27,000.00 | 3000.00 |
| 10 | மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை வாகன கராஜை நிர்மாணித்தல் | 2,681,318.65 | 60 | C9,C8 and C7 | 26,000.00 | 3000.00 |
| 11 | கோனதெனிய மாவட்ட வைத்தியசாலை நோயாளர் காவு வண்டி சாரதி ஓய்வறையை நிர்மாணித்தல் | 3,168,597.24 | 60 | C9,C8 and C7 | 31,000.00 | 3000.00 |
